வில்

புதுமைப்பித்தன் நினைவு மலர்



தொகுப்பு — சிறுகதைப்பித்தன்

பொருளடக்கம்

மலரும் மனமும்	சிறுகதைப்பித்தன், எம். துரைராஜ்	2
போர்வீரன் புதுமைப்பித்தன்	டாக்டர் மு. வ.	4
படிப்பினையாகட்டும்	கே. சி. அருண்	5
பித்தன் சொன்னவை	கு. அழகிரிசாமி	7
புதுமைப்பித்தன் வாழ்க்கையில்	கமலா புதுமைப்பித்தன்	9
அவர் சாகவில்லை	கன்னிக்கண்ணன்	15
எனது தந்தை	செல்வி தினகரி	17
பு. பித்தனின் கவிதையும் கதையும்	நடனம்	19
உடலும் உள்ளமும்	க. கனகசுந்தரம்	21
சிறுகதை மன்னன்	கவிஞர் ஆறுமுகனுர்	23
பித்தனும் புதுமையும்	ந. சிதம்பர சுப்பிரமணியன்	25
அங்கொன்றும் இங்கொன்றும்	மு. அ. லத்தீப்	28
முயற்சி வெல்க	ஆர். எஸ். சிவம்	29
பித்தனும் புகழும்	தே. வீரையா	30
பெருமூச்சு தீரவேண்டும்	செனட்டர் எஸ். பி. எஸ். நாதன்	31
பு. பி. புகழுக்கு காரணம்	ரகுநாதன்	32
இனிய வாழ்த்துக்கள்	சி. வி. குப்புசாமி	35
பு. பி. புகழ் பரவட்டும்	ஏ. எம். மீரான்	36
பு. பி. கதைக்கரு	சி. சு. செல்லப்பா	38
புதுமைதந்த பித்தன்	அ. ரெசுவப்பா	44
நினைவு நீடிக்கட்டும்	வி. டேவிட் எம். பி.	47
பித்தனுக்கு விடுதலை	ஏ. எஸ். அந்தோனிமுத்து	49
பித்தனிடம் பித்தானேன்	சுகி சுப்பிரமணியம்	57
பித்தனின் ஆற்றல்	பாரதி நேசன்	60
ஒருநாள் கழிந்தது	அகிலன்	62
வெற்றியின் ரகசியம்	க. கைலாசபதி	67
வாழ்க்கையும் இலக்கியமும்	மா. செ. மாயதேவன்	70
வாழத்தெரிந்தோர்	தே. நவமணி	73
கவிஞர் நிலை	வே. விவேகானந்தன்	75
வானத்து அமரன்	அ சீனிவாசராகவன்	76
திட்டம் வெற்றி பெறட்டும்	ஜி. பெருமாள்	77

மலரும்... ...மணமும்



எம். துரைராஜ்



சிறுகதைப்பித்தன்

*

எழுத்தாளர் சமுதாயத்துள் தனி வாழ்க்கை நடத்தி, தனி வழி நின்று தனியாக சிந்தித்து தனியாகவே மாண்ட மாமேதை புதுமைப் பித்தனின் நினைவு மலராக வெளிவரும் இம்மலரும், பல வழிகளில் தனித்தன்மையுடையது.

முதலாவதாக, தமிழ்நாட்டில் பிறந்து தமிழ்நாட்டில் வளர்ந்து தமிழ் நாட்டிலேயே மரித்த ஒருவரை, வேற்று நாட்டிலிருந்து மலர் வெளியிட்டு கௌரவிப்பது ஒரு சிறப்பு.

தமிழ் எழுத்தாளர் ஒருவருக்காக, தனிப்பட்டவர்கள் முயன்று மலர் வெளியிட்டு, அதில் கிடைக்கும் தொகையை அந்த எழுத்தாளர் குடும்ப நிதியாக வழங்க முன் வந்துள்ளது இரண்டாவது சிறப்பு.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தறியாத, வெளியீட்டாளர் எம். துரைராஜூம், தொகுப்பாளர் சிறுகதைப்பித்தனும் 250 மைல்கள் இடைவெளியில் இருதுருவங்களாக இருந்துகொண்டு இம்மலரை இவ்வளவு சிறப்போடு வெளிக்கொணர்ந்துள்ளது மூன்ருவது சிறப்பு.

மலருக்கே தனி விசேஷம் தருவது, மேதை புதுமைப்பித்தனின் மகள் செல்வி தினகரி, முதன் முதலாக இம்மலருக்குக் கட்டுரை எழுதி இருப்பது. இதைக் கட்டுரை என்று குறிப்பிடுவதைவிட, தந்தையின்

முகத்தைப் பார்த்தறியாத ஓர் இளம் உள்ளம் கூறும் சோகக்கதை என்றே குறிப்பிடலாம். 'புலிக்குப் பிறந்தது பூனையாகாது' என்பதை நிரூபிக்கும் இக்கட்டுரையின் மூலம், செல்வியை தமிழ் எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்திவைப்பதில் பெருமைப் படுகின்றோம்.

புதுமைப்பித்தன் யார்? தமிழ் இலக்கியத்துக்கு அவர் செய்துள்ள ஒப்பற்ற பணி எத்தகையது என்பதை இதிலுள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் நின்று விளக்குகின்றன.

நேசனில் வெளிவந்த "புதுமைப் பித்தன் பரம்பரை"யில் இடம் பெற்ற பலரும், புதுமைப்பித்தன் படைப்புக்களை நன்கு எடை போடத் தெரிந்த மற்றும் பலருமே மலரில் இடம் பெற்றுள்ளனர். கட்டுரைகள் வழங்கிய இவர்கட்கெல்லாம் எங்களின் மனமார்ந்த நன்றி பல.

மேதையின் குடும்ப வளர்ச்சிக்காக நாங்கள் எடுத்துக்கொண்ட இச் **சிறு முயற்சி**யின் மூலம், எங்களின் **பெரிய எண்ணம்** ஓரளவாவது நிறைவேறுமாயின், அதுவே எங்களின் முயற்சிக்குப்பலன் தருவதாகும். இதற்கு ஆக்கந்தந்த ஆதரவாளர்கள், வாசகர்கள் அனைவருக்கும் எங்களின் உளம் நிறைந்த நன்றிகள்.

பரம்பரையினரிடம் கட்டுரைகள் கேட்டு பலன் கிடைக்காமல் தவித்தபோது தங்களின் இடைவிடாத வேலைகளுக்கிடையே சில கட்டுரைகளை சேகரித்து அனுப்பிய, முன்னாள் நேசன் ஆசிரியர், திரு. கு. அழகிரிசாமி அவர்கட்கும், இரவு பகல்பாராது கட்டுரைகளுக்காக அலைந்து, எண்ணற்ற கடிதங்கள் எழுதி ஊக்கமளித்து வந்த சந்நியாசினித் தங்கை கமலா-விருத்தாசலம் அவர்கட்கும், எங்கள் நன்றி

மலரை அச்சிட்டுத்தந்தது முதல், பலமுறை விளம்பரங்கள் செய்தது வரை, தங்களின் ஒத்துழைப்பை முகங்கோணாது காட்டி வந்த நேசன் நிர்வாகி திரு மு. சேதுராமன் அவர்களையும், நேசன் ஆசிரியர் குழுவினரையும் நாங்கள் மறப்பதற்கில்லை.

மற்றும் இரவில் கண்விழித்து அச்சுப்பிழைகள் பார்த்துக்கொடுத்து பெயரை வெளியிட்டுக்கொள்ள விரும்பாத ஒரு பெண்ணுள்ளமும் எங்கள் நன்றிக்கு உரியது.

விளம்பரங்கள், வாசகர்கள் சேர்த்துக்கொடுத்து அவ்வப்பொழுது ஆக்கமொழிகள் கூறிவந்த அனைவரையும் நாங்கள் மறப்போமா?

மனத்தில் உள்ளதைச் சொன்னோம். இனி மலரின் மணத்தைப் பற்றி வாசகர்கள்தாமே சொல்லவேண்டும்?

வணக்கம்.

தொகுப்பாளன்: **சிறுகதைப்பித்தன்**

வெளியீட்டாளன்: **எம். துரைராஜ்**

போர்வீரன்

புதுமைப்பித்தன்

டாக்டர் மு.வரதராசனார்

''உலகம் ஒரு சந்தை'' என்று கூறப்படுவது உண்மை-தான்! இந்த உலகத்தில் பிறந்து வாழும் சிலர் காசு சேர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். வேறு சிலர் அவர்களைக் 'காக்கை' பிடிப்பதில் கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இந்த இரு வகையார் மட்டுமே உலகச் சந்தையில் வறுமை நெருங்காமல் வாழ வல்லவர். ஆனால், இவர்களின் கொடுமைகளுக்கு ஆளாகும் ஏழை மக்கள் துன்புற்று வாடுகிறார்கள். இந்தக் கொடுமைகளைக் கண்டு ஆத்திரம் கொள்ளும் உணர்ச்சி மிக்க கலைஞர்கள் இடித்துரைத்தும் பழித்துப் பேசியும் கொடுமைகளை எடுத்துக்காட்டுகிறார்கள். பயன் என்ன? இந்தக் கலைஞர்களுக்கு ஏழை எளியவர்களின் சிறு கூட்டம் மட்டும் சேர்கிறது. அதனால் இவர்களின் வயிறு வாடுகிறது குடும்பம் கலங்குகிறது.

கொடுமையைக்கண்டு கோதிக்கும் கலைஞர்கள் உலகச் சந்தையில் தாம் வந்த வேலையை மறந்து விடுகிறார்கள். தாய்மை உள்ளம் பெற்று, தன்னலத்தைத் துறந்து மற்றவர்களுக்காக உருகுகிறார்கள். தங்கள் கலையைப் பயன்படுத்திப் போர் செய்ய முனைகிறார்கள்.

வயிறு வாடியது

இந்தப் போர்ப் படையைச் சேர்ந்த புதுமைப்பித்தன், காக்கைப் பிடித்து காசு சேர்க்கும் கலை தெரியாதவர். காசு இருப்பவரைப் புகழ்ந்தோ, அவர் மகிழும் வகையில் பொழுது போக்குக்காக எழுதியோ வாழ இவருக்குத் தெரியவில்லை. அதனால் என்ன பயன் கண்டார்? சந்தை இவரைக் கைவிட்டது. வயிற்றை வாடப் போட்டது. ஒரு குடும்பத்தையும் கலங்கித் தவிக்கவிட்டது.



''உன் மக்களுக்காக பாடுபடுகிறாய், உருகுகிறாய். உன் வயிறு வாடுகிறது'' என்று ஒரு தாய்க்கு என்ன சொன்னாலும் பயன்படாது குழந்தைகளுக்கென்றே வாழப்பிறந்தவள் தாய் குழந்தைகளுக்காகவே போராடப் பிறந்தவள் தாய்.

எழுத்தாளனும் அப்படியே

சிறந்த எழுத்தாளனும் அப்படித்தான். அவன் திக்கற்றவர்க்காக, கொடுமை செய்யப்பட்டவர்க்காக, புறக்கணிக்கப்பட்டவர்க்காகவென்றே சொல்லேர் உழவனாகப் பிறந்து விட்டவன் பிறருக்காகவே வாழ்ந்து, தன்னை அழித்துக்கொள்ளத் துணிந்து விட்ட கலைஞன் அவன்

இத்தகைய வாழ்க்கையை ஏற்றுக்கொண்ட புதுமைப்பித்தன், சிறுகதைக் கலையைத் தன் போர்க் கருவியாகக்கொண்டு சமுதாயக் கொடும் பேய்களுடன் போராடினார். ஆனால், அவர் முற்கூட்டியே எதையாவது எதிர்பார்த்து ஏமாந்தாரா? இல்லை. இந்தச் சமுதாயச் சந்தையானது தன்னை புறக்கணிக்கும் என்பதை நன்றாக உணர்ந்துதான் போராடினார்.

அணிந்துரை

அவர் வாழ்வு படிப்பினையாகட்டும்

"அறம், பொருள், இன்பம் இம்மூன்றில் நடுவணதெய்த இருதலையும் எய்தும்" என்பது பொய்யாமொழி.

நடுவண தெய்தாதான் எய்தும் துயர் 'உலைப்பெய் அடுவது'க்கு ஒப்பான தென்பதும் தெரிந்ததே,

சிறந்த தமிழ் எழுத்தாளர்களில் நடுவன எய்தி' இன்பம் பெற்றோரை விரல் விட்டே எண்ணி விடலாம். அஃதின்றியே அறம் காப்பதோ, அவர்களுடன் உடன் பிறந்த குணமாகும், மரபாகும்.

இதற்கு அரியதொரு உதாரணம் மறைந்த மேதை புதுமைப்பித்தன் அவர்களே.

தமிழ்கூறும் நல்லுலகத்தின்கண் வைகையை எதிர்த்த ஏடுபோன்று 'பழமை' என்னும் பெயரில், 'பழக்கம்' என்னும் திரையில் மறைந்து மலிந்து கிடந்த பத்தாம் பசலிக் கருத்துகளை அவர்கடமையின் பெயரால் கண்ணியத்தின் துணையுடன் தமது இறுதிநாள் வரை எதிர்த்துப் போராடினர்.

மதி இருந்தும், 'விதி'யால் வஞ்சிக்கப் பட்டார் .... 'விதி' என்னும் சொல்லுக்கு அவரது அகராதியில் பொருள் யாதென் பதைக் கண்டறிய விரும்புவோர் தமது கண்ணீரில் பேனாவைத் தோய்த்து திருமதி கமலா புதுமைப்பித்தன் அவர்கள் எழுதி யுள்ள உருக்கமான கட்டுரையைப் படிக்கத் தவறலாகாது.

'பித்தா பிறை சூடி' என்று நிந்தாஸ் துதியாக இறைவனை ஏத்தினர் சுந்தரர். புகழ் என்ற பிறையைச் சூடி அதைப் போன்றே தானுமொரு பித்தனுக்ப் போற்றப் பட்ட மேதைக்கு தமது வாழ்நாளில் பொருளை ஈட்டியும்கூட அதன் பலன்களை அனுபவிக்க இல்லாமற் போனது ஏனென் பதைத் திருமதி விளக்கக் கேட்டு எவரும் கண்ணிர் சிந்தாமலிருக்கமுடியாது.

அமெரிக்கா சென்று அறிவுரை பல நிகழ்த் திய விவேகாநந்த அடிகளாரை, "உண வருந்தினீர்களா" என்று கேட்கக்கூட நேரமின்றித் தத்துவ விசாரணையிலேயே அல்லும் பகலும் ஈடுபடுத்திய "நண்பர்கள்" பலர். அதைப் போலவே, பித்தனின் இலக்கிய மேதா விலாசத்தில் சொக்கிப் போன நண்பர்களில் பலர் தாம் செய்யாமல் கைவிட்ட திருப்பணியை நினைவு மலரின் பதிப்பாளர் ஏற்றுக் கொண்டுள்ளது குறிப் பிடத்தக்கது.

தமிழ் எழுத்தாளர்களில் 'கர்ம வீரர்கள்' ஆகத் துடிக்கும் அனைவர்க்கும் புதுமைப் பித்தனின் வாழ்வு ஒரு மாறுத படிப்பினை யாகட்டும்.

அவரது நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வாய்ப்புக் கிடைத்ததை இன்று ஒரு பேறுகக் கருதுபவர்கள் அவரது கதி வழித்தோன்றல் களுக்கேனும் ஏற்படாதிருக்க ஆவன செய்ய முன் வருவார்களா?

இத் துறையில் இந்த 'நினைவு மலர்' ஓரளவுக்கேனும் வெற்றியடைய முடிந்தால், புதுமைப் பித்தனின் தியாகம் வீண்போக வில்லை என்பது திண்ணம்.

கே. சி. அருண்

[ஆசிரியர், தமிழ் நேசன்]

சேவையே எங்கள் லட்சியம்

கல்வி ஒன்றே

அழியாச் செல்வம்!

HIS MASTER'S VOICE

இசையை உங்கள் இல்லங்களில் கேட்டு இன்புற
புதிய இசைத்தட்டுக்களைக் கேட்டு வாங்குங்கள்.

K. S. MOHAMED THAYOOB & Co.

14, BATU ROAD,
Kuala Lumpur.
TLE: 82833

29, CHINA STREET,
Penang.
TLE: 67634

மலாயாவில் புதுமைப்பித்தன் நினைவு மலர் வெளியீடு சகல
வெற்றிகளையும்பெற்று சிறக்க வாழ்த்துகிறோம்!



கே. கே. சாமி

(நகரின் பிரபல கண்ட்ராக்டர்)

25, டாமன் சாரா ரோட், கோலாலம்பூர்.

போன்: 84027-69220

ரஸ்தா வேலைகள், அல்லூர் கட்டுதல், தளவேலைகள்,
புல் வேலைகள் ஆகியவைகளுக்கான அரசாங்கப்
பதிவு பெற்ற கண்ட்ராக்டர்.

கண்ணாடி பதித்த அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த கல்யாண மணவறைகள் குறைந்த வாடகையில் உங்கள் வீட்டிலேயே நிர்மாணித்துக் கொடுக்கப்படும்.

குறித்த காலத்தில் கச்சிதமான முறையில் ஒப்பந்தப்படி வேலைகள்
முடித்துக்கொடுக்கப்படும்.

கங்கா ஸ்டோர்

ஜெனரல் மெர்ச்செண்ட்ஸ், மளிகை, ஜவுளி, வியாபாரம்

209, ஈப்போ ரோட், கோலாலம்பூர். டெலிபோன் 69220



பித்தன் சொன்னவை

★

கு. அழகிரிசாமி

புதுமைப்பித்தனின் கதைகளை ரசிக்காதவர்களுங்கூட அவருடன் பழகி இருக்கிறார்கள். இதற்குக்காரணம் அவருடைய பேச்சுத்தான். அவரோடு பழகிய யாவரும் அவருடைய பேச்சை ரசிக்காமல் இருந்ததில்லை. பேச்சை முடித்துக்கொண்டு சீக்கிரம் வீடுதிரும்ப நினைத்ததுமில்லை. புதுமைப்பித்தனோடு பழகும் சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றவர்கள் அனைவரும் பாக்கியவான்கள். இதை அவர்களும் ஒப்புக்கொள்வார்கள்.

கால் நூற்றாண்டு காலத்துக்கும் அதிகமாகவே அவருடன் பழகிய பல எழுத்தாளர்கள் அவர் கூறிய எத்தனையோ ரசமான விஷயங்களை நமக்குத் தெரிவிக்கக்கூடும். நான் அவரோடு பழகிய காலங்களில், என்னோடும் மற்ற நண்பர்களோடும் பேசிக் கொண்டிருந்த போது அவர் வாயிலிருந்து வெளிவந்த அனேக ரசமான விஷயங்களை, என் நண்பரும், என்னைப் புதுமைப்பித்தனுக்கு அறிமுகப்படுத்திவைத்தவருமான திரு. ரகுநாதன், ஏற்கனவே தாம் எழுதிய புதுமைப்பித்தன் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். அதில் தப்பிய சில துணுக்குகளை மட்டும் என்னுடைய முன்னுரை பின்னுரைகளுடன் கீழே கொடுத்திருக்கிறேன்.

\+ \+ \+

அப்பொழுது குறிப்பிட்ட பெயருடைய ஓர் அரசியல் வாரப்பத்திரிகை முரட்டுத்தனமான பாஷையில் தமிழ் மக்களுக்குத் தேசிய உணர்ச்சியை ஊட்டிக்கொண்டு பிரபலமாகவும் நடைபெற்று வந்தது. அதன் ஆசிரியர் திடீரென்று நோய்வாய்ப்பட்டுப் படுத்துவிட்டார். உதவி ஆசிரியர்கள் இல்லை. அடுத்த வாரம் பத்திரிகை வெளிவருவது எப்படி என்ற பிரச்னை எழுந்தது. புதுமைப்பித்தனுக்கு அந்த ஆசிரியர் நெருங்கிய நண்பர். ஆகவே புதுமைப்பித்தனின் உதவியை நாடினார். புதுமைப்பித்தன் என்னை அந்தப்பத்திரிகையின் காரியாலயத்துக்கு வரச்சொல்லி ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வைத்துவிட்டார். அவருடைய பேச்சைத்தட்ட முடியாமலும், ஆசிரியர், நான் எதிர்பார்த்ததற்கு மாறாக, இன்மொழிகள் பேசும் இனிய குணம் படைத்தவராகவும், பரம சாதுவாகவும் இருப்பதைக் கண்டேன். மாத வருமானத்தில் நாற்பது ரூபாய் உயருவதை உத்தேசித்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். ஆசிரியரிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்த பிறகு "என்னை இப்படிக் கொண்டுபோய் மாட்டிவைத்துவிட்டீர்களே? நானோ இலக்கிய முயற்சியில் ஈடுபட்டிருப்பவன். இதுவோ அரசியல் பத்திரிகை. அதுவும் வீரப்

பத்திரிகை. அதன் பாஷையும் தனி தினுசாக இருக்கிறது. அந்தப் பாஷையில் எழுதாவிட்டால் பத்திரிகை விற்காது. நான் அந்த மாதிரி எழுதிவந்தால், அப்புறம் கதை கட்டுரைகள் எழுத முடியாமல் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறது'' என்றேன்.

''ஆசிரியர் மிக உயர்ந்த மனிதர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு உயிரைக்கொடுத்துக் கூட உதவி புரியவேண்டியது என்னுடைய கடமை. எனக்காக நீங்கள் கொஞ்ச நாளைக்குப் பருத்திக்கொட்டை - தின்றுதான் ஆகவேண்டும். இரண்டொரு மாதங்களில் உங்களுக்கு விடுதலை அளித்து, இலக்கியப் பத்திரிகை ஒன்றில் உட்காரவைத்து விடுகிறேன்'' என்றார் புதுமைப்பித்தன்.

''அதுவரையில் இந்த அரசியல் எழுத்தை எழுதத்தான் வேண்டுமென்கிறீர்கள் இல்லையா?''

உடனே புதுமைப்பித்தன் சொன்னார்: ''உங்களை யாரையா பேனுவால் எழுதச் சொன்னது?. பேசாமல் **முழங்கையால் எழுதுங்கள் ஐயா**'' என்றார்!

\+ \+ \+ \+ \+

கதாசிரியரல்லாத ஓர் நண்பர் வீட்டில், அந்த நண்பர், புதுமைப்பித்தன், ரகுநாதன், நான், கதாசிரியரல்லாத வேறு யாரோ ஒருவர்—இத்தனை பேரும் பேசிகொண்டிருந்தோம். பேச்சின் நடுவே புதுமைப்பித்தன் சொன்னார் ''தமிழ்நாட்டில் இன்று யாருக்கு ஐயா கதை எழுதவருகிறது. நம் மூன்று பேரைத்தவிர்த்து?''

அரை நிமிஷம் மௌனமாக இருந்தார். பிறகு ''கடகட''வென்று சிரித்துக்கொண்டு'' நம் மூன்று பேர் என்று தாட்சண்யத்துக்காகத்தான் சொன்னேன். **என்னைத் தவிர்த்து யார் கதை எழுதுகிறார்கள்?**'' என்று கேட்டார்.

எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

\+ \+ \+ \+ \+

ஒரு காபி ஹோட்டல்-புதுமைப்பித்தனுக்கு முன் பாதாம் அல்வா தட்டு

''இது உண்மையில் பாதாம் அல்வாதானு' புதுமைப்பித்தனின் பதில்:- **மக்களைப் போல்வர் கயவர்**''

\+ \+ \+ \+ \+

''பிரம்ம ராட்சஸ்'' என்ற உங்கள் கதையின் மூலக்கருத்து என்ன?''

''ஒன்றும் கிடையாது. வார்த்தைகளை வைத்து விளையாடி, வாசகர்களை பிரமிக்க வைக்க முயன்றேன். அதில் வெற்றியும் பெற்று விட்டேன்.'' என்றார் புதுமைப்பித்தன்.

அவர் இந்த மாதிரி விளையாடி இருக்கும் கதைகள் இன்னும் இரண்டொன்று இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது.

\+ \+ \+ \+ \+

இன்ன பத்திரிகை நின்று விட்டதாமே?

அது தன் ஆயுளில் செய்த ஒரே நல்ல காரியம் அதுதான். —புதுமைப்பித்தன்.

\+ \+ \+ \+ \+

அழுகணிச் சித்தரைப் பற்றி ஒரு நாள் பேச்சு வந்தது

வாழைப்பழம் தின்றால் வாய் நோகும் என்று சொல்லி, தாழைப்பழம் தின்று தாழ்வெனக்கு வந்ததடி ''என்று பாடி இருக்கிறான். தாழைப்பழம் என்பது வாழைப்பழம் போலவே இருக்கும். ஆனால் கறுப்பாக இருக்கும். அதைச் சாப்பிட்டால், வெகு நாட்களுக்குப்

(தொடர்ச்சி 78ம் பக்கம் பார்க்கவும்)

புதுமைப்பித்தன் வாழ்க்கையில்...

கமலா புதுமைப்பித்தன்

புதுமைப்பித்தனைப்பற்றி ஏதும் எழுதுவதென்றால், எதை எழுதுவது எதைத்தள்ளுவது என்று புரியவில்லை. அவருடைய அன்றாட வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் எழுதிக் கொண்டேபோனால் அதுவே பெரிய புத்தகமாகிவிடும். ஆகையால், அவர் வாழ்நாளில் நிகழ்ந்த சில சம்பவங்களை மட்டும் இங்கே குறிப்பிட எண்ணுகிறேன்.

1948 மே மாதம் முதல் வாரத்தில் ஒரு நாள் "தந்தி தந்தி" என்று வாசல் கதவைத்தட்டும் சத்தத்தில் திடுக்கிட்டு எழுந்து கதவைத் திறந்தேன். "எங்கிருந்து?" என்று கூறிக் கொண்டே தந்தியைக் கையில் வாங்கினேன். என் உடம்பு நடுங்கிக்கொண்டிருந்தது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு தந்தியைப் பிரித்துப் படித்தேன். அவர் அன்று மாலை வண்டியில் வருவதாக எழுதியிருந்தது. என் மனம் "அப்பாடா" என்று சொல்லிக் கொண்டது.

கமலா புதுமைப் பித்தன்

சாயங்காலம் ரயில் வருதற்குள் மனம் பட்டபாடு சொல்லுந்தரமன்று. நேற்று வரை இருந்த பொறுமை எங்கு போயிற்றோ. எட்டுநாற்பதுக்குவரவேண்டிய வண்டிஒன்பது இருபதுக்குத்தான் வந்து சேர்ந்தது. அண்ணா ஸ்டேஷனுக்குப் போயிருந்தார். நான் வெளி வராந்தாவில் நின்று கொண்டு தெருவில் வரும் வண்டிகளை ஒவ்வொன்றாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியாக ஒரு கார் வந்து வாசலில் நின்றது அதிலிருந்து கையில் கம்பை ஊன்றிக்கொண்டு ஒருவர் இறங்கினார். அது அவர்தான் "ஐயோ!" என்று வாய்விட்டுக் கத்திவிட்டேன். நாலு பேர் அறியும்படி துக்கப்படுவதோ சந்தோஷப்படுவதோ எனக்குப் பிடிக்காது. கூடுமான வரை மனத்திலேயே அடக்கிக் கொள்வேன். அன்று அவரைப் பார்த்ததும் என்னையும் மீறி கத்திவிட்டேன்.

ஏற்கனவே ஒற்றை நாடியான அவர், நோயின் கொடுமையால் ஆளே உருமாறிப் போய் இருந்தார். கைத்தாங்கலாக வந்து படுக்கையில் உட்கார்ந்தார்.

எப்படி தனிமையாக இந்த ரயில் பிரயாணத்தை மேற்கொண்டீர்கள்"? என்று கேட்டேன்.

"இரு சொல்கிறேன்" என்று சாடையால் பதில் சொன்னார். வாய் பேசினாலும், வார்த்தைகள் வெளிவரவில்லை. அத்தனை பலவீனம்.

அவர் வருவதறிந்து காப்பி சாப்பாடு எல்லாம் தயாராகவே வைத்திருந்தோம். முதலில் காப்பி கொடுத்தேன். வாங்கி சாப்பிட்டுக் கொண்டே, "இன்னைக்குத் தாண்டா நல்ல காப்பி கெடச்சுது" என்று மெள்ள சொன்னார். இவ்வளவு வேதனையிலும் துன்பத்திலும் "ஊர் வந்து சேர்ந்து விட்டோம்" என்னும் மகிழ்ச்சியும் திருப்தியும் அவர் முகத்தில் பிரதிபலித்தன. இவ்வளவு பயங்கர நிலையில் வருவார் என்று யாருமே எதிர்பாராததனால் நோயின் கொடுமையும், தோற்றமும் வீட்டில் எல்லோரையும் திடுக்கிடச் செய்தன.

× × × ×

பூனாவிலிருந்து நான்கைந்து மாதத்திற்கு முன்பு அவர் எழுதிய கடிதம் ஒன்றில், "நான் இன்னும் இரண்டொரு மாதங்களில் வேலையை முடித்துக்கொண்டு அவ்விடம் வந்து சேருவேன். கொஞ்ச நாட்களாக உடம்பு குணமில்லை. இங்கே வேலைத் திட்டங்கள் அடிக்கடி மாறுகின்றன. அதனால் என் வார்த்தைகள் பொய்யாகின்றன. உன்னுடைய சமீபத்திய கடிதம் வந்த பிறகு, பதில் எழுதாமல் இருந்ததற்குக் காரணம் உண்டு. நான் பயந்தேன். உன்னை பயப்படவைக்கவிரும்பவில்லை. அதனால் என்ன செய்வது என்று தத்தளித்து வந்தேன். நீ பயந்து விடுவாய் என்று, உடம்பு நோய் என்னவென்று சொல்லத் தயங்கினேன். இங்குள்ள பெரிய டாக்டர் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்துவிட்டு எனக்கு டி. பி. என்று சொல்லி விட்டார். தினம் காய்ச்சல் வருகிறது. இருமல் அதிகம். இரவில் தூக்கம் கிடையாது. மாடிப்படி ஏறினால் சோர்வு. மருந்து, சாப்பாடு முதலியவற்றால் சமாளித்து வருகிறேன். மூன்று மாத ஓய்வோடு மருந்து சாப்பிட்டால் நிச்சயம் குணம் கிடைக்குமென்கிறார். கவலைப் படாதே. இதைச் சொல்லத் தயங்கியதால் தான் இந்த மௌனம். நோயை சற்று குணப்படுத்திக்கொண்டு அவ்விடம் வரலாமென்று இருந்தேன். அதோடு வேலையையும் முடித்துக்கொண்டு கையில் பணத்துடன் வரலாமென்று எதிர்பார்த்தேன். பலன்? என்னைப் படுக்கையில் கிடத்திவிட்டது. கையில் பணம் கொடுத்தால் ஓடிவிடுவேன் என்னும் பயம் அவர்களுக்கு. இந்த நிலையில் எந்த முடிவுக்கு வருவது என்று திண்டாடுகிறேன். எதற்கும், நீ கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. கூடிய சீக்கிரம் நான் வந்து சேருகிறேன். நான் அங்கே வந்தாலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்." தொத்துநோய். எவ்வளவு சீக்கிரம் உன்னிடம் வந்து விட வேண்டுமென்று ஆசைப்பட்டும் விதி என்னை எட்டவே வைக்கவிரும்புகிறது" என்றிருந்த கடிதத்தால் மனம் இடிந்து போய், ஒவ்வொரு நாளும் அவர் வரவை எதிர்பார்த்திருந்தபோது அந்தத் தந்தி கொஞ்சநேரம் என் மனதை நிலைகுலையச் செய்துவிட்டது.

அவர் வந்தார். மறுநாள் டாக்டரிடம் போனோம். "நோய் முற்றிவிட்டது. நாகர் கோவில் போய் தங்குங்கள். விஷயம் தெரிந்தவராக இருந்தும் ஆரம்பத்திலேயே கவனிக்காமல் இருந்துவிட்டீர்களே" என்று சொல்லி விட்டார்.

நாகர் கோவிலைவிட பெங்களூர் தேவலை என்றார்கள் சிலர். அங்கு சென்றார். அங்கும் டாக்டர் பரிசோதித்துவிட்டு "இங்கிலீஷ் வைத்தியத்தில் இனிமேல் பயனில்லை. சொந்த ஊர் போய் கடவுள் தலையில் பாரத்தைப் போட்டுவிட்டு ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டார். மறுபடியும் திருவனந்தபுரம் வந்து சேர்ந்தார்.

பிரபல சித்த வைத்தியர் ஒருவரை அழைத்து வந்து காண்பித்தோம். "நோய் பயங்கர நிலையில் இருக்கிறது. ரூபாய் 2000. வேண்டுமென்"றார். கையிலோ தம்படி கிடையாது. "சரி, கட்டாயம் குணம் கிடைக்குமென்றால் சிகிச்சையை தொடங்குங்கள். குணம் கிடைத்து எழுந்து நடமாடத் தொடங்கினால், நீங்கள் கேட்ட ரூபாய் தருகிறேன் என்றேன். மறுநாளிலிருந்து சிகிச்சை ஆரம்பமாயிற்று. முதலில் சிறிது குணம் தெரிந்தது. சிலரிடம் கடன் வாங்கி மருந்துச்செலவுக்கு முன் பணம் கொடுத்தேன்.

இந்த நிலையில் வந்த அவர், கஷ்டப்படவில்லை என்று சிலர் தப்பாக நினைத்தார்கள். அவர் சிறிய தகப்பனார் "பாகவதர் உனக்கு பத்தாயிரம் கொடுத்ததாகக் கேள்வி. அதை ஏதாவது நிலத்தில் போடு" என்று எழுதியிருந்தார். விசித்திரமான மனிதர்கள்!

× × × ×

இலக்கியப்பணி ஒன்றையே நம்பி வாழ்க்கை நடத்துவது கஷ்டமென்பதை நிரூ

பித்தவர்கள் கு. ப. ரா.வும், புதுமைப்பித்தனுந்தான். நினைந்து ஆண்டுகளை எழுத்திலேயே கழித்து தீராத நோயையும், மாறாத வறுமையையுந்தான் சம்பாதித்தார் புதுமைப்பித்தன். "இலக்கியம் பணக்காரர்களின் பொழுதுபோக்கு. இலக்கியத்தை மட்டும் தொழிலாகக் கொண்டால் அது அவனைக் கொன்றுவிடும்" என்று அவர் சொல்வதுண்டு. ஆனால் அந்த இலக்கியமே அவரைக்கடைசியில் கொன்று தீர்த்தது.

அவர் எழுத்தைக் கண்டு அன்று ஏளனம் செய்த நண்பர்கள், இன்று அவரது இலக்கியப்படைப்புக்களைக் கண்டு பாராட்டுகின்றனர். ஒரு சமயத்தில் அவரது கதைகளைக் கண்டு மிரண்டு ஓடிய பத்திரிகைகள், பிறிதொரு சமயத்தில் "எதுவேண்டுமானாலும் எழுதுங்கள்" என்று இடங்கொடுத்தன.

ஒரு சமயம் அவர் கதைகளில் ஒன்றைப் படித்துவிட்டு நான் கூட "ஏன் இப்படி எல்லாம் எழுதுகிறீர்கள்" என்றேன். ஒரு எழுத்தாளன் பேனாவுக்கு எதையெல்லாம் எழுதஉரிமை உண்டு. தைரியமாக பிரசுரிக்கும் பத்திரிகைகள் பிரசுரிக்கட்டும். இல்லாவிட்டால் நானே ஒரு காலத்தில் அவைகளை பிரசுரித்துக் கொள்கிறேன்." என்றார்.

× × × ×

அவர் மனம் வஜ்ஜிரம் பாய்ந்தது. எவ்வளவு துன்பங்கள் கரை தட்டிப்புரண்டாலும் சிறிதளவு கூட வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார். சகிக்க முடியாத துன்பத்தில் கூட சிரிப்பைத்தான் அவரிடம் காண முடியும்.

அவர் கதைகளை சாதாரண வாசகர்கள் புரிந்து கொள்ளமுடியாது. எனக்குப் புரியாத சில கதைகளை அவரே எனக்குப் படித்துக் காட்டுவார். அதில் அடங்கிக் கிடக்கும் கருத்துக்களையும் விளக்குவார். பிறகு, "எப்படி இருக்கிறது" என்பார். நாள் ஆக ஆக அவர் கதைகளை நானே படித்து புரிந்துகொள்ளக் கூடிய திறமை பெற்றேன். என்னையும் எழுதத்தூண்டுவார். அவர் எழுதும் ஒவ்வொரு கடிதங்களும் ஒவ்வொரு காவியம் என்றே சொல்லவேண்டும்.

அவர் கடிதங்களைப் படிக்கும் பொழுது, அவர் பக்கத்தில் இருப்பதுபோலவே உணர்ச்சி தோன்றும். அவர் கடிதங்களுக்கு பதில் எழுதுவதிலிருந்தே நானு கதைகள் எழுதிப் பழக்கப்பட்டேன்.

ஒருமுறை பிரபல பத்திரிகைக்காக சில கதைகளை எழுதி அப்பத்திரிகை ஆசிரியரிடம் சேர்த்தார். ஆசிரியர் கதைகளின் தலைப்பை மட்டும் பார்த்தாரா, அல்லது கதைகளைப் படித்துப் பார்த்தாரா, என்பது தெரியாது. மறுநாள் புதுமைப்பித்தனைச் சந்தித்தபோது "சார்! என் பத்திரிகை சாதாரண வாசகர்களுக்குத்தான். அதிலும் பெரும்பான்மையாக பெண்களே விரும்பிப் படிக்கும் பத்திரிகை. அதில் உங்களைப் போன்றவர்களுடைய கதைகளை வெளியிட்டால் வாசகர்கள் திணறிப் போவார்கள்: அவர்களுக்கு இம்மாதிரி கதைகள் புரியவே புரியாது." என்று மதிப்பாகச் சொல்லி கதைகளை திரும்பக் கொடுத்துவிட்டார்.

அவர் எழுதும் கதைகளின் தலைப்புக்களைப் பார்க்கும்பொழுதே வாசகர்கள் விழிப்பார்கள். "பிரம்ம ராட்சஸ்", "சிற்பியின் நகரம்", "காலனும் கிழவியும்," "கட்டில் பேசுகிறது," போன்ற தலைப்புகள் விழிப்பைத்தானே உண்டாக்கும். ஒவ்வொரு கதைக்கும் விளக்கவுரை கொடுப்பது முடியுமா? இந்த முறையில் வளர்ந்த அவருடைய படைப்புத் தொழிலைக்கண்டு, பயந்து போன எத்தனையோ வாசகர்கள், ஆசிரியர்கள் எல்லாம் அவரைக் கைகுலுக்கி எங்கள் ஒவ்வொரு இதழுக்கும் உங்கள் கதைகளை எதிர்பார்க்கிறோம் என்று கேட்கும் காலமும் விரைந்து வந்தது.

நினைவுடன் எழுதி முடித்துவிடவும் செய்வார். கேட்கிறபோது எழுதித்தராமல் சோம்பேறித்தனத்துக்கு ஆட்பட்டும் கிடப்பார். பதிப்பகத்திலிருந்து ஆள்வரும். முன் பகுதி அச்சாகி இருக்கும். பின் பகுதியை இப்பொழுதுதான் உருவாக்கிக் கொண்டிருப்டிருப்பார். இம்மாதிரி நிகழ்ந்த ஒரு சமயத்தில் கைம் பெண்ணாகக் காட்சியளித்த ஒருத்தி, பிற்பகுதியில் சுமங்கலியாக நம் முன் தோன்றுகிறாள். அச்சான புத்தகத்தில் கதையைப் படித்த நான், "என்ன கதை இப்படி ஒரேயடியாக பல்டியடிக்கிறதே?" என்று கேட்டேன். "என் வாசகர்களைச் சிறிது நேரம் திணர அடித்தேனே தவிர, ஒரு பெண்ணின் வாழ்க்கையை பாழாக்கிவிடவில்லையே" என்றார் அவர்.

"இருந்தாலும் தவறு தானே" என்றேன் நான்.

"சே! உன் நினைவோடு நான் கதை எழுத உட்கார்ந்தால் அந்தக் கதையின் அமைப்பே தனி தான்! அந்த "விநாயக சதுர்த்தி" கதை எப்படி உண்டாயிற்று தெரியுமா? நீ மட்டும் அன்று அந்தக் களிமண் விநாயகரைத் தொழாமல் இருந்தால், அவர் அந்த அருமையான கதையை சொல்ல முடிந்திருக்குமா? அல்லது, அவரால் என் கதையில் வந்து உட்கார்ந்து கொள்ளத்தான் முடியுமா?" என்றார்.

எங்கள் தனிக் குடித்தனத்தின் முதல் திருநாளாக வந்தது அந்த விநாயக சதுர்த்தி.

"என்ன, நாமும் நாளைக்குப் பிள்ளையார் சதுர்த்தி கொண்டாடுவோமா?" என்றேன்.

"எனக்குக் கொழுக்கட்டை பண்ணிக் கொடுப்பாயல்லவா?"

"அது இல்லாமலா?' அப்படியானால் சரி, செய்வோம்.

அவ்வளவுதான். மறுநாள் வரும் விநாயக சதுர்த்திக்கான சாமான் பட்டியலை தயாரித்தோம்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு எனது வேலைகளில் முனைந்தேன். அன்று ஒரே மகிழ்ச்சி. வீடெல்லாம் துடைத்து மெழுகிக் கோலமிட்டேன். அன்று ஆசாரமான நாளாகையால், தூர நின்றே அவரை எழுப்பினேன். "ஓகோ! இன்று ரொம்ப ஆசார பூபதிபோலிருக்கே" என்றபடி படுக்கையைவிட்டு எழுந்தார்.

முதல் நாள் பட்டியல்படி சாமான்கள் ஒவ்வொன்றையும் வாங்கினேன். பிள்ளையாருக்கு வேண்டிய மாவிலை, வாழைக் கன்று, தென்னங் குருத்தோலை, எருக்கலம்பூமாலை முதலியவற்றையும் வாங்கினேன்.

இந்தப் பிள்ளையார்களில் எது அழகாய் இருக்கிறது? என்று அவரைக் கொண்டே தேர்ந்தெடுத்து வாங்கினேன்.

அன்று எவ்வளவோ பாடுபட்டு அலங்காரம் செய்து விநாயக சதுர்த்தியை எதிர்கொண்டழைத்தோம். மாவிலை தோரணங்கள் கட்டுவதிலும், பிள்ளையாரை பீடத்தில் அமர்த்துவதற்கான சிறு கோவிலை அமைப்பதிலும் எனக்குத் துணையாக உதவி புரிந்தார். இடையே ஒரே கேலியும் கும்மாளமும் குதிபோட்டன. "விநாயகப்பெருமானை கவனிப்பதில் என் காப்பியை மறந்துவிடாதே' என்றார்.

திடீரென்று எழுந்து அந்த ஈரக் களிமண் பிள்ளையாரைத் தொட்டுப் பார்த்து விட்டு, "நீ இன்னும் காயவில்லை? உனக்காக இன்று என் பணமெல்லாம் காலி" என்றார்.

"கமலா! ஏனோ இவைகளைப் பார்க்க எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. வெறும் அர்த்தமற்ற செய்கை. தெய்வத்தையே கேலி செய்வதுபோல் இருக்கிறது. உனக்கு நம்பிக்கை இருக்கும்போது நான் அதில் தலையிடவிரும்பவில்லை. என்வேலை இந்த அலங்காரங்களில் உனக்கு உதவி புரிவதுதான்" என்றார்.

பிறகு வேலைகளை முடித்துக்கொண்டு விலகிவிட்டார். எட்டவிருந்து என் செய்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் பேனாவையும் பேப்பரையும் எடுத்துக்கொண்டு கதை எழுத உட்கார்ந்துவிட்டார். அன்று உருவானதுதான், "புதுமைப்பித்தன் கதைத் தொகுதி"யில் வரும் "விநாயக சதுர்த்தி.

× × × ×

ஒரு நாள் இரவு தூக்கம் வராமல் நடுச்சாமத்தில் எழுந்து உட்கார்ந்தார். வாயில் புகையிலையைப் போடும்போது திடீரென்று ஒருவித தீய நாற்றம்; பிணநாற்றம்! ஒரு வேளை ஆற்றங்கரையில் பிணம் எரியும் வாடையாக இருக்குமோ! என்று நினைத்தாராம். ஆனால், அது அவ்வளவு தூரத்தில் இருந்து வரவழியில்லையே; என்ன நாற்றமாக இருக்கும் என்று ஆராய்ந்தும் ஒன்றும் புரியவில்லையாம். சில விநாடிகளில் நாற்றம்போய் ஊதுவத்தி மணமாக மாறிற்றும். படக்கென்று விளக்கை போடவே நான் விழித்துக் கொண்டேன். "கமலா! உனக்கு இங்கு ஏதாவது வாசனை வருகிறதா?" என்றார்.

"இல்லையே" என்றேன் நான்.

"நல்லா கவனித்துப்பார்.

மறுபடியும் மூச்சை இழுத்து கவனித்தேன்.

"ஏதோ சாம்பிராணி வாசனைபோல் தோன்றுகிறது. எங்காவது போட்டிருப்பார்கள். விளக்கை அணைத்துவிட்டு தூங்குங்கள்" என்றேன்.

மறுநாள் விடிந்தவுடன் சொன்னார் "கமலா! நேற்று இரவு நடந்த நிகழ்ச்சியின் பயன் ஓர் அருமையான கதை உருவாகியிருக்கிறது. ஓய்வு நேரத்தில் படித்துப்பார்."

மத்தியானம் அந்தக் "காஞ்சனை" என்ற கதையை முதன் முதலில் நான்தான் படித்தேன். அதைப் படிக்கும்போது. அவரும் பக்கத்திலேயேதான் இருந்தார் படித்து முடித்தவுடன் "கதை எப்படி?" என்றார்.

"என்னவோ எங்களுக்கு எப்படிபுரியும்" என்றேன்.

"புரியவேண்டாம்."அந்த எங்களுக்காக" எழுதவில்லை" என்றார்.

இப்படித்தான் அவரது வாழ்வோடு அவருடைய கதைகளும் பிணைந்துகிடக்கும்.

× × × ×

அவரோடு பேசிக்கொண்டிருந்தால் பொழுது போவதே தெரியாது. வெற்றிலைப் பெட்டியும் கையுமாக அடுப்பங்கரையிலேயே வந்து உட்கார்ந்துவிடுவார். ஒரு சமயம் நண்பர்கள் வரவை எதிர்பார்ப்பார். சிலசமயம் "யாராவது வந்தால் இல்லையென்றுவிடு" என்பார். அவர் பேச்சைக் கேட்டு, வந்தவரிடம் "அவர் இல்லை" என்பேன். உடனே உள்ளே இருந்தபடியே "இருக்கிறேன் சார்" என்று என்னைத் தலைகுனியச் செய்துவிடுவார்.

அவர் வாழ்வின் ஒவ்வொருநிகழ்ச்சியிலும் நகைச்சுவைக் கொப்பளிக்கும். பேச்சுத்துணைக்கு யாரும் இல்லையானால், கம்பராமாயணத்தை எடுத்துக் கொள்வார். அதை எனக்குப் படித்துக் காண்பிப்பார். என்னைப் படிக்கச்சொல்லி கேட்பார். புரியாத இடங்களைப் புரியவைப்பார். அவருக்கு எதில் எல்லாம் விருப்பம் இருக்கிறதோ அதையெல்லாம் நானும் விரும்பும்படிச் செய்வார். "மனைவி என்றால் கணவனுக்கு தொண்டு செய்யும் அடிமை" என்னும் மனப்பான்மை அவரிடம் கிடையாது. தனக்கு ஒரு நியதி மனைவிக்கு ஒரு நியதி என்னும், வித்தியாசமும் அவரிடம் இருந்ததில்லை.



'நகைச்சுவை கொப்பளிக்கும்'

கையில் பணம் இருந்தால் தாராளமாக செலவு செய்வார். இல்லாத போது "இல்லையே" என்று வருத்தப்படமாட்டார். இவ்வித அவரது போக்கை கண்டு "ஏன் இப்படியெல்லாம் பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறீர்கள்" என்று கேட்டால் "நான் இருக்கும்போது நீ ஏன் மண்டையை உடைத்துக் கொள்ளவேண்டும்? நாளைக்குப் பார், எல்லாம் சரியாகிவிடும்" என்பார். ஆனால் அந்த "நாளை" எத்தனைமுறை வந்து போனாலும் அவருக்குமட்டும் கவலைவந்திருக்காது. இவ்வித அவரது போக்கால் குடும்ப நிர்வாகத்தை நானே ஏற்றுக்கொண்டேன். வாங்கிய சம்பளத்தை என் கையில் கொடுத்துவிடுவார். குடும்பம் கடன் இல்லாமல் நிதானமாகப் போய்க்கொண்டிருந்தது.

× × × ×

வாழ்க்கைப் பாதையில் அடி எடுத்து வைத்த முதல் அடியே எங்கள் இருவரையும் பல சோதனைகளுக்கு ஆளாக்கிற்று. அவைகளிலெல்லாம் தட்டுத்தடுமாறி தைரியமாக முன்னுக்குவந்தோம். "வாழ்வைக்கண்டு பிறளாதே. இருளுக்குப்பின் நிச்சயமாக ஒளி பிறந்து தானேயாகவேண்டும்" என்று எனக்குச் சமாதானம் சொல்வார்.

பத்திரிகை ஆபீசில் ஐந்து பத்து என்று அட்வான்சாக சம்பளம் கொடுத்துக்கொண்டிருந்த காலம் போய், முழுச் சம்பளமும் கைக்கு வந்து நிம்மதியாக போய்க்கொண்டிருந்த வாழ்க்கையைக் குலைக்க, அவரது உயிர்த் தோழர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த சிலரே காரணமாயினர். பத்திரிகையை விட்டு வெளியேறவும் இவர்கள்

தாம் காரணம் "யார் யாரை நான் நல்லவர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேனே அவர்களே எனக்குப்பின்னால் இருந்து குழி தோண்டிக் கொண்டிருந்தார்கள்" என்று அவரே நொந்து சொல்லியிருக்கிறார்.

சூதுவாது அறியாத வெள்ளை உள்ளம் உள்ளவர் அவர். தோட்டி முதல் தொண்டைமான் வரை எல்லோரும் அவருக்கு ஒரே மாதிரிதான். எல்லோரையும் ஒரே மாதிரி நடத்துவார். நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும் திறமை அவருக்குக் கிடையாது என்றே சொல்லவேண்டும். இதனாலேயே அவரது அந்திய காலத்தில் சில "விடலை" நண்பர்களால் ஏமாற்றப்பட்டார். அவரே ஒரு தடவை சொன்னார். "கமலா நீ மட்டும் என் பக்கத்தில் இல்லாவிட்டால் நான் என்னதான் சம்பாதித்தாலும், பிறரால் ஏமாற்றப்பட்டு கடைசியில் பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்துவிடுவேன்" என்று.

சினிமாவுக்கு (ராஜமுக்தி) வசனம் எழுதியதன் மூலம் பல ஆயிரங்கள் கிடைத்ததாக சிலர் சொல்கிறார்கள். அந்த பல ஆயிரத்தில் ஒரு ஆயிரமாவது அவர் உடம்பிற்கென்று செலவிட்டிருந்தால் அவரைப் பிடித்த கொடிய நோய்க்கு உயிர்ப்பலியாகி இருக்கமாட்டார்.

கொஞ்சம் கிடைத்த தொகையை சொந்தச் செலவிற்கோ அல்லது எனக்கோ செலவு செய்தாரா என்றால், அதுவும் இல்லை. "உங்களைவிட்டால் கிடையாது" என்று ஓலைப்பேன் மாதிரி அவரை ஒட்டிக் கொண்டிருந்த சில தரங்கெட்ட நண்பர்களுக்கே தான் செலவு செய்தார். "சோவி"யின் உயிர்த் தோழர்களாய் நடித்த அவர்கள், அவர் கைவரண்டதும் அவரைத் திண்டாடவிட்டதுமல்லாமல், அவரை வாயார திட்டவும் செய்கின்றனர். கிடைத்த சில ரூபாய்களையும் அந்த ஓடு காலிகளுக்காக செலவு செய்துவிட்டு, தன் உருவைத் தானே அழித்துக்கொண்டார்.

பணமும் இல்லாமல் வேலையும் இல்லாமல் வறுமைப் பேய்வாட்டும் போது நானும் கூட இருந்து அனுபவித்தேன். ஏதோ கொஞ்சம் பணம் புரளும் போது விதி என்னை ஐநூறு மைல்களுக்கப்பால் கொண்டு வைத்தது. ஆறு மாத கர்ப்பிணியாக இருந்த எனக்கு உதவிக்கு சென்னையில் ஒருவரும் இல்லாத படியால் திருவனந்தபுரம் என் தாயார் வீட்டுக்குப் போக நேர்ந்தது. குழந்தை பிறந்து இரண்டு ஆண்டுகள் வரை விதி என்னையும் அவரையும் தனியே தான் பிரித்து வைத்திருந்தது. முடிவில், மரண தறுவாயில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இரண்டாயிரம் மைல்களைக் கடந்து புனாவிலிருந்து என் பக்கத்தில் வந்தார். வந்து என் கைகளால் ஒரு மாத உபசரிப்பை ஏற்றுக்கொண்டு உயிர் துறந்தார்.

× × × ×

மரணம் நெருங்க நெருங்க அவர் மனம் சகிக்க முடியாத வேதனையால் துடித்தது. உயிருக்காகப் போராடினார். "குழந்தையையும் என்னையும் நிராதரவாக விட்டுச் செல்கிறோமே" என்னும் வருத்தம் அவருடைய ஒவ்வொரு வார்த்தையிலும் தெரிந்தது.

நாளாக ஆக, ஆரம்பத்தில் அவரிடம் கண்ட நம்பிக்கையும் தைரியமும் குறைந்து கொண்டே வந்தது. "தன் மரணம் பிறர் பார்த்துப் பயப்படும்படி விகாரமாக இருந்துவிடக்கூடாதே" என்று விரும்பினார். அவர் எண்ணப்படியே கடைசி நிமிஷம் வரை நன்கு பேசிக் கொண்டே இருந்தார். உடம்பு முழுதும் வியர்வை ஆறாக ஒழுகியது. நான் பக்கத்தில் நின்று துடைத்துக்கொண்டிருந்தேன். என் சங்கடத்தைப் பார்த்து, "கமலா, கவலைப்படாதே, தைரியத்தை கைவிடாதே. தைரியத்தைக் கைவிடாதே. மனதைத் தளரவிடாதே. **தினகரியை** ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள். உன் கவலைக்கு அவள்தான் மாற்று மருந்து. உன்னை நல்லநிலையில் வைக்கவேண்டுமென்று தான் ஆசைப்பட்டேன். முடிவில் எதிர்பாராத நிலையில் விதி என்னை இப்படிக் கொண்டுவிட்டது. இந்த நிலையில் இதைத்தான் நான் உனக்குச் சொல்லமுடியும்" என்றார்.

இச் சொற்களைக் கேட்டும், அவர் துன்பங்களை நேரில் கண்டும், என் நெஞ்சில் குமுறிய வேதனையை வார்த்தைகளால் வர்ணிப்பது முடியாது. உயிர் உடலைவிட்டுப் பிரியும் போது கூட பேசிக்கொண்டேதான் உயிர்துறந்தார். இதற்குமேல் என்னால் எழுதவே முடியவில்லை...... வணக்கம்.

★

அவர் சாகவில்லை...

கன்னிக்கண்ணன்

எழுத்தாளன் யார்? அவனுக்கும் நாட்டிற்கும் என்ன தொடர்பு?

எழுத்தாளன் சமுதாயத்தில் புரட்சி உண்டுபண்ணும் தீரன். அவனது எழுத்தோவியங்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை உண்டு பண்ணும். அவனது சொற் சித்திரங்கள் மூடத்தனத்திற்கு அரணளியாது. அறிவீனத்திற்கு அணைப்பு நல்காது. கண்மூடி கபோதித்தனத்திற்கு கருத்தீயாது. மடமைக்கு மண்டியிடாது. அவனது பண்பு பழமைக்கு பரிந்து பேசாது. அவனது விழிகள் வாழ்வின் பல கோணங்களை நோக்கும். அந்தக் கோணங்களில் காணும் "கோனல் மாணல்"களை படம் பிடித்துக்காட்டும் இயல்பின. மதத்தின் பேரால் மாயும் மாக்களை மக்களாக்குவது உணர்ச்சி எழுத்துக்கள். பழமையில் புரளாது அவனது சொற்சித்திரங்கள். புது உலகம் அமைக்கும்சிந்தனைச்சிற்பி எனவேஅவன் புதுஉலகத்தின் திங்குயில் பாடும் இன்குரலைக் கேட்கிறான். புளகாங்கிதமடைகிறான். அதைத் தன் நாட்டிலே ஏற்படுத்த விழைகிறான்; விழைவு உணர்ச்சியை தூண்டுகிறது. பேனா முனை பொன் எழுத்துக்களைத் தீட்டிவிடுகிறது. இதுதான் உண்மை எழுத்தாளனின் குறிக்கோள்—லட்சியம்.

இந்தக் குறிக்கோளின்—லட்சியத்தின் நெறியிலே நின்றார் தமிழ் நாட்டில் ஒருவர். அவர்தான் எழுத்தாள இனத்திற்கே எடுத்துக் காட்டாக நின்ற புதுமைப் பித்தன்.

பிரஞ்சு நாட்டில் மாப்பசானுக்கும், ஆங்கில நாட்டில் தாமஸ் ஹார்டிக்கும் ஈடு இணையாக — சமைதையாகக் கூற ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் புதுமைப் பித்தனாகத்தான் இருப்பார்—இருக்கமுடியும். "வாழ்க்கை காண்பவருக்கு ஆனந்தமாகப் படும். ஆனால் அனுபவிப்பவர்களுக்கு சோக நாடகந்தான்" என்பதின் அடிப்படையில் அமைந்ததுதான் ஹார்டியின் நவீனங்கள். அதைப்போன்றுதான் நம் புதுமைப் பித்தனும் அதன் ஈடுபாடுகளில் நின்று கொண்டு உழைந்துபோன உள்ளம் வரண்டுபோன வாழ்க்கை இவைகளை மையமாக்கிக் கொண்டார்.

அவரது எழுத்துக்கள்—படைப்புக்கள்—வீழ்ந்த இனத்தை வாழவைக்கும் வழி காட்டியாக இருந்தது—இருக்கிறது. பகுத்தறிவைப் புலரவைக்கும் பரிதியாக அமைந்தது. அறிவுணர்ச்சியைத் தூண்டிவைக்கும் நெறியைக் காட்டியது. மதியீனத்தைப் பொசுங்கவைக்கும் சூளுரையாக இருந்தது. அவர் காலத்தின் போக்கை உணர்ந்து—பிரதியட்ச வாதத்தின் அடிப்படையில் நின்றுகொண்டு கருத்துக்களை கதைவடிவில் தந்தார்.

பட்டினித் தேவதையின் கோர தாண்டவத்தால் ஏழை எளியவர்கள் அலறுகின்ற போது—கதறுகின்ற நேரம், செந்நெற்கழனிகளின்செம்மையைப் பற்றி சித்திரிக்கவில்லை. தேங்கனி சொரியும் மாங்கனி மரத்தைப் பற்றியோ, பங்கயக் கண்களின் பண்பைப் பற்றியோ கவிபாடவில்லை. ஆனால், அல்லல்பட்டு அவதியுறும் ஏழைப்பாமரர்களின் இன்னல்களைப் பற்றி, இடையூறுகளைப் பற்றி எடுத்துக் காட்டினார், தமக்கே உரித்தான தத்துவம் நிறைந்த சரளமான தமிழ்நடையில்.

புதுமைப் பித்தனை இழந்து இன்றோடு பனிரெண்டு ஆண்டுகள் ஆகின்றன. அவர் செத்துவிட்டார்—செத்து மடிந்துவிட்டார் என்று நாம் எண்ணிக்கொள்ளலாம். அவரது இலக்கிய எதிரிகளும் அப்படித்தான் நினைத்தனர்—நினைக்கின்றனர். உண்மையில் அவர் சாகவில்லை. அவர் உயிர்

வெட்டி ஒட்டும் வேலை

புதுமைப்பித்தன் தினமணி மலருக்கு பொறுப்பாளியாக இருந்தபோது நடந்தது. தினமணியில், தம்மால் மொழி பெயர்க்கப் பட்டு வெளிவந்த செய்திகளை எல்லாம் "காலம் காலமாக" வெட்டி நீளமாக ஒட்டி சுருட்டிக் கொண்டிருந்தார் ஒரு நாள்.

அதைக் கண்ட கமலாம்பாள்" ஏன் இப்படி ஒட்டுகிறீர்கள்"? என்று கேட்டார்.

"ஆபீசில் ஒட்டச் சொல்லி இருக்கிறார் கள்" என்றார் சொ. வி. உண்மையாக இருக்கு மென்று நம்பிவிட்டார் காமலா.

ஒருநாள் தினமணி நிர்வாகி ராமனாதன் தற்செயலாக புதுமைப்பித்தன் வீட்டுக்கு வர நேர்ந்தது. அந்த நேரம், வெட்டு ஒட்டு வேலை யில் ஈடுபட்டிருந்தார் சொ. வி. அதைக் கண்ட ராமனாதன் திகைத்துப்போல் "என்ன சொ. வி. எதற்காக இப்படி செய்கிறீர்கள்" என்று கேட்டார்.

"சும்மாத்தான்" என்றார் சொ.வி.

அந்த சமயம் அங்கே வந்த கமலா "ஆபீ சில்தான் இப்படி ஒட்டச் சொல்லியிருக் கிறார்களாம்" என்றார்.

ஆபிசிலேயா? யார் அப்படிச் சொன்னது? என்று கேட்டார் ராமனாதன்.

"இவர் தான் சொன்னார்" என்று சொ வி. யைச் சுட்டிக்காட்டினார் கமலா.

"என்ன சொ. வி.! இதெல்லாம் என்ன கூத்து." என்றார் ராமனாதன்.

பிறகு மூவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

× × × ×

பூச்சாண்டி

"தினசரி"யில் வேலை பார்த்தபோது ஒருநாள் புது மைப்பித்தன நேரங்கழித்து ஆபீசுக்கு வந்தார். வரும் போதே அவர் முகத்தில் சோகமும்' படபடப்பும் தென் பட்டன. மேசையின் முன் வந்ததும், மேசை மேல் இருந்தவைகளை அப்படியும் இப்படியும் தூக்கிப் போட் டார்.

"என்ன விஷயம் சொ. வி.? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்" என்று கேட் டார் ஆசிரியர்.

என்னத்தைச் சொல்வது? வீட்டில் மனசில் நிம்மதியே இல்லை. நாலுநாளாக உடம் புக்கு ஆகவில்லை. என்ன செய் வது என்றே தெரியவில்லை?" என்று கவலையுடனும் சலிப் புடனும் கூறினார், சொ. வி.

ஏதோ வீட்டில் மனை விக்கு உடம்பு சரியில்லை போலிருக்கிறது என்று ஆபீ சில் உள்ளவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

மறுநாள் ஆபீசில் நுழைந்தபோது கையை விரித்துக்கொண்டே, "குளோஸ்" ஆகிவிட்டது" என்றார்.

பக்கத்திலிருந்தவர் களுக்கு தூக்கிவாரிப் போட் டது.பதட்டத்துடன்" என்ன சொ. வி. என்ன நடந்தது? என்றார்கள்.

"ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயும் பிரயோசன மில்லை! எவ்வளவோ பிர யாசைப்பட்டும் திரும்பும் வழி யில் உயிரைவிட்டுவிட்டது; அப்படியே பாலத்தடியில் போட்டுவிட்டு வந்துவிட் டோம்" என்றார் நிதானமாக.

பிறகுதான் தெரிய வந் தது. புதுமைப்பித்தன் பிரிய மாக வளர்த்து வந்த "நாயை"ப் பற்றித்தான் இவ் வளவு ரகளையும் செய்து விட்டார் என்பது? ★

இல்லையென்றாலும் உள்ளம் இருக்கிறது. எண்ணம் இருக் கிறது. எழுத்து இருக்கிறது. ஆண்டுகள் மறைந்துவிட லாம்—அடுக்கடுக்காக; ஆனால் அழியாத அமரத்வம் பெற்று விட்ட அவரது இலக்கியங்கள் மறைந்துவிடாது. அவை நம்மோடு இன்றும் பேசிக் கொண்டுதான் இருக்கிறது. பேசிக்கொண்டே இருக்கும்.

நாட்டில், வாழ்க்கையில் நடக்காத, நடத்தைக்கு ஒத்து வராதவைகளை கற்பனையாக வடித்து கதை திட்டுபவரல்ல அந்தமேதை. அப்படிப்பட்ட அந்த மேதைக்கு நாம் எல் லோரும் அஞ்சலி செய்யக் கடமைப்பட்டுள்ளோம். மேதைக்குத் தக்க கடமையை மேதினி உள்ளளவும் செய் வோமாக. வாழ்க புதுமைப் பித்தன் இலக்கியங்கள். ★

★

எனது தந்தை

★

செல்வி தினகரி

தமிழ் நாட்டின் தலை சிறந்த மேதைகளில் ஒருவருடைய மகள் என்ற ஒரு பெருமையைத் தவிர என்னை ஒரு துரதிருஷ்ட சாலி என்றே சொல்வேன். சிறந்த மேதையான அப்பாவுடன் இருந்து அவர் கூறும் அறிவுரைகளையும், அன்பு வார்த்தைகளையும் கூட என்னால் கேட்கக் கொடுத்து வைக்கவில்லை. அப்பா இறக்கும் போது எனக்கு இரண்டரை வயதென்று அம்மா சொல்லக்கேட்டிருக்கிறேன். அப்பாவின் உருவத்தைக் கூட நான் பார்த்ததாக ஞாபகம் இல்லை. போட்டோக்களில் அவரைக் காணும் பொழுதும், அவரைப் பற்றிப் பலர் கூறும் பொழுதும் அவரை நாம் பார்க்கக் கூட முடியவில்லையே என்றே ஒரு வேதனை உள்ளத்தில் ஏற்படுகிறது.

அப்பாவைத்தான் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையென்றாலும் அப்பாவின் அப்பாவைக் கூட நான் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. என் தாத்தா சென்ற ஆண்டில் தான் இறந்தார் என்ற செய்தியைப் பத்திரிகை மூலமாக நாங்கள் அறிந்தோம். தாத்தா மிகவும் நெஞ்சழுத்தக்காரர் என்றும், எந்தக் கவலை வந்தபொழுதும் அஞ்சாத மனம் உடையவர் என்றும் அம்மா சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் சமீப காலம் வரை இருந்து மறைந்த தாத்தா கூட

எங்களிடம் அன்போ, அனுதாபமோ காண்பிக்கவில்லையே என்றெண்ணும் பொழுது மிகுந்த துன்பமாக இருக்கிறது. கடைசி காலத்திலாவது எங்களைக் காண விரும்புவார்கள், நாம் அவர்களைப் பார்க்கலாம் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் இருந்தோம். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் பொழுது மனிதர்களாகிய நம்மால் என்ன செய்ய முடியும்.

தற்பொழுது அப்பாவின் உடன் பிறந்த தங்கையொருவர் நல்ல நிலைமையில் பாளையங் கோட்டையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களையெல்லாம் பார்க்க வேண்டும் என்ற ஆசை நாளுக்கு நாள் அதிகரிக்கத் தான் செய்கிறது. ஆனால் அவர்கள் அழைக்காத பொழுது நாமாக எப்படிப் போவது? மேலும் மனிதருக்கென்று கூடப் பிறந்திருக்கும் ஓர் தன்மான உணர்ச்சி அழையாத வீட்டினுள் நுழையத் தடுத்து நிறுத்துகிறது. 'நாம் தானே அவர்களைப் பார்க்கவேண்டும்; பழகவேண்டும்; என்று எண்ணுகிறோம், ஆனால் அவர்களுக்கும் இந்த எண்ணம் தோன்றவில்லையே என்று சில சமயங்களில் நான் யோசிக்கும் பொழுது, அது ஒன்றுமே புரியாத ஓர் அதிசயமாகத்தான் இருக்கிறது.

எனக்கு ஏழு அல்லது எட்டு வயதிருக்கும் பொழுது என்னுடைய சின்னத் தாத்தாவின் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அப்பொழுது சின்னத் தாத்தா பெரிய தாத்தாவிடம்

என்னை அழைத்துச் சென்று காண்பிக்க விரும்பி பாளையங்கோட்டைச் சித்தப்பாவுடன் என்னை வண்ணார் பேட்டைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் பெரிய தாத்தாவோ,! அவனையே மறந்து விட்டேன். யாரையுமே பார்க்கவேண்டிய அவசியமில்லை,! என்று கூறிவிட்டார்கள். தாத்தாவைக் காணவேண்டும் என்ற ஆவலுடன் சென்றிருந்த எனக்கு இச்சொல் அப்பொழுது புரியாவிட்டாலும் இனந்தெரியாத ஒருவருத்தம் ஏற்படத்தான் செய்தது. அப்பொழுது அவ்வளவு புரியவில்லை. இப்பொழுது தான் அதனை உணர்ந்தேன். இக்காரணத்தாலும் நான் அவர்கள் வீட்டிற்குப் போனதுமில்லை; அவர்கள் என்னை அழைத்ததும் இல்லை. ஒரு வேளை என்னுடைய பொறுப்பை அவர்கள் ஏற்க வேண்டி வந்திடுமோ என்று எண்ணியிருக்கலாம்.

எனது தாயார் உயிரோடு இருக்கும் வரை எனக்கு அப்படி ஒரு நிலை ஏற்படாது என்பது நிச்சயம். மேலும் அப்பாவும் அடிக்கடி சொல்வார்களாம்,'' ஒரு தந்தை இல்லாமல் ஒரு குழந்தை வளர்ந்துவிடும். ஒரு தாய் இல்லாமல் ஒரு குழந்தை வளர்வது மிகவும் பரிதாபப் படக்கூடிய விஷயம்'' என்று. தாயில்லாத குறையும், சிறிய தாயாரால் அனுபவித்தத் துன்பங்களையும் அதனால் குடும்பத்திலிருந்து விரட்டப்பட்டதையும் உணர்ந்தே எனது தந்தையார் இப்படிச் சொல்லியிருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, நாங்கள் இப்பொழுது இருக்கும் வீட்டின் கிரகப் பிரவேசத்தின் போது அமரர் கல்கி அவர்கள் ஒரு நூல் நிலையத்தையும் திறந்து வைத்தார்கள். அப்பொழுது ''சிவாஜி'' என்ற பத்திரிகையில் ஆசிரியராக இருக்கும் திரு. திருலோக சீதாராம் மாமா அவர்கள், அப்பாவின் பாடலொன்றைப் பாடிக்காட்டினார்கள். பார்த்துப்படித்து அர்த்தம் புரிவதைவிட காதால் கேட்டறிந்த அப்பாட்டு இன்னமும் என்மனதை விட்டு நீங்கவேயில்லை. இப்பொழுது அநேக பாடல்கள் எனக்கு மனப்பாடம் ஆகிவிட்டது. ஆனால் சிறந்த மேதைகள் எடுத்துக்கொள்ளும் உயர்கருத்துக்கள் எனக்குத் தோன்றாவிட்டாலும் ஓரளவேனும் புரிகிறது. அவைகளையெல்லாம் படிக்கும் பொழுது நாமும் பல கட்டுரைகள், கதைகள் எழுதி சிறந்த எழுத்தாளராக வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

எங்களைச் சுற்றிப் பின்னிவரும் துன்பவலைகளையெல்லாம் நீக்க, அப்பா இருந்தால் நான் எப்படியெல்லாம் இருப்பேனோ அவ்வாறெல்லாம் நான் கேட்பதையெல்லாம் வாங்கித் தந்து என்னை ஒரு குறைவுமில்லாமல் காத்து வரும் என் அம்மாவையும், என்னையும் வாழ வைத்துக் காப்பாற்றுவது அப்பாவின் எழுத்துத்தான். என் உள்ளத்தில் எழுந்த துன்ப வேதனையே இக்கட்டுரையாகும். ஆகையால் இதைப் படிப்பவர்கள் நான் குறைகூறுவதாக எண்ணமாட்டார்கள் என நம்புகிறேன்.

அப்பாவிடமும், அவர்கள் இயற்றிய இலக்கியங்களிலும் அபிமானமுள்ள தமிழ் நாடு, மலாயா, சிலோன் போன்ற நாடுகளிலுள்ளவர்களின் உதவியினால் நானும், அம்மாவும் சென்னையில் நிம்மதியாக வாழ்ந்து வருகிறோம். உறவினர்கள் என்பவர்கள் எங்களைக் கண்டு கதவை இழுத்து மூடிவிட்டாலும் மற்றொரு பக்கம் எங்களுக்கு தங்கள் மனக் கதவை அகலத்திறந்து எதிர்கொண்டு அழைத்து எங்களுக்கு வாழ்வளித்த அனைவருக்கும் எனது இளம் மனதில் எழும் நன்றியறிதலை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ★

வாழ்க தமிழ்!

புதுமைப்பித்தன் குடும்பத்தினர்க்கு
எங்களது நல்வாழ்த்துக்கள்

எங்களிடம் தமிழ் நேசன், தமிழ் முரசு, ஆங்கில, மலாய்த் தினசரிகளும், தேசியத் தலைவர்கள், சுவடிகள், சினிமா நட்சத்திரங்களின் படங்களும், தமிழ், ஆங்கில, மலாய் பாடப் புத்தகங்களும், தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுதாளர்களின் புத்தகங்களும், ஸ்டேஷனரி சாமான்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

பெரி. முருகப்பன்
புத்தக நிலையம்,

13-ஏ ஜாலான் கஞ்சூட்,
அலோஸ்டார், கிட்டா.

புதுமைப்பித்தனின் கவிதையும் கதையும்

"நடனம்"

புதுமைப் பித்தன் மறுமலர்ச்சி எழுத்தாளரின் முன்னோடி. இத்துறையில் அவருக்கு ஈடும் இணையும் அவரே. அவர், தம்மையே வாழ்வில் உருவாக்கினார். மோந்தேன் (Montaigne) என்ற பிரெஞ்சுப் பேராசிரியன், 'நான் என்னையே (என் நூலில்) படம் பிடித்துக்காட்டுகிறேன்' (It is myself I portray) என்கிறான். இவ்வரிசையைச் சேர்ந்தவர் புதுமைப் பித்தன். அவரது கருத்தின் வேகம், எழுத்தில் கரைபுரண்டு ஓடுகிறது. எண்ணப் புரட்சியும், எழுச்சியும் சுவையும் அவரது எழுத்தில் கனிகுலுங்கும்.

கவிதை

ஆரியமும் செந்தமிழும் ஆங்கிலமும் ஆய்ந்து கற்ற நமது புதுமைப் பித்தன், முதலில் கவிதையே எழுதத் தொடங்கினார். கவிதைக்குப் பிரதானமாய் வேண்டுவது ஜீவ சக்தி; அடுத்தது, வாக்குவளமும், இலக்கண வரம்பும். உத்வேகம் அற்ற உள்ளத்தில் காட்சிக் கரிய உண்மைக் கவிதை மலராது. இந்தக் கருத்தை அறிந்தவர், புதுமைப்பித்தன். "வேளூர் வெ. கந்தசாமிப் பிள்ளை" என்ற பெயரில் அக்காலம் இவர் பத்திரிகைகளில் கவிதைகள் பல எழுதி வந்தார். இவரது புதியமுறைக் கவிதை, பெரும்பாலும் (Free Verse) 'லகு கவிதை' அல்லது வசன கவிதையிலேயே அமைந்திருந்தது. 'இது யாப்பிலக்கண முறைக்கு ஒவ்வாதது' எனப் பண்டித உலகமும், இலக்கிய 'சனாதனிகளும்' அக்காலம் இவரது கவிதைகளை ஒதுக்கித் தள்ளினர். புதுமைப் பித்தன், 'லிரிக்' என்னும் 'ஒரு பொருள் இசைக் கவிதைக்குத் தனி உருவமும் ஜீவகளையும் தந்தார். அதற்கு ஓர் எடுத்துக் காட்டு:

கவிதையைக் கலையின் அரசியெனக் கண்ட புதுமைப்பித்தன், கனவுலகில் சஞ்சரிக்கிறார்; ஆங்கே அவர் கண்ணில்படுகிறாள் கலை மடந்தை. கம்பன் நாவில் தவழ்ந்த கலையரசி, அப்போது காட்சியளித்தது, கனவோ நனவோ என்று ஐயுறுகின்றார், புதுமைக் கவி:

"செல்லரித்த நெஞ்சின்
சிர கொடிந்த கற்பனைகள்

இடுப் பொடிந்த சந்தத்தில்
இடறி விழும் வார்த்தைகளில்

ஊரில் பவனிவர
உவப்புடனே நீயிருந்து

முத்தமிழை—
பாலித்துப் பயிராக்கி,

பசிய உயிர் தான்தோன்ற
வளர்ந்து வரும் வார்த்தை
நிசந்தானோ?

"சத்தியமாய்க் கேட்கின்றேன்
சரஸ்வதியே நிசந்தானோ?"
—என்று பாடுகிறார்.

"தாயே, நீ என் உள்ளத்தின் ஊஞ்சலில் உந்தி, உவகை துள்ள ஆடுகின்றாய்! அதில் சிந்தும் உன் சிரிப்பெல்லாம் கவிதையோ, சொப்பனமோ? சிரிக்காதே! அம்மா, உன் பூ விரிந்த பந்தலிலே புதுமணத்தின் தேன்நுகர, சித்தம்பரத்துச் சிவனார் நடங்கூற மெத்த விரும்பினேன்; மேவிடுவாய் என் நாவில்"—என்று நம்மையும் அந்தக் கனவுலகுக் காட்சியில் திளைக்க வைக்கிறார், புதுமைக் கவிஞர்; மேலும் "வானக் கனவுகளை வக்கணையாய்ச் சொல்லும், உண்மைக் கவிராயன் நானல்ல" என்கின்றார். பின்னர், இவர் யார்? எதனை ஆக்கித்தர வல்லார்? எதைத் தந்தார்?

"கல்லும் உயிர்பெற்று
காலன் போல் நடமாட

'வெல்லு' 'வெல்லு' என்று குத்தும்
வீருப்புத் தார்க் குச்சி,

எத்தனை வேணும்?—செய்து
இணையடியில் வைத்திடுவேன்"

—என்று பாடுகிறார். ஆம் அவ்வாறே செய்தும் வைத்தார்! புதுமைத் தமிழகம், அவரது புரட்சிக் கவிதைகளைப் புறக்கணிக்காது, ஏற்றுப் போற்றித்தான் வருகிறது.

பெயர் புகழுக்காகப் புதுமைப் பித்தன், கவிதை எழுதவில்லை. தமது உள்ளத்தினின்று பொங்கிப் பொசிந்த சில துளிகளையே தேக்கி வைத்தார். அவர் யாரும் அறியாமல் வாழ்ந்தார்; புகழை வெறுத்தார். கவிதைத் தாயின் திருக்கரங்களில் அன்புக் குழந்தையாய்த் திகழ்ந்தார். அவரது இறுதியான வேண்டுகோள் ஒன்று; கேளுங்கள்:

"......................ஐயா நான்
செத்த பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!

நினைவை விளிம்புகட்டிக்
கல்லில் வடித்து வையாதீர்!

'வானத்து அமரன்
வந்தான் காண் வந்ததுபோல்
போனான் காண்' என்று
புலம்பாதீர்!

அத்தனையும் வேண்டாம்
அடியேனை விட்டுவிடும்!"

என்றிவ்வாறு, கவிதைக் கனவு கண்ட புதுமைப் பித்தன், துறவி மனப்பான்மை உடையவர். எனினும், அவர் தமிழுக்காக வாழ்ந்தவர். அவரது குடும்பத்தைப் பேணுதல்' இக்காலம் புதுமைக் குரலெழுப்பும் தமிழரின் கடமையன்றோ? முன் வருக.

கதை

இக்கட்டுரையை முடிக்குமுன், புதுமைப் பித்தனின் சிறுகதைகளைப் பற்றி, இரண்டொரு குறிப்புகள்: கதைக்கென்று எந்த நாட்டிலும் தனி இலக்கணமோ, மரபோ வரையறுத்துக் கூறப்படவில்லை.

புதுமைப் பித்தன், 'தற்காலக் கதை இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்படுகிறார். அவர் தமக்கென்றே தமது கதைகளில் ஒரு புதுப்பாணியை வகுத்துக்கொண்டார்; சிறுகதை உலகில், ஒரு புதுமையையும் புரட்சியையும் உண்டு பண்ணினார்; தமது புதுமைக் கதைகளுக்குப் புதுப்புது உருவங்களைத் தந்தார். தமிழில் சிறுகதை இலக்கியத்திற்கு ஒரு நிலையான இடத்தைத் தேடித் தந்தவர், புதுமைப் பித்தன். சிறுகதைகளில் அவர் கையாண்ட கருத்து விஸ்தாரங்கள், அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி எழுதிவரும் இன்றையக் கதாசிரியர்களுக்கு, ஓர் ஆதர்ஸஜோதியாய் நின்று நிலவுகின்றன.

புதுமைப் பித்தனின் சிறுகதைகளில் "புதிய ஒளி, மணியோசை, ஆண்மை, முதலும் முடிவும், உலக அரங்கு, பளிங்குச் சிலை, பிரேத மனிதன்"—ஆகிய நூல்கள், "கதை இலக்கிய-ராக்கட்டுகளா"கும்.

சிறுகதை இலக்கியத்தின் தன்னிகரில்லாத் தலைவன், புதுமைப் பித்தன். அவரது இலக்கிய மரபும், பரம்பரையும் வாழ்க! அவை மேலும் புதுமை கமழ்க! ★

மேதை புதுமைப்பித்தன்
குடும்பத்தார்க்கு எமது வாழ்த்துக்கள்

கே. ஆர். சண்முகம்

('தமிழ் முரசு' ஏஜண்ட்)

112-A, டிரான்ஸ்பார் ரோடு, பினங்கு.

மலாயாவிலிருந்தும்,
இந்தியாவிலிருந்தும் வெளியாகும்
வார, மாத இதழ்கள் எம்மிடம்
கிடைக்கும்.

தேவைக்கு நேரில் எழுதுங்கள்

உடலும் உள்ளமும்

க. கனகசுந்தரம்

அன்று அலுவலகத்திலேயே காய்ச்சல் வந்துவிட்டது; தாங்க முடியவில்லை. வேலை செய்தாலும், செய்யாவிட்டாலும் மணிக் கணக்குக்கு அலுவலகத்தில் இருந்து தீர வேண்டுமே—என்ன செய்வது? மணி ஐந்தாகும் வரையில் பல்லைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

கடுமையான காய்ச்சலால் உடம்பெல்லாம் ஒரே நடுக்கம். கால்களிலும் ஒருவித வலி. சரியாக நடக்கமுடியவில்லை. எப்படியோ சமாளித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

அவசர அவசரமாகப் படுக்கையை விரித்து, போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தேன். கண்ணை மூடினால், தூக்கம் வந்தால்தானே!

உடம்பு மட்டும் கதகதவென்று கனன்று கொண்டிருந்தது; நடுக்கம் வேறு; முனகியபடி காய்ச்சலின் உபாதையை பொறுத்துக் கொண்டு படுத்திருந்தேன். ஆனால் மனம்?

உடல்தான் காய்ச்சலில் ஒய்ந்து, ஒடுங்கி செயலற்றுக்கிடந்தது. ஆனால்,உள்ளம் மட்டும் எட்டாத தூரத்தில், வட்டமிட்டு அலைந்து கொண்டிருந்தது. கண்ணை மூடிக்கொண்டு படுக்கையில் கிடந்தேனே தவிர, மனம் சென்ற திக்கில் எண்ண அலைகளில் மிதந்து கொண்டிருந்தேன்.

மனம் காலத்தையோ – எட்டாத தூரத்தையோ கொஞ்சமும் சட்டை செய்வதே இல்லை. அது மட்டுமா? இல்லாத ஒன்றை கற்பனை செய்து பார்ப்பதிலும், வாழ்க்கையில் நடந்து போன நிகழ்ச்சிகளைக் கட்டிப்பிடித்து இழுத்து வந்து நிறுத்துவதிலும், மனதிற்கு ஈடு இணை உலகில் வேறு எதுவுமே இல்லை!

இந்த பொல்லாத மனத்திற்கு ஏன் இந்த அவசரம்? அதுவும், உடல் காய்ச்சலால் வெந்து கொண்டிருக்கும்போது, உள்ளம் மட்டும் சதா ஓய்வு–ஒழிவு இன்றி எண்ணக் குமிழிகளை ஏன் உற்பத்தி செய்து கொண்டிருக்கவேண்டும்? காய்ச்சலினால் உடல் பாதிக்கப்படுவதுபோல, உள்ளமும் பாதிக்கப்படுவதில்லையா? அப்படியானால்......?

இன்னமும் கண்ணைத்திறக்கவில்லை—திறக்கத் திராணியும் இல்லை. இந்தச் சமயத்தில் என் மனைவி சூடாகக் காப்பி, கொண்டு வந்து கொடுத்தாள். சூடான காப்பி உடலுக்கும், உள்ளத்திற்கும் இதம் அளித்தது. கண்களை மூடினேன். மீண்டும் எண்ண அலைகள் சிதறின.

அதோ! இதயத்திரையில் எண்ணத்தின் நிழல் அலைகள் ஒன்றன் பின் ஒன்றாகப் படிகின்றன.

மனம் நடத்தும் போராட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள எண்ணி, கண்களை இறுக மூடிக்கொண்டேன் ஆனால், காட்சி தொடர்ந்து விரிகின்றது.

* * *

நான் பிறந்த பொன்னாடு – தென்னாடு. அதன் ஒரு அங்கமாக உள்ள எங்கள் கிராமத்தின் போஸ்ட் மாஸ்டர் யார் வருகைக்காகவோ வாசலில் காத்து நிற்கிறார். கையில் ஒரு சிறு உறையை வைத்துக்கொண்டு, அதையே மேலும்–கீழும் உற்றுப்பார்க்கிறார். அவரும் மனிதர் தானே – அதற்குள் என்ன தான் எழுதியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆவல் இருக்காதா?

கடித உறையை ஒரு முறை பார்ப்பதும், கிழக்குப் பக்கமாக, தெருவில் எட்டிய தூரம் வரையில் பார்வையை ஓட விடுவதுமாக நின்று கொண்டிருந்தார். அவரின் உள்ளத்தில் ஏற்படும் துடிதுடிப்பு முகத்தில் தோன்றி மறைகின்றது; அவருக்கு ஏன் இவ்வளவு அவசரம்?

யாருக்கு வந்த தந்தியாக இருந்தால்

அவருக்கென்ன? கொடுக்கவேண்டியது அவருடைய பொறுப்பு– அவ்வளவு தானே!

அதோ! தெருவிலே ஒரு உருவம்–பெண் உருவம் வேகமாக வந்துகொண்டிருக்கிறது. தூரத்தில் வருவதால் யார் என்று தெரியவில்லை. நடையில் ஒரு வேகம்–பதட்டம்; வெறியுணர்ச்சி என்று கூடச்சொல்லலாம். நடை ஓட்டமாகின்றது. கடித உறையுடன் காத்து நிற்கும் போஸ்ட் மாஸ்டரைப் பிடிக்க அந்த உருவத்திற்கு ஏன் அத்தனை அவசரம்?

ஓடிவந்த உருவம் வேறுயாருமல்ல. எனது அன்புத் தெய்வம்–என் அன்னைதான். ஏன் என்று கேட்கிறீர்களா? எல்லாம் இந்த பொல்லாத மனத்தின் கற்பனை எண்ணம் தான்.

''தந்தி யாரிடமிருந்து வந்திருக்கு''?

''கோலாலம்பூரிலிருந்து தான் வந்திருக்கு. பிரித்து பார்த்தால்தான் என்ன விஷயம் என்று புரியும்''.

''சீக்கிரம் பிரித்து படி தம்பி''

''தாயே பராசக்தி! தந்தி சேதி நல்ல சேதியாக இருக்கவேண்டும். என் பிள்ளையின் உடம்புக்கு எந்தக் கெடுதலும் ஏற்படக் கூடாது.'' என்று என் தாயின் வாய் தன்னை அறியாமலேயே முணுமுணுக்கிறது. கண்ணை மூடிக்கொண்டு, கனவுகாணும் நிலையில் கடவுளை வேண்டுகிறார் என் அன்னை.

தந்தி என்றவுடன், தனயனின் உடல் நலத்தில் தாயின் உள்ளம் ஒட்டி நிற்பதேன்? மனதில் ஏற்படும் திடீர் சலனத்திற்கும், சம்பவங்களுக்கும் ஏதாவது தத்துவரீதியாக தொடர்பு உண்டா? அல்லது எல்லாம் வெறும் கற்பனை எண்ணந்தானா?

போஸ்ட் மாஸ்டர் தந்தியைப் பிரிக்கிறார். தந்தியில் உள்ள வாசகத்தில் கண்கள் தாவிப் பாய்ந்து, குத்திட்டு நிலையாக நிற்கின்றன. தந்தியைப் பிடித்திருக்கும் கரங்கள் இலேசாக நடுங்குகின்றன. கண்களிலே நீர் முட்டி மோதி வெளியே வர காத்து நிற்கிறது.

இவை எல்லாவற்றையும் கவனித்து நிற்கும் எனது தாயாரின் உள்ளத்தில், பொங்கி எழும் துயர் படிந்த சாயல் பெருமூச்சாக வெளிப்படுகிறது.

''என்ன தம்பி எழுதியிருக்கு''? இது எனது தாயின் குரல் ஆனால், குரலில் ஒரு கரகரப்பு, ஏக்கம் கலந்த தொனி, ஸ்வரம் குறைந்த ஸ்தாயில் ஒலிக்கிறது.

''தம்பி இறந்துவிட்டதாம்!'' வீணையின் தந்தி அறுந்து, அபஸ்வரம் எழும்புவது போல, ஒலி வெளிப்பட்டு உடைகிறது. அவ்வளவுதான்!

அடுத்த நிமிடம் ஒரே ஒப்பாரி. ஊர் கூடிவிட்டது. விஷயம் தெரியாத சில விசாரிக்கின்றனர். மெல்ல கிராமம் முழுவதிலும் செய்தி பரவுகிறது. அனுதாப ஒலிகள் எதிரொலித்து நிற்கின்றன.

எல்லோர் இதயமும் கனத்துக் காணப்படுவதாகத் தெரிகிறது. பாவம் தாய்–தந்தை அண்ணன்–தம்பி எல்லோரையும் பிரிந்து கண் காணாத இடத்தில், அனாதையாகவா சாகவேண்டும்? இது ஒரு அனுதாபக் குரல்.

''நமக்கே மனம் கேட்கவில்லையே பெற்ற மனம் என்ன பாடுபடும்''? இது மற்றொரு குரல்.

* * *

உடம்பு 'குப்'பென்று வியர்த்து கொட்டுகிறது. பயங்கரமான எண்ண அலைகளில் மூழ்கி எழுந்த உள்ளம், கன்னத்தில் மட்டும் கண்ணீரை வழியவிட்டிருந்தது. துடைத்துக் கொண்டு மெதுவாக உட்கார்ந்தேன். காய்ச்சலும் விட்டிருந்தது.

ஆனால், இவ்வளவு சலனத்தையும் ஏற்படுத்திய உள்ளம் சாம்பி நின்றது. எல்லாம் ஒரு நிமிட நினைவின் ஓட்டத்தில், சிதறி விழுந்த ஒரே துளி! ☆

துன்பக் கேணி!

திரைகடல் ஓடியாவது திரவியம் தேட வேண்டுமாமே? அதற்காக, திரைகடல் ஓடி சுதந்திரத்தைப் பணயம் வைத்தால் என்ன? கடைசியிலாவது மொத்தமாக ஏதாவது கொண்டுவரலாமே!

—புதுமைப்பித்தன்

சிறுகதை மன்னன்

கவிஞர் ஆறுமுகனுர்

எழுத்துலகில் புதுயுகத்தை ஆக்கிவைத்த சிற்பி
  இன்சுவைநீ ராற்ருெழுக்காய் இலங்கும் எழுத்தாளன்
பழுத்த தமிழ்க் கலைரசிகன்! மின்வெட்டு நடையில்
  பற்பலவாம் சிறுகதைகள் படைத்திட்ட மேதை
விழுப்பமிகும் தமிழ்நடையில் புரட்சியினைக் கொண்டோன்
  வீட்டோரால் வெறுத்தொதுக்கப் பட்டபின்னும் அன்னேன்
செழிக்கின்ற தமிழ்வாழ்வே தன்வாழ்வு என்று
  சிந்தையினில் ஒருநாளும் மறவாது வாழ்ந்தோன்:

★ ★

துடிப்புமிகும் பெரும்புரட்சி அவனெழுத்தில் உண்டு
  துச்சமெனச் சமுதாயத் தீநிலையைச் சாடி
அடிக்கின்ற உளமுண்டு! அவனமைத்துக் கொண்ட
  அழகுமிளிர் தமிழ்நடையில் வெறியுண்டு! நெஞ்சம்
வெடிக்கின்ற கொடுமைகளை வீழ்த்திவிட எண்ணி
  விழைகின்ற துணிவோடு விரைகின்ற பேனு
வடிக்கின்ற மையுண்டே அத்தனையும் கண்ணீர்!
  வையகத்துக் கவைநல்ல வானகத்து நன்னீர்!

★ ★

பாக்கோடு வெற்றிலையைக் கலந்துண்பான்! பின்னே
  பைந்தமிழில் புதுக்காதை உமிழ்ந்திடுவான்! தூய
நோக்கோடு பணிசெய்தான்! அவனைத்தான் வாழ்வில்
  நோகவைத்தப் பேர்களையும் நோகாமற் செய்தான்!
சாக்காடு காணும்வரை தமிழுக்கே வாழ்ந்து
  சளைக்காமல் தொண்டாற்றி மகிழ்ந்திட்டான்! நல்ல
பூக்காடுபோல் "சோவி" நம்"புதுமைப் பித்தன்"
  புகழ்கமழ்ந்தே பூமியினில் அமரனென வாழ்க!

எங்களிடம் எல்லாவிதமான,
பலசரக்கு, ஸ்டேஷனரி ஷாப்
சாமான்களும்,

M. G. M.

கறி மசாலே பொடிகளும்.
சில்லறையாகவும் மொத்தமாகவும்
கிடைக்கும்.

ஜெய்ஹிந்த் ஸ்டோர்

83, ஜலான் லங்கார்,

அலோர்ஸ்டார், கிட்டா

எழுத்துலக மேதையின்
குடும்பத்தார்க்கு எங்கள் வாழ்த்துக்கள்

உங்களே அழகுள்ளவர்களாக
ஆக்கிக்கொள்ள
விரும்புகிறீர்களா?

எங்கள் முடி திருத்தும் நிலேயத்திற்கு
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்!

வின்சர்
ஹேர் டிரசிங் சலூன்

14, ஜாலான் ராஜா,

அலோர்ஸ்டார். கிட்டா.

எங்களிடம் புத்தம் புதிய கறி
மசாலேத் தூள்களும், அரிசி, பூலர்
மாவும் சகல விதமான பலசரக்கு
மருந்துச் சாமான்களும், ஆஸ்ட்
ரேலியா நெய் அன்ட் ஆட்டா மாவும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்,
விலே சகாயமாகவும் கிடைக்கும்.

S. M. நைனுமுகம்மது,

நீ. 95, ஜாலான் லங்கார்,

அலோர்ஸ்டார், கிட்டா.

P. O. BOX: 8 TEL: 241

எழுத்துலக மேதையின்
குடும்பத்தார்க்கு எங்கள் வாழ்த்துக்கள்

KONG NGAI AIR CONDITION
PHOTO STUDIO

130. Main Road, Sungei Siput

கோங் ங்காய்
போட்டோ ஸ்டுடியோ

[குளிர் வசதியுள்ளது]

130, மெயின் ரோடு,
சுங்கை சிப்புட்

பித்தனும் புதுமையும்

(ந. சிதம்பர சுப்ரமண்யன்)

1940-ம் வருஷம் காரைக்குடியில் இருந்தேன். சில நண்பர்களுடன், பத்திரிகைகளையும் எழுத்தாளர்களைவும் பற்றி பேச்சு நடந்துகொண்டிருந்தது. உடனிருந்த நண்பர்கள் மறுமலர்ச்சி எழுத்தாளர்களிடம் அவ்வளவாகஅக்கரைகாட்டாதவர்கள். பெரும்பாலும் நகைச்சுவையிலும் கதைச் சுவையிலும் மனத்தைக் கொடுப்பவர்கள்.

ஒரு நண்பர் சொன்னுர் "ஐயா! நீங்கள் புதுமைப்பித்தனைப் பற்றி மிகவும் சிலாகிக்கிறீர்களே? அவர் என்ன சொல்ல நினைக்கிருர் என்பது வாசகர்களுக்குப் புரிகிறதா?" என்ருர்.

நான் சொன்னேன், "நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. புதுமைப் பித்தனின் புகழ்பாடுபவர்கள் அவர் கதைகளின் உட்கருத்துக்களைப் புரிந்துகொள்ளாமல் பேசுகிருர்கள் என்றுதான் நீங்கள் நினைக்கிறீர்கள் போலும். நீங்கள் நினைப்பதுபோன்ற புகழ்ச்சியினல் ஆசிரியருக்கோ வாசகர்களுக்கோ ஒரு வித பயனுமில்லை. ஆனல், இலக்கியத்தின் ருசியை அனுபவிப்பதற்கு ரசனைவேண்டும். இலக்கிய ரசனையை வைத்துத்தான் எழுத்தை எடைபோடவேண்டும்.

'அப்படியானல் எங்களுக்கு இலக்கிய ரசனை இல்லையா? நாங்கள் மற்ற கட்டுரை, கதைகளைப்படித்து புரிந்துகொள்ளவில்லையா? அனுபவிக்கவில்லையா? இவர் எழுதுவது மட்டும் ஏன் புரியாமல் போகவேண்டும்? இவரும் தமிழில்தானே எழுதுகிருர்!"

'ஐயா! வார்த்தைகளைப் புரிந்துகொண்டு விட்டால் பொருளையும் புரிந்துகொண்டுவிடலாம் என்று நினைக்கிறீர்கள் அப்படியில்லை. "தத்துவம் அவர்" "அது நீதான்" என்பதில் புரியாத வார்த்தை இல்லை. ஆனல், அதன் உட்பொருளை உணர்ந்தவன் மெஞ்ஞானியாகிருன். ஆகவே எந்தக் கலையை அனுபவிப்பதற்கும் அதில் சிறிது பழக்கமும், பயிற்சியும் வேண்டும். இவையில்லாவிட்டால் பலதரப்பட்ட நூல்களை நாம் அனுபவிக்கமுடியாது" என்றேன். நண்பர் பதில் சொல்லவில்லை. ஆனலும் நான் சொன்னதை ஒப்புக்கொண்டதாகவும் தெரியவில்லை.

இந்த நண்பர்களைப் போலவே அன்று அனேகம் பெயர்கள் புதுமைப் பித்தனின் இலக்கியப் படைப்புக்களை அனுபவிக்கத் தெரியாமல் பரிகசித்தனர். புதுமைப் பித்தனே ஒரு கட்டுரையில் சொல்லியிருக்கிருர் 'ஒரு பரம ரசிகர் இந்த மனிதன் கதை எழுதுவதை எப்பொழுது நிறுத்திக்கொள்வார்" என்று ஆவலுடன் கேட்டார். இந்தப் பரம ரசிகருக்குத்தான் எனது அடுத்த புத்தகத்தைச்சமர்ப்பிக்கப்போகிறேன்" என்று சொல்லியிருக்கிருர்.

ஆனல் இன்று எல்லோரும் புதுமைப் பித்தன் எழுத்தின் வலிமையை மிகவும் கொண்டாடுகிருர்கள். புதுமைப் பித்தன் கதைகளைப் புகழ்வதுகூட எழுத்தாளர்களுக்கிடையே ஒரு நாகரிகமாகிவிட்டது. நான் ஏன் இதைப் பற்றிக் குறிப்பிடுகிறேன் என்ருல், எந்த தேசத்திலும் எந்தக் காலத்திலும், இரண்டுவித இலக்கியங்கள் உண்டு. பழைய நூல்களில் நாம் கேள்விப்பட்டிருக்கிரேம். ஆற்றில்விடப்பட்ட ஏட்டுச் சுவடிகளில் பெரும்பாலும் ஆற்ரேடு போய்விட்டன. ஒன்றுதான் ஆற்றை எதிர்த்துச் சென்றது என்று. அதைப் போலவே அந்த அந்தக் கால தேவைகளையொட்டி, காலத்திற்கேற்ப எழுதப்படும் இலக்கியங்கள் ஒருவகை. இது

பெரும்பாலும் மக்களால் விரும்பப்படுபவை. ஆனால் வேறு சிலர், கால மற்றகாலத்தில் நிலைத்து நிற்கும் இலக்கியங்களை சிருஷ்டிக்கிறார்கள். நாள் ஆக ஆக இந்த நூல்களின் மதிப்பு ஏறிக்கொண்டே போகும். ஆனால் முன் சொன்ன நூல்களின்மதிப்போகுறைந்து கொண்டே போகும். ஏனென்றால் அந்தக் காலப் பிரச்னைகள்மாறிவிட்டிருக்கும். அதைப் போலவே, நூலின் செல்வாக்கும் மாறிவிடும். சிறந்த நூல்களோ, பெரும்பாலும் நூலாசிரியரின் வாழ்நாட்களில் புறக்கணிக்கப்பட்டிருந்தாலும் பின் நாட்களில் சிரஞ்சீவியாய் ஒளிவிட்டுக்கொண்டிருக்கும். உயர்ந்த இலக்கியங்களைப் படைத்த பெரும்பாலான கவிகளின் வாழ்க்கையில் கண்ட உண்மைகள் தாம் இவை. புதுமைப் பித்தனின் வாழ்க்கையிலும்கூட இதைத்தான் கண்டிருக்கிறோம். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

நான் முதன் முதலாக அவரைச் சந்திப்பதற்கு முன்பே, அவரின் கதைகளைப் படித்திருந்தேன். அவருடைய முகம் தெரியாமலிருந்தாலும், அகத்தை மட்டும் அறிந்திருந்தேன். அவரது எழுத்திலிருந்த வேகமும், புதுமையும் என்னைக் கவர்ந்திருந்தது. மணிக்கொடி காலத்தில் புதுவித இலக்கியங்கள் படைக்கப்பட்டுவந்தன. ஆனாலும் இந்தப் புதுமை இலக்கியங்களுக்குள்ளேயும் ஒரு புதுமையை உண்டுபண்ணிக்கொண்டிருந்தவர் புதுமைப் பித்தன்.

என்ன புதுமை அவர் எழுத்தில் இருந்தது? நடையில் புதுமை! சில வார்த்தைகள் சில வரிகள் அர்த்த புஷ்டியுள்ளதாய் இருக்கும். அனேக பக்கங்களில் சொல்லவேண்டிய கருத்தை ஒரு வார்த்தை தாங்கி நிற்கும். சில கதைகளின் அமைப்பைப் பார்த்தால் வசன கவிதையைப் போல் இருக்கும். கருத்தில் புதுமை கடவுளைப் படைத்த சிற்பி, தன் சிருஷ்டியின் அழகை அனுபவிக்கத் தெரியாத ஜனங்கள் அதன் காலில் விழுந்து வணங்குவதைக் கண்டு நரக வேதனைப்படுகிறான் என்பது;

அகலிகையின் தவறை மன்னித்து அவளுக்குப் புத்துயிரளித்த இராமன், தவறு செய்யாத சீதையை அவமதித்து அக்கினியில் பிரவேசிக்கச் செய்தார், என்பதைக் கேட்டு, அகலிகை மறுபடியும் கல்லானாள் என்பது.

பொதுப்பணத்தைக் கையாடிய மாணிக்க வாசகப் பெருமான், சொன்ன பொய்யை மெய்யாக்க சிவபெருமான் நரியைப் பரியாக்கி ஒரு பித்தலாட்டம் செய்ததற்கு பாண்டியனிடம் அடிவாங்கினார் என்பது;

இவை போன்ற புரட்சிகரமான பார்வையோடு பழமையையும் பார்த்து, அவற்றிலுள்ள கோளாறுகளைப் பரிசீலனை செய்து, உள்ளக் கருத்துக்களை வெளியிடுவதென்பது அவ்வளவு சுலபமானதல்ல. பழமையைக் காட்டி புதுக் கண்ணோடு பார்த்தார் புதுமைப்பித்தன். நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று சொன்ன நக்கீரர் பரம்பரையில் வந்த புதுமைப் பித்தன், கடவுளாயிருந்தாலும் குற்றம் செய்தவரைத் தண்டிக்கத் தயங்கியதில்லை. அதனால் இராமனையும் சீதையையுங்கூட இலேசில்விட்டுவிடவில்லை. பழமை என்பதால் எல்லாம் உயர்ந்ததாகிவிடாது'' என்று காளிதாசன் சொல்லியது போல், பழமை எல்லாவற்றையும் அப்படியே வைத்துக்கொள்ள புதுமைப்பித்தன் மறுத்தார்.

கருத்திலும் புதுமை, அவருடைய உவமைகளும் உதாரணங்களும் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்பட்டு நைந்து போனவைகளாய் இராது. ''எங்கெங்கோ வாரியிறைத்த பிரம்மதேவனின் சிதறுண்ட நம்பிக்கைகள் நட்சத்திரங்கள்'' என்று அவர் சொல்கிறார். மனித நம்பிக்கைகள் சிதறுண்டு போவது சகஜம். ஆனால் புதுமைப்பித்தன் எழுத்தில், பிரம்மதேவன் நம்பிக்கையே சிதறுண்டு போகிறது!

''ஊர் ஆசை கட்குடி மாதிரி ஒரு போதை வஸ்து'' ''அடிமை நாட்டினர் மாதிரி அடங்கி ஒடுங்கி வளர்ந்திருக்கும் மரங்கள்'' இப்படி உவமைகள் புது மாதிரியாக இருக்கும். நடையிலும் புதுமை. ஹாஸ்யத்திலும் புதுமை. அவருடைய சிரிப்பு கேலிச் சிரிப்பு அல்ல. பிறரைப் புண்படுத்தும் சிரிப்பும் அல்ல. தான் புண்பட்டு, அந்தச் சோகத்திலிருந்துவரும் ஒரு வேதனைச் சிரிப்பு. ஹாஸ்யத்தைவிட சோகத்தைத் தாங்கி வரும் ஒரு சிரிப்புக்கு ஒரு உதாரணம்:

அந்த திவ்ய பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால் சிறு தூறலாக மழை சிணு சிணுத்துக்கொண்டிருக்கும் பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழிநெடுக சேற்றுக் குழம்பு. சாலை

ஓரமாக முனிசிபல் கங்கை — அல்ல யமுனை தானே கறுப்பாக இருக்கும்—அதுதான் பிறகு இரும்பு வேலி. அதற்குச் சற்று உயரத்தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம். மறுபக்கம் வரிசையாக மனிதக் கூடுகள். ஆமாம், வசிப்பதற்குத்தான்....

மற்ருெரு இடத்தில் சொல்கிருர். "நல்லார் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" ஒரு தத்துவப்பிரமை. இதற்கு எதிர் மறையாக "தீயார் அவர் பொருட்டு சிலரை வலுவாகச் சிறை செய்யவேண்டியது"என்பது சமூக உண்மை.

இப்படியே அவர் சொல்லும் உண்மைகள் சொல்லும் முறை, கையாளும் கற்பனைகள் இவைகள் எல்லாவற்றிலும் ஒரு புதுமையும் வேகமும் உணர்ச்சியின் ஆழமும் இருந்தன. எந்த விஷயத்தையும் கூசாமல், பயப்படாமல் சொல்லுவார். ஏனெனில், கலைரசனைக்கு நல்ல விஷயம் என்பது கிடையாது. விஷயத்தைச் சுவைபடச் சொல்வதே கலைஞனின் வேலை, என்னும் அடிப்படையில் அவர் எழுதுவார்.

இதனுல்தான் ஒரு நண்பர் கேட்டார் "ஐயா! உங்கள் புதுமைப்பித்தன் வேதாளம், பிரும்ம ராட்சஸ், பிரேத மனிதன்,பைத்தியம், பிசாசு, இப்படிப்பட்ட விஷயங்களையே கையாளப் பிரியப்படுகிருரே" என்று. மனித சிருஷ்டிகளையே உயர்ந்தவைகளாக இலக்கிய கர்த்தா செய்ய முடிகிறதில்லை. இப்படிப்பட்ட பயங்கர மனிதத் தன்மையுமுள்ள உயிர்ப்பொருளாக ஒரு ஆசிரியன் செய்துவிட முடியுமானுல் அதுவே இலக்கிய வெற்றிக்குப் போதுமானது.

புதுமைப்பித்தன் புதுமையில் உள்ள பிரியத்தினுல் பழமையை இடித்துத் தள்ளவோ, அல்லது புறக்கணிக்கவோ விரும்பவில்லை. அடிப்படைத் தத்துவங்களில் அவர் பழமையிலிருந்து நழுவியதில்லை. மனித வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும் பழமையின் அஸ்திவாரம் மிகவும் அவசியம் என்று அவர் நினைத்தார். ஒருதரம் அவரிடம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவர் வாயைக் கிளறுவதற்காக "பழங்கதைகள் பேசிப்பேசித் தான் இந்த நாடு குட்டிச்சுவராகிவிட்டதே என்றேன். அவர் சொன்னுர் "நீங்கள் நினைப்பது தவறு. பழமை என்பதுதான் நம் அஸ்திவாரம் "ஐதீகம்" என்பது கலையின் செவிலித்தாய். இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் பாருங்கள். அமெரிக்கா கலையில் ஐதீகம் இல்லாமல் எப்படித் தவிக்கிறது" என்று

பண்டித மனப்பான்மையையும், ரசனையற்ற படிப்பையும் புதுமைப் பித்தன் வெறுத்தார் என்ருலும் பண்டைய இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டவர். கம்பராமாயணத்தில் மனத்தைப் பறிகொடுத்தவர். கம்பராமாயணத்தை எடுத்துக்கொண்டால் நேரம் இடம் எல்லாவற்றையும் மறந்துவிடுவார். சில பாடல்களை எடுத்துக்கொண்டு மிகவும் ரசமாக எடுத்துச் சொல்வார்.

ஆனுலும், பழமை என்பதற்காக எல்லா இலக்கியங்களையும் அப்படியே நம்பிவிடமாட்டார். அந்தாதி என்ற ஒரு செய்யுள் வகையைப் பற்றி அவர் விளையாட்டாகச் சொன்னுர் "இது ஒரு சிறுபிள்ளைகள்,கையை காலுக்குள் விட்டுக்கொண்டு ரயில்வண்டி விளையாட்டு விளையாடுவார்களே அதைப் போன்றதொரு விளையாட்டு" என்ருர்.

அறிவின் கூர்மையாலும், இதயத்தின் மென்மையாலும், எல்லாவற்றையும் கிரகிக்கும் தன்மையாலும புதுமைப்'பித்தன் தனக்கென ஒரு இடம்பிடித்துக்கொண்டு நிகரற்று விளங்குகிருர். அவர் கற்பனையின் ஆழத்தையும், கருத்தின் ஆழத்தையும் எழுத்தின் ஆழத்தையும் நன்ருகப் படித்து, சுவைத்து அனுபவிப்பதுதான் அவருக்கு நாம் செலுத்தும் நன்றியாகும்.

எப்படி மாண்டார்?

அண்மையில் காலஞ்சென்ற தியாகராஜபாகவதர், தாம் சொந்தத்தில் எடுத்த "ராஜமுக்தி" சினிமாவுக்கு, கதை வசனம் எழுதிய அமரர் புதுமைப்பித்தன், பாகவதரின் அழைப்பின் பேரில், படப்பிடிப்பின் போது புனு சென்ருர். அந்தச் சமயத்தில் தான் காசநோய் பிடிக்கப்பட்டு, திருவனந்தபுரம் திரும்பியதும் உயிர் துறந்தார் என்பது நினைவு கொள்ளத்தக்கது.

அங்கொன்றும் இங்கொன்றும்

மு. அ. லத்தீப்

தமிழில் சிறுகதை எழுதுவோர் பொதுவாய் மனித இனத்தைக் கதாபாத்திரங்களாய் உலவவிடுவதுதான் வழக்கம். அப்போதுதான் வாசகப் பெரு மக்களிடமிருந்தும் "சபாஷ்" கிடைக்கும். மாறாய் விலங்கினத்தைக் கதாபாத்திரங்களாய்த் தமது கதைகளில் உலவவிடுவோரும் உண்டு. இது வெகு அபூர்வம். விலங்குகளை கதாபாத்திரமாய் வைத்துக் கதையெழுதி ஓர் எழுத்தாளன் வாசகர்களின் பாராட்டைப் பெறுவதென்பது நமது மலாயாவைப் பொறுத்த அளவில் துர்லபம் என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகின்றது. ஆனால் மறைந்த சிறுகதை உலகின் மன்னன் புதுமைப் பித்தன் அவர்கள் விலங்கினங்களுக்கு உயிர் கொடுத்து ஒரு கதை எழுதியிருக்கிறார். அந்தக் கதையை எப்பொழுது எழுதினரோ நானறியேன் பராபரமே! அந்தக் கதையை இன்று படித்தாலும் நம்மை மறந்து "ஆகா அற்புதம்!" என்று சொல்லும் அளவில் உயிர்த் துடிப்பு அதில் காணப்படுவதை மட்டிலும் என்னல் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

"எப்போதும் முடிவிலே இன்பம்" என்பதுதான் அந்தக் கதை. முயல்தான் அந்தக் கதையின் கதாநாயகன். "முயலினி" (என்ன விழிக்கிறீர்கள்? புதுமைப் பித்தன் அவர்களின் கற்பனைப்படி முயலுக்கு முயலினிதான் பெண்பால்!) தான் கதாநாயகி! வில்லனகை கறுப்பு நாயொன்று வருகிறது! மற்றும் நரி, ஆமை முதலிய விலங்கினமும், கலெக்டர், மாலி ஆகிய இரு மனித இனப் பாத்திரங்களும் வருகின்றன. இதில் என்ன அழகென்றால் அவ்விரு மனித இனத்துக்கும் "சிருஷ்டிகர்த்தா" அவர்கள் பேசும் சக்தியைத் தரவில்லை! ஏனைய கதாப் பாத்திரங்களான விலங்கினங்கள் சங்கத் தமிழில் சண்டப்ரசண்டம் செய்கின்றன எழுத்துலக மேதைப் புதுமைப் பித்தன் அவர்களின் கற்பனை வளமெனும் "திருவரு"ளால்!

அந்த முயல் சாதாரண முயல் அல்ல! அது நாலு வேதம், ஆறு சாஸ்திரம் மற்றும் தர்க்கம் வியாகரணம் எல்லாம் கற்ற ஆசார முயல். என்றாலும் புதுமைப் பித்தன் அவர்களின் கருத்துப்படி "திரிகரண சுத்தியாக"த் தெய்வத்தின்மீது பாரத்தைப் போட்டு வாழ்வின் சுகங்கள் எல்லாம் ஒன்று பாக்கி விடாமல் அனுபவித்துவந்த முயல் அது!

அந்த முயல் கலெக்டர் பங்களாவில் வசிக்கிறோம் என்பதைத் தெரிந்துகொண்டதும் "தலைகால் தெரியாமல்" குதியாய்க் குதிக்கத் தொடங்கிற்று! பங்களாவைச் சுற்றிலும் குழிகள் பறித்து ஏகக் கலாட்டாச் செய்தது. கலெக்டருக்கு வந்தது கோபம்! தோட்டக்காரன் மாலியிடம் சொல்லி அந்த முயலை தொலைத்துக்கட்ட ஏற்பாடு செய்தார். மாலியோ, வயோதிகன். அந்தப் 'பொல்லாத' முயலின் கண்ணாமூச்சி விளையாட்டின் முன் அவன் எம்மாத்திரம்?

"தலைவன் நாயை ஏவ, நாய் தனது குட்டியை ஏவிய கதையில் மாலி, ஒரு கறுப்பு நாயை அந்த உத்தியோகத்திற்கு அமர்த்திக் கொண்டான். அந்த நாயைப் பற்றி நான் சொன்னல் அவ்வளவு சுவையாகவிருக்காது. ஆகையால் மறைந்த புதுமைப் பித்தன் அவர்களே இப்போது சிறிது அதைப் பற்றிச் சொல்லுவார்கள்:

இந்தக் கறுப்புக் குட்டி பறைநாய்; அதிலும் பட்டணத்துப் பறைநாய். அதற்கு முயல் என்றால் எப்படி இருக்கும் என்று கூடத் தெரியாது. மேலும் அது எழுத்தாளர் அல்ல; சொந்த மனசினலோ, இரவல் விவகாரத்தினலோ கற்பனை பண்ணிக்கொள்ளுவதற்கு அதற்குச் சக்தியில்லை.

ஆகா, இப்படிச் சொல்ல யாரால் முடியும்? நாயைமட்டிலுமா அவர் இப்படித்

(29-ம் பக்கம் பார்க்கவும்)

முயற்சி வெல்க

சுதந்திர மலாயாவில் எழுத்தாளர்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த வாய்ப்பைத் தமிழ் எழுத்தாளர்களுக்கு இந்த நாட்டு தமிழ்ப் பத்திரிக்கைகள் அளித்து ஆக்க மூட்டி வருவது தமிழுக்கு நல்ல காலம் என்று தான் சொல்லவேண்டும்.

எழுத்தாளர்கள் மொழி, சமுதாயம், நாடு, இம்மூன்றையும் போற்றிக்காக்க கட்டைமப்பட்டவர்கள் மட்டுமல்ல. அவைகளில் காணும் குறைபாடுகளை அவ்வப்போது துணிவோடு எடுத்துக் காட்டி குறை போக்கவும் முயற்சிக்கும் வல்லுனர்களாவார்கள்.

இத்தகைய துணிவையும், தைரியத்தையும், அச்சமின்மையையும், நிமிர்ந்த நடையினையும், எழுத்தாளர்களுக்கு போதித்து வழி காட்டியவர்களில் தலைசிறந்

தவர்கள் கவிஞர் பாரதியும் மேதை புதுமைப்பித்தனும் தான் என்பதை எழுத்துலகம் அறியும்.

அமரன் பாரதிக்கு மணி மண்டபம் எழுந்தது. அவர் குடும்பத்தினர்களுக்கு அரசாங்க உதவி கிடைத்தது. என்றால் அதற்குக் காரணம் கல்கி போன்ற நன்றியுணர்வுடைய எழுத்தாளர்களின் விடாமுயற்சிதான்.

மேதைப் புதுமைப்பித்தனுக்கு மணிமண்டபம் வேண்டாம். அவரை நம்பி வாழ்ந்தவர்கள் வாழ்ந்தால் போதும் என்ற நிலை இன்று நிலவுகிறதென்றால் இது எழுத்தாளர்களின் குறை என்று தான் சொல்லவேண்டும்.

புதுமைப்பித்தன் குடும்பத்தினருக்கு நன்றி செலுத்த முன்வரும் இந்த மலர் தயாரிப்பாளர்களின் பணி பாராட்டுக்குரியது

இம்முயற்சியை கோஷ்டிப்பூசலோ, வேற்றுமையோ கொள்ளாமல் மேதை புதுமைப்பித்தன் சந்ததியினர்களின் நலனை மட்டும் கருத்தில் கொண்டு இந்த நினைவு மலரை ஒவ்வொரு தமிழரும் வாங்கி ஆதரிக்கவேண்டும் என்பதே என் ஆசை.

முயற்சியாளர்கள் வாழ்க.

தங்களன்புள்ள,

ஆர். எஸ். சிவம்

(லேபர் அதிகாரி)

பெந்தோங்

(28ம் பக்கத் தொடர்)

திட்டினார்? நாய்க்குணம்—அதிலும் குறிப்பாக அந்தக் கறுப்பு நாய்க் குணம் படைத்த மானிடர்க்கும்தான் அந்தச் "சூடு" என்பது என் கருத்து!

அந்தக் கறுப்பு நாய் வேலைபார்ப்பதற்கு என்ன சம்பளம் தெரியுமா? (சம்பளமா? "போனஸ்" கூட உண்டு ஐயா!) தினம் தினம் கால் வீசை மாமிசமும் இரண்டு எலும்புத் துண்டுகளும் நிரந்தரச் சம்பளம்! கலெக்டர் போடும் மிச்சத் தீனிதான் "போனஸ்". எப்படி சம்பள நிர்ணயம்?

தனது உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்ள அந்த நாய் படும்பாடு... முயலின் தந்திரம்... இடையில் புகும் நரியாரின் விவேகம்... முயல்—முயலினி காதல் லீலை... —இவையனைத்தையும் இங்கே விவரிப்பதென்றால் கட்டுரை விரியும்... எனவே இந்தச் சின்னஞ் சிறிய கட்டுரையை புதுமைப் பித்தன் அவர்களின் நினைவாக இத்துடன் முடிக்கிறேன்.

புதுமைப் பித்தன் குடும்பம் தமிழ்க் குடும்பம்—தமிழ் எழுத்தாளர் குடும்பம்! அந்தக் குடும்பத்துக்குக் "கைகொடுப்பதற்காக வெளியிடப் பெறும் இந்த நினைவு மலரை ஒவ்வொரு மலாயாத் தமிழரும் அவசியம் வாங்கி ஆதரிக்கவேண்டும் என்று எழுத்தாளன் என்ற முறையில் கரம் கூப்பிப் பணிவன்புடன் விழைகின்றேன்.

பித்தனும் புகழும்

தே. வீரையா

புதுமைப் பித்தனின் பூதவுடல் மறைந்து இன்றோடு பனிரெண்டு ஆண்டுகள் முடிந்து விட்டன. அவரின் உடல்தான் மறைந்தது. ஆனால் அன்னாரின் ஆத்மா நம்முன் நின்று அவரின் அரும்பெரும் இலக்கியத் தொண்டை நினைவுறுத்துகிறது. அவரின் பெயரைச் சொல்லும்போது நம்மில் ஒரு புத்துணர்ச்சி ஒளி விடுவதைக் காண்கிறோம். அவரின் ஒவ்வொரு வியத்தகு சாதனைகளும் நம் நினைவில் நின்று ஊக்கத்தை ஊட்டுகின்றன.

சாதாரண மனிதனாகப் பிறந்து புதுமைப் பித்தன், தமது இறவாத இலக்கியங்களால், பல சாதனைகளைச் செய்துகாட்டி, இறைவன் திருவடியை அடைந்தார். இன்று நாம் புதுமைப் பித்தனை நினைக்கிறோம். போற்றுகிறோம். புகழ்கிறோம். நினைவு நாள் கொண்டாடுகிறோம். இவைகளைவிட, அவரது புரட்சிகரமான படைப்புகளுக்கு நன்றி செலுத்துகிறோம என்பதே பொருத்தம்.

புதுமைப் பித்தன் தமது படைப்புகளி லும், செயல்களிலும் புதுமையை மிளிரச் செய்தார். ஆழ்வார்களும், நாயன்மார்களும், சித்தர்களும் இறைவனை நாடிபித்துக்கொண்டு அலைந்தனர். புதுமைப்பித்தனோ, புதுமையில் பித்துக்கொண்டார். பழமையைப் போற்றி அதிலேயே அழுந்திக் கிடக்கும மக்களுக்கு அதில் நின்றும் மீள்வதற்கான வழியைக் காட்டினார். பழமையைப் புதுமைப்படுத்தி னார். அதற்காக அவர் யாகமோ, யோகமோ செய்தாரில்லை. மக்களுக்காக, நாட்டிற்காக நல்ல வழிகளைக் காட்டும் இலக்கியங்களைப் படைத்தார். சோம்பிக் கிடக்கும் மக்களைக் கண்டு வருந்தினார். அந்த அவரது வருந்துதலே அற்புதப் படைப்புக்களாக எழுந்தன.

புதுமைப்பித்தனின் எழுத்திலும், நடையிலும் புதுமையைக் கண்ட சிலர் வரவேற்றனர். சிலர் வெறுத்தனர். ஆனால் புதுமைப் பித்தனோ, எவருடைய விருப்பு வெறுப்புக்கும் மசிந்துகொடுத்தாரில்லை.

கலைஞர்கள் உயிருடன் இருக்கும்போதே அவர்களைப் பாராட்டும் வழக்கம் நம் தமிழர்களிடையே இல்லை. எலும்பைப் பேனாவாக்கி குருதியை மையாக்கி எழிற் படைப்புக்களை அளித்த நம் புதுமைப் பித்தனை "எதையோ கிறுக்கித்தள்ளுகிறார்' என்று உதாசீனப் படுத்தினர். அவரின் அற்புதப் படைப்புக்களை அறிந்து கொள்ளாது இருந்தனர். நெஞ்சம் குமுறிய புதுமைப் பித்தன், தன் உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும்வரை தன் கடமையைச் செய்தார். மக்களை விழிப் புணர்ச்சி அடையச் செய்ய அரும்பெரும் கருத்துக்களை வாரி வழங்கினார். இதனால் தான் தன் குடும்பத்தின் பிற்கால வாழ்க்கையையும் மறந்தார். தமக்கென எதையும் அவர் தனியாகத் திரட்டினாரில்லை. தம் உயிரையும் உடலையும் உருக்கி, மக்களுக்கான வாழ்க்கையையே செப் பனிட்டார். உண்மையை உணரும் காலம் வரும். அப்பொழுது தமது படைப்புக்கள் உரிய இடத்தைப்பெறும் என்று நம்பினார். வாழையடி வாழையாக வரும் எவனுக்கோ எழுதிய புதுமைப் பித்தன் தம் குடும்பத்தைப் பற்றி கவலைப்பட நேரமில்லாமல் போனதற்கு இதுவே காரணமாக இருக்கலாம்.

இன்று அவரையும், அவர் தம் படைப்புக்களையும் உணர்கிறோம். அந்த உத்தமனுக்காக இரங்குகிறோம். அவரது குடும்ப நிலை கண்டு கண்ணீர் உகுக்கிறோம். அவர்களின் வாழ்வை வளமுள்ளதாக்கப் பாடுபடுகிறோம். இது ஆய்வுமிகுந்த, ஆற்றல் மலிந்த, அறிவு தளிர்ந்த காலம். அவரின் தொண்டுக்கு நன்றி கூறும் வகையில், மலைநாட்டில் நினைவு மலர் வெளியிட்டு, அவரது குடும்பத்துக்கு நிதி திரட்டுகிறோம். இதை இந்த மலர் இல்லாமலே சாதிக்க முடி

யும். என்றாலும், அந்த அளவுக்கு தமிழர்கள் முன்னுக்கு வர அஞ்சுகிறார்கள். எனவே இந்த நிலையில் மலர் வெளியிட முன்வந்த வெளியீட்டாளர்களுக்கு மலையகத்தில் வதியும் தமிழர்கள் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளோம். வாழ்க புதுமைப் பித்தனின் நாமம். சூழ்க அவர் தம் புகழ் உலகில்.

———

"கலியாணி"

இருளில் பாதை தெரியாது தவிக்கும் பாதசாரி, ஏதாவது ஒன்றைத் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமானது என்று சங்கற்பித்துக் கொண்டு என்றும் அதை நோக்கியே செல்வான்.

—புதுமைப்பித்தன்

பெருமூச்சு தீரவேண்டும்

புதுமைப் பித்தன் சிறந்த சிறுகதை எழுத்தாளர். அவர் இன்று நம்மிடையே இல்லை; எனினும் அவரது படைப்புகள் நம்மிடம் இருக்கின்றன.

அவரது கதைகளைப் படாதிபதிகள் படமாக்கலாம்; நாடகக் குழுவினர் நாடகங்களாகத் தயாரித்து நடிக்கலாம்.

உயிரோட்டமுள்ள கதைகள் பல தீட்டியிருக்கும் புதுமைப் பித்தனை பாராட்டும் அன்பர்கள் அவரது குடும்பத்தினர்மீதும் கண்ணோட்டமிட்டால் ஒரு பெருமூச்சு தீரும்; அகலும்.

எழுத்துலகச் சிற்பிகளுக்கு ஏற்படும் அந்தப் பொருளாதாரக் குறையை நிவர்த்திப்பதுதான் வாசகர்களின் தலையாய பணிகளில் ஒன்று.

அவர் புகழ் வாழ்க!

பதிவு எண்: நெ. 107209 போன்: நெ. 845

பசிக்காக சாப்பிடா விட்டாலும்
ருசிக்காக சாப்பிடும் இடம்

மு. மு. சுல்தான் கபே

M. M. SULTAN CAFE

(CATERER FOR DINNERS & TEA PARTIES)

No. 5, KOTA ROAD,
TAIPING.

நெ. 5, கோத்தா ரோடு,
தைப்பிங்.

Sole Proprietor:

MR. V. ABDUL LATIF

புதுமைப்பித்தனின் புகழுக்குக் காரணம்

ரகுநாதன்

எப்போதோ படித்த ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது...

ஒரு வெள்ளைக்கார மாதும் அவளது நாலு வயதுக் குழந்தையும் தினம் தினம் ஒரு டிராம் வண்டியில் பிரயாணம் செய்து வந்தார்கள். அதே வண்டியில் தினம் ஒரு கறுப்பு நீக்ரோவனும் பிரயாணம் செய்து வந்தான். அந்த வெள்ளைக்காரக் குழந்தை அந்த நீக்ரோவனை தினம் தினம் ஒரு அதிசயமாகவே பார்த்து வந்தது. எப்போதும் ஒதுங்கி ஒடுங்கி ஒரு மூலையிலே அமர்ந்திருக்கும் அந்த நீக்ரோவன் ஒருநாள் கண்டக்டரிடம் ஏதோ பேசினான். உடனே அந்தக் குழந்தை தன் தாயை நோக்கி,

"அம்மா! அம்மா! அது பேசுதே! அது பேசுதே!" என்று ஆச்சரியத்தோடு கூவி விட்டது.

இதுதான் விஷயம். அந்தச் சிறு குழந்தைக்கு அந்தக் கறுத்த நீக்ரோவன்—ஒடுங்கி ஒதுங்கி ஊமையாக இருந்து வந்த நீக்ரோவன்—ஒரு மனிதனாகவே தோன்றவில்லை. அவனை ஏதோ ஒரு கறுப்புப் பொம்மை அல்லது பிராணி என்றே கருதி வந்திருக்கிறது எனவேதான் அவன் வாய் திறந்து பேசத் தொடங்கினானோ இல்லையோ உடனே அந்தப் 'பேசும் பொம்மை'யைப் பார்த்து அந்தக் குழந்தை வியந்து கூவி விட்டது.

'குழந்தைதானே! அதற்கென்ன தெரியும்?' என்று நாமும் கூறலாம்; கூறிச் சிரிக்கலாம்.

ஆனால், கலைஞர்களின் உள்ளமும் கிட்டத்தட்ட அந்தக் குழந்தையின் உள்ளத்தைப் போன்றதுதான். ஆனால், கலைஞர்கள் கண்டு கூறும் அதிசயத்தைக் கண்டு நாம் சிரிப்பதில்லை; சமயத்தில் அழுகிறோம்; சமயத்தில் வியக்கிறோம்; சில சமயம் புழுங்குகிறோம்; சில வேளைகளில் துடிக்கிறோம்; சில சமயம் மகிழ்கிறோம், இன்னும் என்னென்னவோ செய்கிறோம். நீங்களும் நானும் தினம் தினம் எத்தனையெத்தனையோ காட்சிகளைப் பார்க்கலாம். ஆனால், அதில் நமக்கு எந்த விதமான அதிசயமோ, வியப்போ, புதுமையோ தோன்றுவதுகூட இல்லை. ஆனால், கலைக் கண்ணுக்கோ அந்தக் காட்சிகளில் ஒரு புதுமை தோன்றும்; புதுமையிலே ஓர் உண்மை தோன்றும்.

இந்தக் குழந்தையின் கதையை நினைவில் வைத்துக்கொண்டு புதுமைப்பித்தனின் "மெஷின் யுகம்" என்ற கதையைப் படித்துப் பாருங்கள்.

ஹோட்டல் ஸெர்வர் யந்திரமாக வேலை செய்வதை நாமெல்லாம் பார்த்திருக்கிறோம். ஹோட்டல் தொழிலாளரின் வாழ்க்கை நிலை பற்றி ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு சாதாரணமாக ஒரு

ஹோட்டல் ஸெர்வர் தினம் குறைந்த பட்சம் பதினேழு மைல் தூரத்துக்குக் குறையாமல் ஹோட்டலுக்குள்ளேயே மேலும் கீழும் நடக்கிறான் என்று கணக்கெடுத்துச் சொல்லுகின்ற புள்ளி விவரங்களையும்கூட நாம் படித்து வியந்திருக்கலாம். அவன் அவசர அவசரமாக வருவதும், அன்றைய 'மெனு'வை (MENU) ஒப்பிப்பதும், பின்னர் ஆர்டருக்குப் பரிமாறுவதும், கணித நிபுணர் "இராமனுஜ"மே தோற்கும்படியாக, எத்தனை பேர் எது எதைக்கேட்டாலும் அதையெல்லாம் பரிமாறிவிட்டு, பில்லை மட்டும் கணக்குப் பிசகாமல் போடுவதும் நமக்குப் பெரிய அதிசயத்தை உண்டாக்குவதில்லை. சொல்லப் போனால், நாம் அவனது முகத்தைக்கூடச் சரியாக ஏறிட்டுப் பார்ப்பதில்லை. மேஜையில் மட்டும் நமக்குரிய பண்டங்கள் வருகின்றனவா என்று மட்டும் பார்க்கிறோம். அப்படியே நாம் அவனைக் கவனிக்க நேர்ந்தாலும் "பயல் பம்பரமாகத்தான் சுற்றுகிறான்!" என்று வியந்துவிட்டு அத்துடன் அடங்கி இருந்துவிடுவோம்; மேஜை மீது வந்தமர்ந்த காப்பி நமது கவனத்தை அதற்குள் திசை திருப்பிவிட்டு விடும். இல்லையா?

ஆனால், புதுமைப்பித்தன் அந்த மனித யந்திரத்தை யந்திரமாகவே நமக்கு முதலில் காட்டுகிறார். போவது, வருவது 'மெனு'வை ஒப்பிப்பது, சப்ளை செய்வது பில் போடுவது முதலிய எல்லாக் காரியங்களையும் முடுக்கிவிட்ட யந்திரப் பதுமைபோல் செய்து வந்த அந்த ஹோட்டல் ஸெர்வர் பிறகு, "சார்! உங்கள் கைக்குட்டை கீழே விழுந்துவிட்டது சார்!" என்று கூறி, அதை எடுப்பதற்காக அவன் கீழே குனிகிறபோது,

"மனிதன் தான்!"

என்று தமது மனத்துக்குள்ளேயே சொல்லித் தமது வியப்பை வெளிப்படுத்துகிறார் புதுமைப்பித்தன். இந்தச் சிறு முத்தாய்ப்பிலே அற்புதமான அதிசய உணர்ச்சி மட்டுமல்ல, அருமையான சிறுகதையும்கூட பிறந்துவிட்டது. யந்திரம் என்றால் கீழே விழுந்த கைக் குட்டையைக் கவனிக்குமா? "விழுந்துவிட்டது சார்!" என்று சொல்லுமா? அதை எடுத்துக் கொடுக்கத்தான் துணியுமா?

எனவே அவன் மனிதன்தான் என்று தெளிகிறது கதாசிரியரின் உள்ளம்.

ஆமாம். 'பொம்மை' பேசுவதைக்கண்டு அதிசயித்த குழந்தையின் நிலையை மனோகற்பிதம் செய்துகொண்டு, புதுமைப்பித்தன் யந்திரத்தை மனிதனுக்குக் காட்டுகிறார். ஏன்?

இன்றைய சமுதாயத்திலே உழைத்துப் பாடுபடும் மனிதன் எப்படி யந்திரம் போலவே வாழ்கிறான், அப்படி வாழும்படி அவனைச் சமூகம் எப்படி நிர்ப்பந்திக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள முனைவதில்லை. ஆனால், பட்டறையிலிருந்து காசு வசூலிக்கும் முதலாளி அந்த ஸெர்வரை இரண்டு கால் படைத்த யந்திரமாகவே பழக்கி, மனித உணர்ச்சிக்கே அவனுக்குச் சந்தர்ப்பமில்லாமலாக்கும் இன்றைய சமூக நிலையை, சமூகத்தின் யந்திர கதியை, எந்தத் தமிழ்க் கதாசிரியனும் இவ்வளவு சுளுவாக இன்றுவரை சொன்னதில்லை.

புதுமைப்பித்தன் இன்று தமிழ் இலக்கிய ரசிகர்களின் நெஞ்சில் நீங்காத இடம் பெற்று விளங்குகின்றாரென்றால், அதற்குரிய காரணம் அவர் எழுதிய இந்த மாதிரியான யதார்த்த நிலையை, கலா சிருஷ்டியாக்கிக் காட்டிய அவரது திறமையும் தீட்சண்ய திருஷ்டியும்தான்.

புதுமைப்பித்தனின் கதைகள் உண்மை நிலைக்கு மீறிய , சொப்பனாவஸ்தைப் புலம்பல்கள் அல்ல; அந்தச் சொப்பனாவஸ்தையின் சுகவேதனையின் பிரதிபலிப்பும் அல்ல; அவர் வாழ்க்கையை நேரடியாக, எந்தவிதக் கூலிங் கிளாசும் போட்டுக்கொள்ளாமல் பார்த்தார். வாழ்க்கையின் குரூரங்களை அதன் வசிகரங்களை, மனித வாழ்வின் சங்கடங்களைக் கண்டு, அவற்றை அற்புதமான தமிழ்வளத்தின் துணையையும் ஆட்சியையும் கொண்டு, கதைகளாக, கதையின் பாத்திரங்களாகப் பிடித்து வைத்தார் அவர். ஆம் ,புதுமைப் பித்தன் இலக்கியத் துறையில் ஒரு யதார்த்த வாதி, வாழ்க்கையில் இல்லாததை இருப்பதாகக் கனவு கண்டு தாங்களும் ஏமாந்து பிறரையும் ஏமாற்றிக் கதையளந்து வந்த தமிழ்நாட்டு எழுத்தாளர் சமூகத்திலே புதுமைப் பித்தன்தான் முதன் முதலில் வாழ்க்கையின் யதார்த்த நிலையை ஸ்பஷ்டமாகவும், ஆணித்தரமாகவும், பட்டவர்த்தனமாகவும் எழுதினார்; எழுதி வழி காட்டினார்.

மாத்தைப்படியென்று வாங்கிப் பிழைக்கும் மத்தியதர வர்க்கமும்கூட, அன்றாடங்

காய்ச்சிகளான அடித்தட்டு மக்களைப்போல் வாழ நேரும் யதார்த்தபூர்வமான நிர்ப்பந்த சங்கடத்தை உண்டாக்கும் சமூகச் சூழ்நிலையில் ஒரு எழுத்தாளனின் வாழ்க்கையை சித்தரிக்கும் 'ஒரு நாள் கழிந்தது.'

குடிப்பது கூழானாலும் கொப்பளிப்பது பன்னீர் என்று சொல்வதுபோல் மத்தியதர வர்க்கத்தின் தர்மசங்கடமான வாழ்க்கையின் மத்தியிலே, அவர்களுக்குத் தோன்றும் பெரிய தனமான எண்ணங்களுக்கு நாசூக்காக அடி கொடுத்துத் திரும்பும் 'பொய்க் குதிரை.'

யந்திர உலகில்பாடுபடும் தொழிலாளிகள் எப்படி யந்திரத்தின் பல்சக்கரங்களில் ஒன்றாக மாறி மனிதத்துவத்தை இழந்து நிற்கிறார்கள் என்பதை நினைவுறுத்தும் 'மெஷின் யுகம்.'

''என் உசுரைத்தானே உன்னால்கொண்டு போகமுடியும்? என் உடலை உன்னால் கொண்டு போக முடியுமா? ஒன்றை வேறொன்றாக மாத்தமுடியும். அழிக்கமுடியுமா?'' என்று எமனைப் பார்த்து தன்னையறியாமலே லோகாயத வாதம் பேசும், வெள்ளைக் கோயில் கிழவியின் கதையான 'காலனும் கிழவியும்.'

கொள்ளையடிக்க வந்ததிருடனுக்கும் கூட மனித உணர்ச்சி, மனித உள்ளத்தின் நல்லுணர்ச்சிகள் உண்டு என்பதைக் காட்டும் சங்குத் தேவனின் தர்மம்.'

பசியோடு போட்டி போட்டுக்கொண்டு இருக்கும் இரண்டு ஜீவன்களுக்கு மத்தியில் காமன் என்னபாடுபடுகிறான் என்பதையும், ''என்னை என்ன பிச்சைக்காரின்னா நினைச்சே?' என்று கேட்கும் விபச்சாரம் செய்யும் யுவதியின் மான உணர்ச்சியை எடுத்துக்காட்டும் 'கவந்தனும் காமனும்'

''ஒருவன் அடைந்துவிட்டால் உலகமே அடைந்துவிட்டதாகுமா?'' என்று தனி மனிதனின் வேதாந்தத் தேட்டத்தின் பலவீனத்தைக் குத்திக் காட்டும் 'குருவும் சீடனும்'

''கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே இதுதானய்யா பொன்னகரம்'' என்று ஆக்ரோஷமான முத்தாய்ப்போடு முடித்து. உடலை விற்றுப் புருஷனுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கமுனைந்த அம்மாளுவின் நிலைமையைக் கூறும் 'பொன்னகரம்'

''உலகத்துப் பெண்களை உன் சகோதரியாக நினைக்கக் கூடாதா?'' என்று இந்திரனைப் பார்த்துக் கேட்கும், புதிய கௌதமரை அறிமுகப்படுத்தி வைக்கும் 'அகல்'யை.

''அப்பாவுக்கு ஒண்ணுமே தெரியாது. இதைத் தின்னுபாரு. இனிச்சுக் கிடக்கும்'' என்று கூறி உதவாக்கரை வேதாந்தத்துக்கு சாட்டையடி கொடுக்கும் கந்தசாமிப்பிள்ளையின் திருக்குமாரத்தி கருப்பாயியை அறிமுகப் படுத்திவைக்கும் ''கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்.''

சமூகத்திலே மவுண்ட் ரோட் ரவுண்ட் டானா போன்ற நாகரிகக் கொலு வீற்றிருக்கும் ஸ்தலங்களே ஏழை மக்களுக்கு மயான ஸ்தலமாகவும் விளங்கும் உண்மையை எடுத்துக் காட்டும் 'மகா மசானம்',

பகலிலே குதிரை வண்டிக்காரனுக்கு அபராதம் போட்டுவிட்டு, இரவில் ''நாங்கள் பிறர் குற்றங்களை மன்னிப்பதுபோல் எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்'' என்று கர்த்தரிடம் பிரார்த்தனை செய்யும் தேவ இரக்கம் நாடாரை அறிமுகப்படுத்தி வைக்கும் 'நியாயம்...'

—இப்படிப்பட்ட பல்வேறு கதைகளின் மூலம் அவர் சமூகத்தை எவ்வாறு பார்த்தார் என்பதை நாம் அறிகிறோம்; அதே சமயம் அந்தக் கதைகளில் பொதிந்துகிடக்கும் யதார்த்த உண்மையையும் இனம் கண்டு கொள்கிறோம்.

இத்தகைய யதார்த்த வாத திருஷ்டியினால்தான் புதுமைப் பித்தன் தமிழ் நாட்டின் இலக்கிய சரிதப் போக்கிலே ஒரு மைல் கல்லாகவும், மார்க்க பந்துவாகவும், முன்னோடியாகவும் திகழ்கிறார். புதுமைப்பித்தன் ''பிரம்ம ராக்ஷஸ்'' போன்ற அபூதக் கற்பனைக் கதைகளையும், ''கயிற்றரவு'' போன்ற தன்வயக் கண்ணோட்டம் கொண்ட கதைகளையும் எழுதி இருக்கத்தான் செய்கிறார். ''என்னைப் பற்றிய நினைவை அழிக்க முடியுமா?'' என்று எமனிடம் கேள்வி கேட்ட வெள்ளைக் கோயில் கிழவியைச் சிருஷ்டித்த அதே புதுமைப் பித்தன்தான், நான் ஓடினால் காலம் ஓடும்; நான் அற்றுப் போனால் காலம் அற்றுப் போய்விடும்'' என்று சிந்திக்கின்ற 'கயிற்றரவு' பரமசிவம் பிள்ளையையும் சிருஷ்டித்திருக்கிறார். ஆனால் புதுமைப் பித்தன் இன்று

தமிழ்நாட்டு ரசிகப் பெருமக்களின் உள்ளத்திலும் இலக்கிய வரலாற்றிலும் நீங்காத இடம் பெற்றிருப்பதற்கு 'பிரம்ம ராக்ஷஸ்' 'கயிற்றரவு' போன்ற கதைகள் காரணமாகாது. புதுமைப் பித்தன் இத்தகைய கதைகள் சிலவற்றை எழுதியிருந்தபோதிலும் அவரது கதைகளில் பெரும்பாலானவை யதார்த்தமான பிரச்னைகளைக் குறித்ததாகவே அமைந்தன. அவருடைய கதைகள் சமூகத்தை நோக்கிப் பல்வேறு கேள்விக் குறிகளை அடுக்கின. அழுகி நாற்றமெடுத்துப்போன சமூகத்தின் ஊழல்களை அவர் கிறிப் பிளந்து காட்டினர். அன்றாட வாழ்க்கையின் வேதனைக் குரல் அவரது கதைகள் பலவற்றிலும் எதிரொலித்தது. எனவேதான் அவரால் தமிழ் வாசகர்களின் நெஞ்சில் நிலைக்கமுடிந்தது.

"வறுமை என்பது முதலாளித்துவத்தின் விலக்கமுடியாத நியதி; வியாதியும்கூட. அதனுடன் ஒரு சித்த ஸ்வாதீனமற்ற நிலைக்கு ஒப்பான பிரமையும் கூடிக்கொண்டால்...!

"மனித சமூகத்தின் அபார, அற்புதக் கற்பனையான தெய்வம் என்ற பிரமை தனக்கு ஆக்கவும் வளர்க்கவும் அழிக்கவும் சக்தி இருக்கிறது என்று வேண்டுமானுல் பெருமையடித்துக்கொள்ளலாம். ஆனுல் இந்தக் 'குசேல வியாதி'யைப் போக்கும் சஞ்சீவி மனிதன் வசம்தான் உண்டு."

—என்று புதுமைப்பித்தன் கிட்டத்தட்ட முப்பதாண்டுகளுக்கு முன்பு, தாம் எழுதிய "பக்த குசேல (கலியுக மாடல்)" என்ற நாடகத்துக்கு முன்னுரையாக எழுதினர். அந்த உணர்வுதான் அவரை இலக்கிய உலகில் ஒரு யதார்த்த வாதியாக விளங்கவும் நெஞ்சில் நின்று உதவியிருக்கிறது. அதன் காரணமாகத்தான் அவர் மங்காத புகழ் பெற்ற யதார்த்தவாதக் கதைகளைப் படைத்தார். அதன் மூலம் தமிழ்நாட்டின் யதார்த்த வாத இலக்கியத்துக்கு முன்னேடியாகவும், விளங்கினர். பிரெஞ்சு நாட்டு இலக்கியத்துக்கு பால்ஸாக் அமைந்தது போல் தமிழுக்குப் புதுமைப் பித்தன் யதார்த்தவாத இலக்கியத்தின் பிதாமகனுக விளங்குகிருர்.

எனவேதான் புதுமைப் பித்தன் காலத்திலும் சரி, புதுமைப் பித்தனுக்கும் சரி, தமிழ் இலக்கிய உலகில் பல்வேறு விதமான யதார்த்த வாத சிருஷ்டிகளைப் படைப்பவர்கள் எல்லோருமே 'புதுமைப் பித்தன்' என்ற கலைக்கூடத்துக்குள் நுழைந்து, கற்றுத் தேராமல், தமது படைப்புக்களைப் படைக்க முனையவில்லை என்பதைப் பார்க்கிறேம். இந்த உண்மையை விமர்சனர்களும், விழிப்புள்ள வாசகர்களும் நன்குணர்வார்கள். எனவேதான் இன்றும் புதுமைப்பித்தன் தமிழ் உலகிலே ஒரு வழிகாட்டியாகவும், தீபஸ்தம்பமாகவும் திகழ்கிருர்.

அவரது புகழுக்குரிய கேந்திரமான காரணம் இதுதான். ★

இனிய வாழ்த்துக்கள்

சிறுகதை உலக மன்னன், சிந்தனைச் சிற்பி புதுமைப்பித்தன் அவர்களின் நினைவாக மலரும் இந்த ஏட்டிற்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்! தமிழ்ச் சிறுகதை உலகிலே தனிச் சோபையுடனும், தனி மிடுக்குடனும் நவநவமான படைப்புக்களைத் தந்து, பாசி பிடித்துக் கிடக்கும் சமுதாயக் குட்டையைத் தூரெடுத்து, நறுமணங் கமழும் ஜீவ ஊற்ருகச் செய்வதில் அசகாய சூரராக விளங்கியவர் புதுமைப்பித்தன். அவரது எழுத்தோவியங்களனைத்தும் அற்புத படைப்புகளாகும். நடைமெலிந்து, நாடி தளர்ந்து எலும்பும் தோலுமாய் இருந்த காலத்திலும் அவர் தமது குறிக்கோளைச் சற்றும் நழுவவிடவில்லை. வளைந்திருக்கும் சமுதாய முதுகெலும்பை நிமிர்த்த அவர் இரவும்பகலும் அயராது வேலை செய்து சிறந்த சிறுகதைகளைப் படைத்தார்.

அவரது எழுத்தோவியங்கள், 'தமிழ்நாடு' 'காந்தி', 'மணிக்கொடி' முதலான ஏடுகளில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றன. அந்தப்படைப்புக்கள் ஆயிரமாயிரம் எழுத்துலகச் சிற்பிகளைக் கிளர்ந்தெழச் செய்தன; அவரது பாணியைப் பின்பற்றி எழுதும்படித் தூண்டின. புதுமைப்பித்தனின் கதைகளைப் படித்து, இன்புற்ற, உணர்ச்சிபெற்ற ரசிகப் பெருமக்கள் ஏராளம்! ஏராளம்!!

சிறுகதை உலகில் உன்னதமான இடத்தைப் பெற்றிருந்த புதுமைப்பித்தன் அவர்கள் இன்று நம் மத்தியில் இல்லையென்ருலும், அவர் அமரத்வம் பெற்றே விளங்குகிருர். அவரது எழுத்தை, பெயரை நினைவு கூராத எழுத்தாளர் இன்று எவருமே இலர். தமிழ் இருக்கும்வரை அவரது பெயரும் இருந்துவரும்; புகழும் நிலைத்துநிற்கும். அவருக்குச் சூட்டும் மணியாரமாக இந்த மலரும் விளங்கும். இத்தகு அருமுயற்சியில் ஈடுபட்ட அன்பர்கள் அனைவர்க்கும் எனது இனிய வாழ்த்துக்கள்!

வாழ்க புதுமைப்பித்தன் நாமம்!

-சி. வீ. குப்புசாமி

தலைவர், மலாயா எழுத்தாளர் சங்கம்

புதுமைப்பித்தன் புகழ் பரவட்டும்

ஏ.எம்.மீரான்

எழுத்தில் புரட்சியை ஏற்படுத்திய ஓர் பேனா மன்னனை நினைவு கூர்கையில், அவன் திறமையைக் கண்டு மலைப்பு ஏற்படுகிறது. அவன் வாழ்ந்த நிலையை எண்ணும் போது உள்ளம் வெதும்புகிறது. "புரட்சி" எழுத்து என்றால் இறை நம்பிக்கையைச் சிதைக்கும் புரட்சியல்ல. அலங்காரமான சொற்றொடர்களுக்காக, பொருளையேகொன்று அடுக்கிக்கொண்டு போகும் புரட்சியுமல்ல. உயிருள்ள வார்த்தைகளால் அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளை கருப் பொருளாக வைத்துக்கொண்டு எழுதினார். "எழுதினார்" என்று சாதாரணமாகச் சொல்லிவிட முடியுமா? எழுதியே மடிந்தார்! பேனா பிடித்தவனுக்கு பாரம்பரியமாகக் கிடைத்துவரும் சாவுதான்! வறுமை, பசி, பட்டினி, நோய்—எல்லாமே சூழ்ந்து அந்தப் புரட்சி எழுத்தாளனை சாகடித்துவிட்டன.

கவிபாடி கதை சொல்லிய காலம் ஒன்றிருந்தது. ஒரு வாரம் இரண்டு வாரம் ஊரையே திரட்டி கதை சொல்லிய காலமும் இருந்தது. இப்படி காலத்துக்கேற்றவாறு தங்கள் கற்பனைகளை வெளியிட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் இந்த முறைகள் எல்லாவற்றிலுமே ஓர் ஒற்றுமை உண்டு. செய்த கற்பனையை, எண்ணிய எண்ணங்களை வெளியிடுவதில் கவர்ச்சியையோ, நம்பும் நிகழ்ச்சிகளையோ, சுருங்கக் கூறும் முறையையோ' அவர்கள் கையாளத் தெரியாமல் இருந்தனர்.

எங்களோடு இலக்கியம் தேங்கிவிட்டது என்று கூறித் திரியும் ஓர் கூட்டம்கூட இந்த வரிசையைச் சேர்ந்தது தான். இவர்களில் ஒருவர், தம்முடைய நவீனம் ஒன்றில் கதாநாயகன் பிறந்த ஊரை விளக்க பல பக்கங்களை வீணடித்து வாசகர்களின் பொறுமையையும் சோதித்து விடுகிறார். ஆனால் நம்முடைய பேனா மன்னன் புதுமைப் பித்தன் ஓர் ஊரைப் பற்றி விவரிக்கிறார்:

வாசவன்பட்டிஎன்றால் திருநெல்வேலிஜில்லா வாசிகளுக்குக் கூடத் தெரியாது. ஜில்லாப் படத்தைத் துருவிப் பார்த்தாலும் அந்தப் பெயர் காணப்படாது. அது ஜில்லாப்படத்தின்மதிப்பிற்கு கூடக் குறைந்த ஒரு சிறுகிராமம். ஊரைச் சுற்றிலும் பனை. பெட்ரோல் நாகரீகத்தின் ஏகாதிபத்தியம் செல்லும் ஜில்லாபோர்டு ரஸ்தாகூட, அது தன் மதிப்பிற்குக் குறைந்தது என்று நினைத்துக் கொண்டு, ஒண்ணரை மைல் அப்பாலேயே செல்லுகிறது. ரஸ்தாவை விட்டு இறங்கி, கிழக்குப் பக்கமாக ஒரு மைல் சுமாருக்கு உடைமுள்ளும் சோற்றுக் கத்தாழையும் இரண்டு பக்கத்திலும் வளர்ந்திருக்கும் வண்டித் தடத்தில் சென்றால், ஒரு பனங்காட்டில், தான்தோன்றியாகச் சென்று கொண்டிருக்கும் எந்த ஒற்றையடி பாதை வழியாகச் சென்றாலும் வாசவன்பட்டி எல்லைக்கு வந்துவிடலாம்......

அந்த ஊரைப் பற்றியும் சொல்லவேண்டும். நகைச் சுவையையும் வெளிப்படுத்த வேண்டும். வார்த்தைகளை எவ்வளவு சிக்கனமாகக் கையாண்டு எவ்வளவு அற்புதமாக விளக்குகிறார்!

மறைந்த கலைவாணர். என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் நாடகமொன்றுக்குத் தலைமை தாங்கினார். ராஜாராணி கதை ஒன்றை நாடகமாக நடித்தனர். இடை நேரத்தில் நாடகத்தைப்பற்றிப் பேச எழுந்த கலைவாணர் ஆத்திரத்தால் உள்ளமுருகிப் பேசினார். "ராஜாவும் ராணியும் இப்போது நமக்கு முக்கியமல்ல. அவர்கள் நமக்குத் தேவையுமில்லை. நாடகம் மூலமாக மக்களுக்கு விளக்க எத்தனையோ கதைகள் இருக்கின்றன.

"சதைமலை" ஒருவனை ரிக்ஷாவில் வைத்து இழுத்துச்செல்கிறான் ஒரு ரிக்ஷாக்காரன். கொளுத்தும் வெய்யில் இரத்தத்தைச் சுண்டச் செய்கிறது. இன்னும் அவன் ஒன்றுமே சாப்பிடவில்லை. வண்டியில் இருக்கும்

சதைமலையை இழுத்துச் செல்வது கஷ்டத்தைக் கொடுக்கிறது. உயிரைக் கொடுத்து இரண்டு மைல் சென்றுவிட்டான். உழைப்பின் கூலியாக இரண்டணாவை விட்டெறிந்து விட்டுச்செல்கிறான்; சதைமலை. ரிக்ஷாக்காரன் பல்லைக் காட்டுகிறான் வயிற்றைக்காட்டுகிறான். ஆனால் அந்தப் பாவி திரும்பிப் பார்க்காமலே சென்றுவிடுகிறான். இந்த அனியாயத்தை அந்த ஏழை எத்தனை பேரிடம் போய்ச் சொல்லுவான்! இப்படி ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் பிரச்னைகள் இருக்கின்றன இன்று நாட்டில். இவைகளை ஏன் எடுத்து விளக்கக்கூடாது?

இச்சொற்பொழிவைக் கேட்டபோது நம் புதுமைப் பித்தனைத்தான் நினைத்துக் கொண்டேன். ஒரே குண்டால் ஒரு நாட்டையே அழித்துவிடும் விஞ்ஞானம் முதிர்ந்த யுகத்தில் ஒவ்வோர் உயிரின் உணர்ச்சிகளையும், உள்ளப் போராட்டங்களையும தொல்லைகளையும், துயரங்களையும், எழுத்தில் வடித்துக் காட்டிய அந்தப் புரட்சி எழுத்தாளரை மனதில் வைத்துத்தான் கலைவாணர் பேசியிருக்கவேண்டுமென்று நினைத்தேன்.

எழுத்தாளர்களையெல்லாம் ஒரே இனமாக அனுதாபத்தோடு நோக்கியவர் நம் புதுமைப்பித்தன். எழுத்தாளர்களின் வாழ்க்கையை தமக்கே உரிய உயிர் நடையில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அப்படிப்பட்ட ஓர் இலட்சியவாதியின் பரம்பரை என்று சிலரைப் பற்றி நேசனில் வந்த கட்டுரைகள் சிலவற்றை நான் பார்க்க நேர்ந்தது. பரம்பரையைப் பற்றி ஆராய்ச்சி செய்வதல்ல இக் கட்டுரையின் நோக்கம். என்றாலும் ஒரு வார்த்தை; இவர்களைப்பற்றி சொல்லவேண்டுமானால், இவர்களெல்லாம் புதுமைப் பித்தனோடு பழகி இருக்கலாம். பேசியிருக்கலாம். அவருக்கு நண்பர்களாகவும் இருந்திருக்கலாம். ஆனால் அவரிடம் இந்த உயிர்க்கலை, இவர்களிடம் இல்லை. இதற்குக் காரணம் குறுகிய நோக்கமும், தங்களோடு இலக்கியம் தேங்கிவிட்டதாகக் கூறும் மமதைக் குணமும், கோஷ்டி மனப்பான்மையுமாக இருக்கலாம். இவையெல்லாம் புதுமைப் பித்தனிடம் இல்லாதவை.

'பித்தன்' பிறந்த நாட்டிலேயே எடுத்துக் கொள்ளப்படாத ஓர் அரிய முயற்சியை, இங்குள்ள சிலர் ஏற்று, புதுமைப் பித்தன் குடும்பத்தார்க்கு நிதி சேர்த்துக் கொடுக்க, இம் மலர் மூலம் முயன்றிருப்பதை வரவேற்கிறேன். இந்த முயற்சிக்கு தமிழறிந்த அனைவரும் சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். ஒரு விதத்தில் தமிழகத்தைவிட மலைநாட்டில்தான் புதுமைப் பித்தனை அதிகம் புரிந்துகொண்டுள்ளார்கள் என்றுகூட சொல்லத் தூண்டுகிறது.

மலாயாவிலும் பல புதுமைப் பித்தன்கள் தோன்றவேண்டுமென்பதுதான், திரு சிறுகதைப் பித்தனின் எண்ணம் போல் தெரிகிறது. இவரது எண்ணம் நிறைவேறுவதற்கான சூசகங்களும தோன்ற ஆரம்பித்துள்ளன. பலர் புதுமைப் பித்தனைப்போல் எழுதுவதாக நினைத்துக்கொண்டு அரை நிர்வாணம் முழு நிர்வாணமாக கதாநாயகிகளை உருவாக்கிக் காண்பிக்கிறார்கள். சிலர் நிரீசுவரப் பிரசாரத்தைப் புகுத்தி "இது புதுமைப் பித்தன் பாணி" என்று விளம்பரப்படுத்துகிறார்கள். இந்தக் "காலாடி"ப் போக்குகளையெல்லாம் விடுத்து புதுமைப் பித்தனை நன்கு புரிந்துகொண்டு எழுத்துத்துறையில் அவரைப் பின்பற்றவேண்டுமென்பதே என்னுடைய ஆசை. எழுத்தாளனுக்காக கண்ணீர் வடித்துக் கதை எழுதியவர் புதுமைப்பித்தன். அவர் கோஷ்டி சேர்க்கவில்லை. தேயிலைத் தோட்டக் கூலிப் பெண்ணின் பரிதாப வாழ்க்கையை இதயக் குமுறலோடு எடுத்துக் காட்டினார். ஆபாசத்தை விரவவில்லை. இந்தச் சீரிய பண்புகளே, அவரைப் பின்பற்றும் எழுத்தாளர்களிடமும் நிலவவேண்டும். எல்லோர் இதயத்திலும் புதுமைப்பித்தன் வாழவேண்டும்.

பரவுக புதுமைப் பித்தன் புகழ்! ★

"பொன்னகரம்"

எப்படியாவது உயிர்வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்காலத்து மனிதன் புலி சிங்கங்களுடன் குகைகளில் வாழ்ந்து வந்தான். அவைகள் அவனைக் கொன்றன. அவனும் அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமையற்று வம்சத்தை விருத்தி செய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்டை. அதற்கென்ன?

★

"ஒரு நாள் கழிந்தது"

வயிற்றுப் பிழைப்புக்கு ஏதாய் இருந்தால் என்ன? சீலைப்பேன் குத்துவதும் ஒரு "பிசினஸ்" ஆக இருந்து அதில் ஒரு "சான்ஸ்" கிடைத்தால் அதையும் விட்டாவைக்கிறது.

—புதுமைப்பித்தன்

புதுமைப்பித்தன் கதைக்கரு

சி. சு. செல்லப்பா

வாழையடி வாழையாகப் பிறக்கும் வாசகர்களில் எவனோ ஒருவனுக்கு நான் எழுதிக்கொண்டிருப்பதாகவே மதிக்கிறேன்' என்று 1943ல் புதுமைப்பித்தன் எழுதினார். இந்தத் துணிச்சல் வாக்கியத்தின் உட்கருத்து புரியாமல் பல குரல்கள் வெகுண்டன. 'நான் கேட்டது, கண்டது, கனவு கண்டது காண விரும்பியது காண விரும்பாதது ஆகிய சம்பவக் கோவைகள் தான் இவை' என்று தன் கதைகளைப் பற்றி அவரே கூறியிருப்பது போல், 'Art for my sake' என்று பிரிட்டிஷ் நாவலாசிரியர் டி. எச். லாரன்ஸ் கூறி இருப்பது போல தனக்காகத் தான் எழுதியதைத் தானே மீண்டும் வந்து படிக்கப் போவதைத் தான் அவர் குறிப்பிட்டிருக்கிறார் என்று சமத்காரமாக அவர்களுக்குப் பதில் கூறியிருக்க முடியும். மற்றொன்று அந்த வாழையடி வாழை வாசகராக ஒவ்வொருவரும் இருக்க வேண்டும் என்பது அவரது விருப்பம் என்றும் விளக்க முடியும்.

புதுமைப்பித்தனின் இந்த நிமிர்க்கையும் துணிச்சலும் அவரது இலக்கிய அபிப்பிராயங்களில் மட்டுமல்ல, படைப்புகள் அத்தனையிலுமே இழையோடுகிறது. 'பேரளவு துன்பத்தின் சாயைபடியாது, வெறும் உயிர்ப் பிண்டமாக வாழ்ந்த ஒரு வாலிபன், திடீர் என்று உலகத்தின் இயல்பாக இருந்துவரும் கொடுமைகளையும், அநீதிகளையும், சமூகத்தின் வக்ர விசித்திரங்களையும் கண்டு ஆவேசமாக, கண்டதைத் தனது மன இருட்டில் தோய்த்துச் சொல்லிய பேய்க் கனவுகளாகும். எனது கதைகளின், அதாவது பூர்வ கதைகளின் கரு அதுதான்' என்று 1947ல் அவர் தன் கதைகளைப் பற்றிக் கூறியுள்ளார். அவர் மொத்தம் எழுதியுள்ள, நூறு கதைகளிலும் இந்த பேய்க்கனவுகளைச் சொல்லும் துணிச்சல் வரிகள் தான் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்கின்றன.

இன்னும், 'சுமார் இருநூறு வருஷங்களாக ஒருவிதமான சிலைப்பேன் வாழ்வு நடத்தி விட்டோம். சில விஷயங்களை நேர்நோக்கிப் பார்க்கவும் கூசுகின்றோம். அதனால் இப்படிச் சக்கரவட்டமாகச் சுற்றி வளைத்து சப்பைக் கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக் களரியையும் மனக் குரூபங்களையும் விகற்பங்களையும் உண்டாக்க இடமிருக்குமே யானால், ஏழை விபசாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலோ சமூகத்தின் தெம்பு இற்றுப் போகப் போகிறது? இற்றுப் போனது எப்படிப் பாதுகாத்தாலும் நிற்கப் போகிறதா? மேலும் இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சி தானே?... நடை முறை விவகாரங்களைப்பற்றிஎழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை' என்ற அவரது இலக்கிய சித்தாந்தத்தின் ரூபங்களாக உருவானவைகள்.

'இவையாவும் கலை உத்தாரணத்திற்கென்று கங்கணம் கட்டிக் கொண்டு செய்த சேவையல்ல... கலைக்கு எரு விட்டுச் செழிக்கச் செய்யும் நோக்கம், எனக்கோ என் கதைகளுக்கோ கிடையாது... பொதுவாக நான் கதை எழுதுவதன் நோக்கம் கலை வளர்ச்சிக்குத் தொண்டு செய்யும் நினைப்பில் பிறந்ததல்ல. அதனால்தான் என்னுடைய கதைகளில் இந்தக் கலை விவகாரத்தை எதிர்பார்க்க வேண்டாம் என்று எச்சரிக்க விரும்புகிறேன் என்று தன் நோக்கத்தை அழுத்தமாகக் கூறியவரது சிந்தனைச் சித்திரங்கள்.

மேலே பொறுக்கியெடுத்து காட்டப்பட்ட மேற்கோள்களின் முக்யத்வம் புதுமைப்பித்தனையும் அவர் கதைகளையும் நாம் அணுகும் விதம், அறியும் வழி, செய்யும் மதிப்பீடு இவைகளுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கின்றன என்பது தான். இலக்கிய கர்த்தா "சிங்காரவேலு"வைப் பற்றிய கதையில் (கடிதம்) 'முக்கால்வாசிப் பெயருக்கு அழகு என்பது என்ன என்று தெரியாது. சிலருக்கு அழகாய் இருக்கிறது என்று முதலில் சொல்வதற்குத் தைரியம் இல்லை' என்று அவர் கூறத்தக்க ஒரு சமூகம்

தான் புதுமைப்பித்தன் முன் இருந்த சமூகம். அழகு எது என்று தெரியாத சமூகத்துக்கு கலையையும் தெரியாது; இலக்கியத்தையும் தெரியாது. இந்த அறியாமையுடன் புதுமைப்பித்தன் கதைகளைக் கையில் எடுத்தால் 'நூற்றில் இன்னொருவராக' அவரை மதிப்பதோடு வாசகம் உள்ளம் நின்று விடும். புதுமைப்பித்தன் நூற்றில் ஒருவர். இன்றைக்கும், அவர் காலமாகி பனிரெண்டு வருஷங்கள் ஆன பிறகும் அவர் சாக்கிட்டுக் குத்திக் காட்டிய சமூகம் ரசனையில் அப்படிக்கொன்றும் முன் எட்டுப் போட்டதாகச் சொல்வதற்கில்லை.

இந்தக் கட்டுரையில் புதுமைப்பித்தன் கதைகளின் விஷயம்சத்தைப் பற்றி மட்டும் சற்று ஆராய்ந்து பார்ப்பது தான் நோக்கமாகும்.

அவ்வப்போது தனித் தனியேயும் தனித் தொகுதிகளாகவும் படித்த புதுமைப்பித்தன் சிறுகதைகளை, இன்று மொத்தமாக ஒரே மூச்சில் உட்கார்ந்து திரும்பப் படிக்கிறபோது, ஒன்று தூக்கி நின்று தெளிவாகத் தெரிகிறது. ஆரம்ப கால முதற் கதையான 1934ம் வருஷத்திய 'புதிய ஒளி' என்பதிலிருந்து அவர் காலமான பின் வெளியான கடைசிக் கதையான 'கயிற்றரவு' கதை வரை இந்தத் தொண்ணூற்றெட்டு கதைகளிலும் புதுமைப்பித்தனது "பேசும் குரல்"தான் காதிலே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. நான் மேலே காட்டிய மேற்கோள்களை ஒட்டியும், விவரித்தும், விளக்கியும், உருவகப் படுத்தியும் ஆன வார்த்தைகள் தான் சுவரில் அறையப் படும் ஆணி மேல் விழும் சுத்தியலடி, மேல் அடியாக விழுந்த வாறுக் நம் ஞாபகத்தில் நிலைத்துக் கொண்டிருக்கின்றன. அந்தப் பேசும் குரல் என்ன சொல்கிறது?

சிக்கறுக்க வந்தோர்— சேதி புரியாமல்— வக்கரித்த புத்தி— வழிமாறிப் போன, மனம் கொக்கரிக்க, கூடி கூனல் மனிசரெல்லாம் பொக்கை முழம் போடும், புன்மை இயல் பம்மா? வையம் சமைக்க வந்தோர் 'வளமை புரியாமல்— பொய்யில் குளித்து— விஷ, புகை மண்டும் கேலியம்பு—நொய்யல் மனிசர்விட— நாருய் குமையுதம்மா!

உலகில் வாழவந்த மனிதன் எந்தக்கேட்டுக்குப் போய் விட்டான் என்ற குமுறல் வரிகள் தான் சோ. வி. யின் ஒவ்வொரு கதைக்குப் பின்னும் வியாபித்து நிற்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு, அவலங்கெட்ட மனித வாழ்க்கையை, குளிர்ந்துபோன ஆத்மாவின் வாழ்க்கையை, பல கோணங்களிலிருந்து பார்த்து விஷயங்களைத் தேர்ந்தெடுத்து ஒரு வடிவத்திற்குள் அடக்கிய விஷய சாரமாக ஆக்கி, சிறு கதை உருவகங்களாக வார்ப்பானவைகள் அவரது கதைகள்.

புதுமைப்பித்தன் கதைகள் முழுக்க முழுக்க முரணை வாழ்வு வாழும் கதாநாயகர்களையும், செய்கைகளையும் கொண்டனவாக இருக்குமென்று முடிவு கட்டிவிட முடியாது. நடு இரவில் வந்து தன் காலை பிடித்து கொண்ட உமையொரு பாகன் பிள்ளைக்குத் தன் பணம், கடன் வாங்குதல், தன் நிலம் உள்பட விற்று ஏழாயிரம் கொடுத்து உதவி, அந்த மனிதன் வைரத்தைப்பொடித்துத் தின்று மாண்டுவிட, தன் மீதிச் சொத்தை முழுவதும் விற்று, வாக்குதான் சொத்து. தம்பி. பணவிஷயம்,' என்று கடன் காரர்களுக்குத் தீர்த்துவிட்டு, ஏழு மாதக் கர்ப்பிணியான மனைவியுடன், ஊரே கண்ணீர் வடிக்க மருதூரை விட்டுப் புறப்பட்ட அரிச்சந்திர பரம பரை சுப்பையாபிள்ளையையும் அவர் கதைகளில் காணலாம். (சொன்ன சொல்) வழி நடையில், தான் பயந்த கொள்ளைக் காரனிடமே தன்னிடம் நகை இருப்பதாகப் பேதமையால் காட்டிக்கொண்ட கிழவிக்கு 'இதை வச்சுக்க. முதல் பேரனுக்கு என் பேரிடு... சங்குத் தேவர்னு' என்று கூறிக்கையில் பணப்பையைப்போட்டுவிட்டு 'இதுவும் வேடிக்கைதான்' என்று அங்கிருந்த கல்லில்உட்கார்ந்த சங்குத்தேவனும் நடமாடுகிறான். (சங்குத் தேவன் தர்மம்) தூக்குத்தண்டனை சில தினங்களில் அனுபவிக்க இருந்த புரட்சிக்காரனிடமிருந்து, தன் சிநேகிதி, தன்னைப்பார்க்க வரப்போகும் அந்தப் பெண்ணுக்காக அவன் எழுதியஅந்தகாகிதகத்தையை பறிமுதல் செய்து ரிப்போர்ட் தயாரிக்க அதைப் படித்து பார்க்க, 'குற்றம் காண முடியாத இதை அழிப்பதில் என்ன இருக்கிறது' என்று மனம் கொந்தளிக்க, புரட்சிக்காரனை சந்திக்க இருட்டில் துணிந்து வந்த அந்த சல்லடம் தரித்த பெண்ணின், பையில் அந்தக் கடிதக் கத்தையைத் திணித்து விட்டுப் போகச் சொல்லிக் காப்பாற்றிவிட்டு, 'பறி முதல் செய்யப்பட்ட சிறு காகிதக் குப்பை ... உளறல்களாக இருந்ததால் அழிக்கப்பட்டது' என்று ரிபோர்ட் எழுதிய ஜெயில் சூபரிண்டு பரமேஸ்வரமும் இல்லாமலில்லை. (பறிமுதல்)

அடுத்தபடியாக புதுமைப்பித்தனின் அடையாளமான கதாபாத்திரம் 'இது' என்று சொல்வதானல், 'இல்லாமை

யில் நிறைந்து வாழ்பவனை எடுத்துக் காட்டலாம். அதே போல, அடையாளமானகதை சந்தர்ப்பம், சம்பவமில்லை என்று கூட்டுவதானால், அந்த இல்லாமையின் விளைவுகளைக் குறிப்பிடலாம். 'ஒரு நாள் கழிந்தது' என்ற கதையில் வரும், நடு மத்தியில் இரண்டாகக் கிழிந்து ஒரு கோடியில் மட்டிலும்ஒட்டிக்கொண்டிருந்த கோரைப்பாயை சேர்த்துப் பொருத்தி, அதில் உட்கார்ந்து அன்று பிரம்மப் பிரயத்தனத்திற்கும் மேலான முயற்சியால் கிடைத்த ஒரு எட்டணாவை புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த 'சாகாவரம் பெற்ற' கதைகளும எழுதும் முருக தாஸர் முதல், 'பொன்னகரம்' என்ற கதையில் வரும், விபத்தில் அடிபட்டுக்கிடக்கும் கணவனுக்குக் கஞ்சி வார்க்க இருளில் மறைந்து முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்ட அம்மாளு வரையில் இந்த இல்லாமை உலகத்து சிருஷ்டிகள். ஏன், பஞ்சடைத்த கண்ணோடு தகரப் பிப்பாயை பிடித்துக் கொண்டு செத்துக்கொண்டிருக்கும் கிழவனைப் பார்த்துக் கொண்டே. 'அன்னதான சமாஜம்கட்டி பசிப்பிணியைப் போக்கிவிட முயலும் சமூகம் தன்பாட்டுக்கு அவசர நடை போட்டு போய்கொண்டுதான் இருக்கிறது. (மகாமசானம்) இன்னும் 'நிசமும் நினைப்பும்' கதையில் வரும் பிறவி எழுத்தாளர் மிஸ்டர் வி. பி., 'தியாகமூர்த்தி' என்ற கதையில் வரும் இராமசாமி பத்தர் மாதிரி வறுமை உளைச்சலில் உழன்று தத்தம் நிலை தடுமாறி அவரவர் தெம்புக்கு ஏற்றவாறு சமாளித்தோ அழுந்தியோ போன கதாபாத்திரங்களையும் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்களையும் புதுமைப்பித்தன் சிறுகதைகளினூடே செய்யும் பிரயாணத்தில் நிறைய உணர்ந்து அனுபவிக்கலாம்.

தமிழில் பயங்கர ரசத்தை புதுமைப்பித்தன் ஒருவர்தான் கையாண்டிருக்கிறார். 'கபாடபுரம்', 'பிரம்ம ராக்ஷஸ்', 'வேதாளம சொன்ன கதை', 'காஞ்சனை', 'காளிகோயில்', 'பயம்', 'கொலைகாரன் கை', ''செவ்வாய் தோஷம்.'' ,'ஞானக்குகை'', ஆகிய கதைகள் பல நோக்கிலிருந்து பிறந்தவை. அந்தந்தக் காலத்துக்கான சுற்றுணர்ச்சி எழுப்புவதில் மட்டுமின்றி பயங்கரத்தை விவரிக்கும் வார்த்தைச் சேர்க்கைகள், மாயங்கள் விளைவித்திருக்கின்றன. இவைகளைப் படிக்கும்போதுதான் உணர முடியும்.

புதுமைப்பித்தன் ஒரு இடத்தில் கூறி இருக்கிறார். ''புதியவை என்று ஒன்றும் கிடையாது' ஏனென்றால், பழையவை என்று பிரித்து வைக்க வேண்டியவையே கிடையாது. பெயர் மாற்றமும் உபயோக மாறுதலும் சந்தர்ப்பங்களுக்குக் கட்டுப்பட்டிருப்பதால், வேறு வேறு ரூபத்தில் வேறு வேறு கோணத்திலிருந்து பார்க்கப்படும் ஒரே தன்மை தான் இருந்து வருகிறது. இந்த நிலையில் புதுசேது, பழசேது'' இந்தக் கருத்துடன், 'பழைய கதைகளை எடுத்துக்கொண்டு. இஷ்டமான கோணங்களிலெல்லாம் நின்றுகொண்டு பார்க்க எங்களுக்கு உரிமையுண்டு'' என்ற அவரது கருதத்தையும் சேர்த்துப் பார்த்தோமானால், 'அகல்யை', 'சபாவிமோசனம்', 'அன்றிரவு' ஆகிய கதைகள் அவர் கையில் புதுமை பழமை இரண்டுக்கும் பொதுவான ஒரு நிலையின் விளக்கமாகப் பிறந்தவை என்பது புரியும். பழைய அகல்யை கதையில் கௌதமன் நடந்து கொண்டது எப்படி வேண்டுமானாலும் சரி, புதுமைப்பித்தன் கௌதமன், தன் குற்றத்தின் பாரமே உருவாக நிற்கும் இந்திரனைப் பார்த்து, 'அப்பா, இந்திரா, உலகத்துப் பெண்களை... போய் வா' என்கிற போதும் 'கண்ணே அகல்யா, அந்த சமயத்தில் 'உனது உடலுமா உணர்ச்சியற்ற கல்லாய் சமைந்துவிட்டது? என்று அவள் தலையை தடவிக் கொடுக்கிற போதும், ஞானி கௌதமனுக்கு ஏற்ற வார்த்தைகள் இவைதான், அவன் வாயிலிருந்து வேறு வார்த்தைகள் வந்திருக்க முடியாது என்று துணிந்து சொல்ல நமக்கு வருகிறது.•

புதுமைப்பித்தன் கடவுளைப்பற்றி கூறியிருக்கிறார். 'ஒரு கூட்டத்தின் பாதுகாப்புக்கு அது அவசியமானால் ஒரு பொய்யைச் சொல்லித்தான் கடவுள் என்ற பிரமையை சிருஷ்டித்தால் என்ன? இந்தக் கடவுள் விஷயம் ரொம்ப சுவாரஸ்யமானது. அது தனி மனிதனுக்கு ஒரு தைரியத்தைக் கொடுக்கிறது. சமூகத்திற்கு ஒரு சக்தியைக் கொடுப்பது போல. நாஸ்திகம் தர்க்கத்தில் நிஜமாக இருக்கலாம். அது சுவாரஸ்யமற்றது.வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்ற முடியாதது. அது தனி மனித்னுக்கு அதாவது விதிவிலக்கான தனி மனிதனுக்கு சாந்தியைஅளிக்கலாம் ஆனால் ரஸனை அற்றது.சுவையற்றது. அதனால்தான் ஜைன மதம் நாஸ்திகக் கொள்கையால் அழிந்தது. புத்தமதம் நாசமுருதிருக்க புத்தனைக் கடவுளாக்கித் தப்பித்தது. வாழ்க்கையில் ஒரு வெறி ஏற்பட்டால் தான் பிடிப்புடன் முன்னேற முடியும். அதை சமயம் கொடுக்கிறது. அது சொல்லுகிற மோட்சத்தைக்கொடுக்காவிட்டாலும் இது போதும்.

அந்த மோட்சத்தைவிட இது மேலானது... தெய்வத்தைப் படைப்பது கவிஞன். தெய்வத்தை அறிபவன் "ஸயன்டிஸ்ட்' தெய்வம் என்றால் என்ன? இலக்ஷியம். அது எந்த வடிவத்தை எடுத்தால் என்ன? மனித வர்க்கத்தை ஒருபடி உயரச் செய்தால், அது தெய்வத்தின் சக்தி படைத்தது, அதுதான் தெய்வம் என்று ஏன் சொல்லக்கூடாது?

இதே மாதிரி கேள்விகளைத்தான் 'மனக்குகை ஓவிய'த்தில் வரும் கதாபாத்திரங்கள் தங்கள் முன் தோன்றிய தெய்வங்களைக் கேட்கின்றன: 'உமக்கு எல்லாவற்றையும் அழிக்க முடியும். உம்மை அழித்துக்கொள்ள முடியுமா? நீர் மட்டும் மிஞ்சுவதுதான் சூன்யம் என்று அர்த்தமா? உம்மையும் அழித்துக் கொள்ளும்படி நீர் தொழிலை நன்றாகக் கற்று வந்த பின், நெஞ்சைத் தட்டிப் பார்த்துக்கொள்ளும்' என்று சொல்லிக் கொண்டே, கைலையங்கிரீசன் பார்வைக்கு முன் கருகி நசிக்கும் குழந்தை, 'அதோ கிடக்கிறது பார். நான் போட்டுவிட்டு வந்த உடல். அதில் போய் உட்கார்ந்துகொள். அப்புறம் உன் கிங்கரர்களை ஏவி அழைத்து வரும்படி செய். அப்போது தெரியும் உனக்கு! பயம் என்ன என்பது'. என்று தர்மராஜனைப் பார்த்துச் சொல்லிச் சிரிக்கும் மனித உயிர்! மகா விஷ்ணுவைப் பார்த்தும் கூட, 'செப்பிடுவித்தைக்காரனா, பகல் வேஷக்காரனா? என்னை ஏமாத்த முடியாது. நேரமாகிறது, தபஸ் பண்ணப் போகிறேன்' என்று காட்டிற்குள் ஓடிய உத்தானபாதனது குழந்தை. 'என்னை சிருஷ்டிக்க நீர் உபயோகித்த புழுதியைவிட்டு நான் எப்படி விலக முடியும்? நான் நிமிர்ந்து நேராக நிற்பதற்கே இந்தப் புழுதிதானே ஆதாரம்? புழுதியைக்கண்டு அஞ்சும் உமக்கு, அதன் மீது நிற்கும் என்னை அறிந்து கொள்ள சக்தி உண்டா? நீர் அந்த சக்தி பெற்று கீழே வரும் வரை, நான் இந்தப் புழுதியில் கண்டெடுத்த, அதில் என்னோடு பிறந்த இந்த இரும்புத் துண்டை வைத்து என்னைப் பாதுகாத்துக்கொள்கிறேன்' என்று கர்த்தரைப் பார்த்துக்கூறிய மனிதன், இவர்கள் யாவரும் கடவுளும் மனிதனும் நெருங்கி வரச் செய்யக்கேட்கும் கேள்விகள்.

அந்த மனித உயிர் விரும்பியபடி கடவுள் இந்த உலகத்துக்கு இறங்கி வந்து மே. க. ரா. கந்தசாமிப் பிள்ளை வீட்டுக்கே வந்து விடுகிறார். 'இரண்டு கப்கள் காபி என்று தமிழ் சரியாகச் சொல்ல வேண்டும்' என்று பிள்ளையிடம் முறியடிக்கப்பட்டு, கடவுள், கோவில் என்று அவர் பேசும் போதெல்லாம் நடுங்கி, இவ்வுலக சுகாதார பாடமும் கற்றுக்கொள்வது மட்டுமில்லை சிக்கிரிப் பவுடர் என்ன என்றும் அறிந்து கொள்கிறார். போலி பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்துத் தன்னை ஏமாற்றிய கடைக்காரனை ஏமாற்ற அந்த நோட்டை மட்டும் பொறுக்கி எடுத்துக் கிழித்தெறிந்து, தான் கடவுளானாலும் கடவுள் என்று பெயர் வெளிக்காட்டிக் கொள்ளாமல், 'மனுஷ அத்துக்குக் கட்டுப்பட்டு என்னுடன் பழகும்' என்ற கந்தசாமிப் பிள்ளையின் ஆக்ஞைப்படி பழைய பரமசிவமாகப் பெயர் கொண்டு வீட்டில் பழகுகிறார். கந்தசாமிப் பிள்ளையின் உபதேசத்தால் தொழில் செய்யவிரும்பி தேவியையும் அழைத்துக் கொண்டு கலாமன்ற பிரசிடெண்ட் முன் கூத்தனார்–பார்வதி என்ற பெயரில் நிஜ சுவரூபத்தில் கூத்து ஆடி, தன்னை மறந்து வெறிக் கூத்து ஆடப்போகும் சமயம், கந்தசாமிப் பிள்ளையால் எச்சரிக்கப்பட்டு, ரசிகரால், 'சட், வெறும் தெருக்கூத்தாக இருக்கு. என்னங்காணும் போர்னியோ காட்டுமிராண்டி வேஷம்'! என்று அதட்டப் பெற்று, ஆடிய பாதத்தை அப்படியே நிறுத்தி சூலத்தில் சாய்ந்து நிற்கிறார்.

'ஓய்! கலைன்னா என்னான்னு தெரியுமாங்காணும்? புலித்தோலைத்தான் கட்டிக்கொண்டீரே. பாம்புன்னா பாம்பையா புடிச்சுக்கொண்டு வருவா? பாம்பு மாதிரி ஆபரணம் போட்டுக்கொள்ள வேண்டும். புலித்தோல் மாதிரி பட்டுக் கட்டிக்கொள்ள வேணும், கலைக்கு முதல் அம்சம் கண்ணுக்கு அழகுங் காணும்? வாஸ்தவமாக பார்வதி பரமேஸ்வராளே இப்படி ஆடினாலும், இது நாட்டிய சாஸ்திரத்துக்கு ஒத்து வராது. அதுலே இப்படிச் சொல்லல்லே. பாம்புகளையெல்லாம் பத்திரமாகப் புடிச்சுக் கூடையிலே போட்டு வச்சுப்புட்டு, வேஷத்தைக் கலையும். இது சிறிசுகள் நடமாடுகிற இடம்' என்று எச்சரிக்கப்பட்டு, வெளியே அனுப்பப்படுகிறார்.

'தெரிந்த தொழிலைக் கொண்டு லோகத்தில் பிழைக்க முடியாது போலிருக்கே' என்று கவலையுடன் சொன்ன கடவுளுக்கு, 'நான் சொன்னது உங்களுக்குப் பிடிக்கவில்லை. உங்களுக்குப் பிடித்தது லோகத்திற்குப் பிடிக்கவில்லை' என்ற பதில் கந்தசாமிப் பிள்ளையிடமிருந்து கிடைக்கிறது. உலகம இதற்குள் புளித்துவிட. 'உங்களிடமெல்லாம் எட்டி நின்று வரம்

கொடுக்கலாம்; உடன் இருந்து வாழ முடியாது' என்று கூறி விட்டு 'உங்கள் வர்க்கமே அதற்குத் தான் லாயக்கு' என்று பதில் அடியும் பெற்றுக்கொண்டு இவ்வுலக அனுபவம் பெற்று கந்தசாமிப் பிள்ளையின் சித்தவைத்திய தீபிகைக்கு ஜீவிய சந்தாவாக இருபத்தைந்து ரூபாயை வைத்து விட்டு மறைந்துவிடுகிறார் கைலாசபுரம் பழைய பரமசிவம் பிள்ளை. ஜீவிய சந்தா வரவு ரூபாய் இருபத்தைந்து என்று கணக்கில் பதிந்தார் கந்தசாமிப் பிள்ளை. (கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்). மனிதனுக்கு மட்டுமல்ல, அவனைப்படைத்த கடவுளுக்குமே அனுபவம் வேண்டியிருக்கிறது. அது அவன் கண்ணைத் திறக்கிறது. இந்த அனுபவம் இருவருக்கும் ஏற்பட்ட நிலையில் தான் கடவுள் மனித உறவு நிலைக்க முடியும் என்பதை 'தெய்வத்தைப் படைக்கும் கலைஞன்' கண்கொண்டு பார்த்த விளைவுதான் மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட சிறுகதைகள்.

தற்கால மனித வாழ்க்கைச் சூழ்நிலையில் மனிதனுக்கு விரக்தி எத்தகைய சந்தர்ப்பங்களில் ஏற்படும் என்பதை வரையறுத்துச் சொல்ல முடியாது. அப்படி ஏற்பட்ட விரக்தி என்ன பக்குவத்தைத் தரும், எந்த அஸ்திவாரத்தில் அமைந்த பக்குவம் எந்த அளவுக்கு நிலைக்கும் என்பதும் முடிவாகச் சொல்ல முடிகிறதில்லை. விஷங்களையும், கண்ணுடித் துண்டுகளையும் தின்று சாகாத ஹட யோகி சித்தாந்தசாமி, குடல் பகுதி அழுகிய நிலையில் ஆஸ்பத்திரியிலிருந்து மாயமாக மறைந்தபோது, நாஸ்திகத்தில் அபார சக்தியுள்ள டாக்டர் விஸ்வநாதன் காஷாயம் வாங்கிக் கொண்டு கைலாஸ பர்வத சிகரத்தில் அவரது சகாவெள்ளையர்கள் பார்த்துப் புரியாமல் திகைக்க, உறை பனிக்குள் பத்மாசனமிட்டு நிஷ்டையில் உட்கார்ந்திருக்கிறார். (உபதேசம்) இசக்கி முத்துக்கு விரக்தி கிறிஸ்தவ பாதிரியின் விபரீதப்போக்கில் ஆரம்பித்து தப்பிதம் செய்து விட்ட மனைவியின் செயலில் இருந்து எழுந்த விளைவு (அநுதாபம்) ஆனல், எந்த விதமான மனசுக் கசப்புக்கும் இடம் ஏற்படாத நிலைமையில் தொட்டதெல்லாம் பொன்னுன நிலையிலும், திடீர் வைராக்யம் பெற்ற செண்பக ராமன் பிள்ளை, சாந்தலிங்கச் சாமியாகி பத்து வருஷம் வாழ்ந்து மீண்டும் செண்பக ராமன் பிள்ளையாகி 'சாந்தலிங்கச்சாமி ஒடுங்கி நாலு மணி நேரம் ஆச்சு' என்கிற போது. 'அப்பா செண்பக ராமா!' என்ற பலமுறை குரல் கேட்டு அடிக்கடி திடுக்கிட்டுத் திரும்பும்போதெல்லாம் இந்த சென்மத்தில் நான் சாந்தலிங்கமாக ஆக மாட்டேன் போலும் என்று கூறிக் கொண்டே, தன் நிற்காத சதையாட்டத்தின் விளைவாக மடிந்த ஒரு வைராக்யம் என்பதைக் காட்டுகிறது (சித்தி).

கடைசியாக 'கயிற்றரவு' பாம்பு கடித்து விஷம் தலைக்கேறி மூச்சு அடங்குவதற்குள் கடிப்பதற்கு முன், தான் இருந்திராத ஒரு காலத்தை கற்பனை பண்ணி, தான் வளர்ந்த காலத்தையும் சிந்தித்து, 'தயிர்க்காரி கோடு போடுகிற மாதிரி நாமாகக் கற்பனை பண்ணிச் சொல்லிக் கொள்ளும்...இளமைகள் எல்லாம் அடிப்படையில் ஒன்று தானே... சிலந்திப் பூச்சி தனது வயிற்றிலிருந்து விடும் இழைபோல நீண்டுகொண்டே வருகிறது' என்று காலம் என்ற ஜீவநதியின் ஓட்டப் போக்கை ஓடவிட்டு. கடித்த பின் காலத்தில் தான் கரைவதையும் உணர்ந்த வாறே கண்மூடிய பரமசிவம் பிள்ளையின் கயிற்றரவு நிலை அதாவது கயிற்றில் தோன்றும் பாம்புணர்வு நிலையை சித்தரிப்பதில் காலமே ஒரு வெறும் கயிற்றரவு என்பதை உணர்த்துவது.

ஆக, இந்த அத்தனை கதைகளிலும் புதுமைப்பித்தனின் மனோதர்ம வீச்சு, ஒரு சிருஷ்டிகர்த்தா தான் உயிர் கொடுத்து சிருஷ்டிப்பதற்கு உபயோகிக்க முடிந்த, தன் அனுபவ அம்சங்கள், எத்தனை சந்தர்ப்பங்களில், எத்தனை விதங்களில் படர்ந்து இருக்கின்றன என்பதைக்காண முடிகிறது. 'கதையுலகத்தின் நியதி அது' என்று அவர் பிரித்துக் கூறிய மாதிரி வாழ்க்கையின் நியதியிலிருந்து எழுந்ததானாலும்கூட வெறுமனே கண்ணால் பார்த்ததோடு நின்று விடாமல், கண்பார்த்து மூளைக்குள் செலுத்தி, தான் அறிந்து அதில் ஈடுபடு முன்னரே கணிசமான வேற்றுருவம் பெற்றுத் தனக்கென ஒரு கலா நியதியைப் பெற்றுவிட்ட அழகு அனுபவங்களாகும் அவர் கதைகள். ★

"நினைவுப் பாதை"

வயசில் மூத்தவர் இறந்தால் அழுகைக்கும் ஓலத்துக்கும் குறைவில்லாவிட்டாலும், வருத்தமிருக்காது பெண்கள் ரசித்து அழுவார்கள். வார்த்தைகள் முத்து முத்தாய் கோவையாக வந்துவிழும். அத்துடன் ஓரிரண்டு துளி கண்ணீரும் கலந்திருக்கலாம். ஆனல் அது அழுகிறவர்களின் சொந்த அந்தரங்கத்தைப் பொறுத்தது. —பு. பித்தன்

நாவிற்கு ருசியும் உடலுக்குத் தெம்பும் ஊட்டுவது நல்ல உணவுகள் தயாரிப்பதில் அடங்கி இருக்கிறது.

இந்த இரண்டு அடிப்படை நோக்கங்களையும் அறிந்தே நாங்கள் சேவை செய்து வருகின்றோம்.

பணிவான உபசரிப்பு

பாங்கான தயாரிப்புகள்

ஒரு முறை வருகை தாருங்கள்

★

கிரவன் கபே ரெஸ்டாரெண்ட்

2-4, டத்தோ கிரமட் ரோட், பினங்கு, போன்: 65479

இலக்கியத்தில் புதுமையைப் புகுத்தி வெற்றி கண்டவர் மேதை புதுமைப்பித்தன்

பொன் ஆபரணங்கள் தயாரிப்பதில் புதுமையைப் புகுத்தி வருகிறோம் நாங்கள்!

நம்பிக்கை, நாணயம், புதுமை இவைகளுக்குச் சிறந்த நகைக்கடை

K. K. D. முகமது இபுருகிம் பிரதர்ஸ்

90-97, பிட் ஸ்திரீட், பினங்கு

போன்: 60067

புதுமை தந்த பித்தன்!

அ. ரெசுவப்பா

“மனிதத் தன்மையில் படியும் தூசி துப்புகளை ஊதிக்களைந்து, அதன் வளர்ச்சிக்காக எழுத்துப்பணி புரிகிறவர்களே எழுத்தாளர்கள்! சிறுகதை – இன்று மெருகேற்றப்பட்டு – விழிப்புணர்வுற்று - பொலிவுற்று விளங்கி வருகிறது. நாள் தோறும் கணக்கற்ற கதைகள் வெளியிடப்படுகின்றன. ஆனல் கருத்தில் பதிந்து, காலமெல்லாம் நினைத்து இன்புறும் வண்ணம் கதைகளைப் படைத்தெடுத்தளிக்கும் ‘மன்னர்’களைத்தான் மனமாரப் பாராட்டுகிறேம்; போற்றிப் புகழ்கிறேம்!

தமிழ் கூறும் நல்லுலகில் “சிறுகதை மன்னன்” எனில், நம் மனக்கண் முன் வந்து நிற்கும் ஒரே ஒரு மனிதர் **புதுமைப்பித்தனே** தான்! அகில உலகச் சிறுகதை மன்னர்களில் ஒருவரென எண்ணிப் போற்றிடும் வகையில்—பிரெஞ்சு நாட்டு மோப்பசான், ரஷ்யா நாட்டு ஆன்டன் செகாவ் போன்ற சிறப்புக்குரிய ஒரே ஒரு தமிழன்-புதுமைப்பித்தன்!

அவர் படைத்த கதைகள் அனைத்தும் சாகாத-காலத்தைக் கடந்து நிற்கும் கற்பனைகள். பொன்போல் போற்றிப் புகழ்ந்து பாதுகாத்து வைக்கக்கூடிய கருத்துப் பொக்கிஷங்கள் அவரது சிறுகதைகள்! ஒண்டமிழும், வண்டமிழரும் இருக்கும் வரை மறக்கவோ, மறைக்கவோ முடியாத அபூர்வ கருத்துக் கருவூலங்கள் அவரது எழுத்தோவியங்களில் பரவிக்கிடக்கின்றன!

கலைகளைப் பற்றி கணக்கற்ற கருத்துக்கள்; உலகத்தைப் பற்றி ஒப்புயர்வற்ற உவமைகள்; வாழ்க்கையைப்பற்றி, வாய் பிளந்து வியப்புறும் வண்டமிழ்ச் சொற்கள் ஆண்-பெண் வாழ்க்கையைப் பற்றி அகிலம் புகழும் எண்ணக் குவியல்கள்; வெறிபிடித்த காமாந்தகாரனின் கண் மூடித்தனம்—காதலின் துடிப்பு -வறுமையின் வடிப்பு - ஏழைகளின் இரத்தக் கண்ணீர் – முதலியவைகளை அஞ்சாமல் எழுதி மறுமலர்ச்சி காணத்துடித்த எழுத்துக் கலைஞன், நமது இலக்கியப் பசியை அடக்கி, தன் வயிற்றுப் பசியை அடக்கி, வியாதியின் கோரப் பசிக்கு இரையாகி விட்டான்.

ஃ ஃ ஃ

மொழி மேலே விழி வைத்து-மொழியை இகழ்ந்த தருக்கர்களின் கொட்டத்தை மட்டந் தட்டி, முறியடித்து. புத்தி புகட்டிய முடி மன்னர் ஆண்ட தமிழகத்திலே பிறந்தவர் தான் ‘**சோ. விருத்தாச்சலம்**’ என்ற புதுமைப் பித்தன்.

பழமை மோகங்கொண்டு கதையுலகை மங்க வைத்த இருட்டுத் தனத்தை, தன் புதுமை பொலியும் கருத்துக் கதைகளால் போக்கி பழமை விரும்பிகள் விலாவெலும்பு நொறுங்கி, வெருண்டோடும் வண்ணம் ‘புத்தொளி’ பரப்பியவர் புதுமைப்பித்தன்!

வறுமையின் கோரப்பிடியில் சிக்கிச் சிதைவுற்ற போதிலும், இழிந்த வாழ்வில் நலிந்து மெலிந்து நைந்துருகும் ஏழ்மை நிலையிலும் இரத்தத்தை மையாக்கி, எண்ண அலைகளை எழுத்தாக்கி, வாழ்வைக் காகிதமாக்கி இரவு பகல் என்று கூடப் பாராமல்-சளைக்காமல் எழுதியும் உருவான வாழ்வு காண முடியாமல் உருக்குலைந்தவர் புதுமைப்பித்தன்!

“**வகுத்தெல்லாம் சொல்பவன்தான் வாழத்தான் வகையறியான், வகையறியாச் சிந்தனையில் வாழ்பவனே எழுத்தாளன்!**” என்ற கூற்றிற்கு முன் நின்று, உதாரணம் காட்டியவர் புதுமைப்பித்தன்!

மாடமாளிகை, கூடகோபுரம், படோடோபம்—அவரது கற்பனையில் படியவில்லை,

நாட்டினில் நாயினுங்கேடாய் நலிவுறும் மக்களை - நடைப்பிணங்களை - துன்பத்தின் எல்லையை - துயரத்தின் மிகுதியை - ஊழல்களை - புரையோடிய புண்களை - இன்பமும் - துன்பமும் - ஆசையும் அவலமும் - ஏழ்மையும் செல்வமுமே ஒருங்கே அவரது கதைகளில் காணப்படும். இல்லாத ஒன்றை சிந்தித்துச் செத்தொழிய விரும்பாத "பித்தன்", தான் வாழ்ந்த ஓட்டைக் குடிலின் சாளரத்தைத் திறந்து, விரிந்து, பரந்து கிடக்கும் உலக வெளியில் காணப்படும் பரிதாபக் காட்சிகளைக் கண்டார்! எழுத்திலே வடித்தெடுத்தார்!

சிறிய கதை - உயர்ந்த கருத்து! எளிய நடை - எண்ண இனிக்கும் கருவூலம்! கற்பனையாம் சர்க்கரையைக் கருத்துப்பாலில் காய்ச்சி பொற்கதை ஏட்டில் அற்புதமாய் வடித்து, வாரி வாரி வழங்கினர் புதுமைப்பித்தன்! ஏற்றுக் கொள்ளப்பட்டதா? ஏற்றங் கொண்டாரா? எனில் நம் இதயம் விம்மித் தணிகிறது. கன்னம் கண்ணீரால் நனைகிறது. ஆம்! பொற்பின்றி, பொலிவின்றி முட்கள் தோன்றி பூக்காத நன்காடாய் தமிழ்நாடு இருக்கக்கண்டார்! ஆதரிப்பாரில்லை; ஆதரவு நல்கும் இதயங்களைக் கடைசி வரைக் கண்டாரில்லை.

சிந்தை நொந்து மனம் உந்த எழுதினர். குமைந்த உள்ளத்தோடு எழுதினர். பசி பட்டினி–பிணி! எலும்புருக்கி நோய்க்கு, எண்ண இனிக்கும் கதைகளை எழுதிய புதுமைப்பித்தன் இழுத்துச் செல்லப்பட்டார். செத்தொழிந்தார். அந்தோ!

ஆயினும், புதுமைப்பித்தனைப்போல் பீடு நடையில் எழுதவேண்டும்: ஏற்றமுற வேண்டும் என எண்ணித்துணியும் எழுத்தாளர் பரம்பரையை விட்டுச் சென்றுள்ளார் என எண்ணிடுங்கால் ஓரளவு நிம்மதி நம் நெஞ்சை நிறைக்கிறது!

இன்று, அவரது கதைகளைத் தலையின் மேல் தூக்கிவைத்துக் கொண்டு கூத்தாடுகிறது தமிழ் நல்லுலகம், சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்! விழா கொண்டாடுகின்றனர்; மணிமண்டபம் எழுப்புகின்றனர் கூட்டம் போடுகின்றனர்! ஆட்டம ஆடுகின்றனர். அவர் உயிரோடு சித்திரவதைப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஒருவர் கூட. உதவியதில்லை! அழுது அவதிப்படும்போது ஆதரிப்பாரில்லை. பல நாள் பட்டினியால் புழுப்போலத் துடித்த போது ஏறிட்டுப் பார்ப்பார் இல்லை!

ஆதரிப்பார்கள் இருந்திருந்தால் 'அய்யோ'வென அவர் குடும்பம் அலறியிருக்குமா? நெற்றிப் பொட்டிழந்து-வண்ணப் புடவையிழந்து–உண்ண உணவின்றி–உடுக்க உடையின்றி வாழ்விழந்து அவர் மனைவி மாளாத்துயரில் மூழ்கியிருப்பார்களா? வாழ வேண்டிய வயதிலே, வையகத்தார்க்கு தன் எண்ணத்தில்தெறிக்கும் கதிரொளியை வாரிக் கொடுக்கவேண்டிய நேரத்திலே அவர் வாடியிருப்பாரா? செத்த பின் சமாதி கட்டும் பழக்கம் தமிழர்களிடத்தில் இருந்ததால் தானே சிறுகதை மன்னனை இழந்தோம்?

ஒரு புதுமைப்பித்தனை இழந்தோம். இனி, இருக்கின்ற கலைஞர்களையாவது உயிருள்ள போதே ஆதரிப்போம் என்ற எண்ணமாவது நம் தமிழர்களிடத்தில் ஏற்பட்டிருக்கின்றதா என்றால் அதுதானில்லை! இருந்திருந்தால், "சதையற்ற சமுகத்திற்குணர்வேதுமிருந்தால் சாவனு புதுமையொளி தந்திட்டபித்தன்?" என நம்மை நோக்கி நாடறிந்த நல்ல கவிஞர் 'சிங்கை முகிலன்' கேட்பாரா? கேட்கும் நிலையில் தூரத்துப் பச்சை தமிழர்களின் கண்ணை மறைக்கிறதே!

"தமிழ், தமிழர்" என்ற உணர்வு என்று எல்லாத் தமிழர்களிடமும் ஏற்படுகிறதோ, அன்றுதான் தமிழ் எழுத்தாளர் நிலை சிறக்கும். அவர்கள் கொண்ட கலை சிறக்கும். தலை சிறக்க அவர்களால் வாழ முடியும்!

தமிழ் கூறும் நல்லுலகமே! தந்துதவ வாரீர்!!

அமரகவி பாரதியார் வாழ்ந்த காலத்தில், அந்தக்கால மக்களைப் பற்றி ஒரு குறை இருந்தது–தமிழ் வளர்க்கும் எழுத்தாளர்களையும், கவிகளையும் போற்றிப் பாராட்டுவதில்லையென்று! மகாகவிக்கு 'மணி மண்டபம்' கட்டி, முன்னோர்கள் மீதிருந்த குறையைப்போக்கி விட்டனர். அவரது மனைவியார் கஷ்டப்படாமலிருக்க உதவிபுரியப்பட்டது. இன்று வாழ்ந்துவரும் கலைஞர்கள் கவலையின்றி வாழ வசதி செய்து கொடுக்கப்படவேண்டும் என்ற எண்ணம் எல்லாரின் இதயத்திலும் ஏற்பட்டுள்ளது!

தமிழ் எழுத்தாளர்களைப் பாராட்டு

கிறோம்; போற்றிப் புகழ்கிறோம். அது போதுமா? அவர்களின் குடும்பமும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டாமா? அதனைப் புறக்கணித்தால், "நாம் தமிழர்" என்று கூறுவதற்கே தகுதியற்றவர்களாகி விடுவோம்!

தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் பாடுபட்டவர்கள் நினைவைப் போற்றுவதற்கு அவர்கள் குடும்பம் கஷ்டப்படாமலிருக்க உதவி செய்யவேண்டும். அவ்விதம் உதவி புரிவதன் மூலம், இந்தக் காலத்தில் தமிழ் வளரப் பாடுபடுகிறவர்களையும், எதிர்காலத்தில் தமிழ் வளரப்பாடுபடப் போகிறவர்களையும் நாம் போற்றத் தவறமாட்டோம் என்று உறுதி கூறுவதாகும்! ஒரு ஏழைத் தமிழ் எழுத்தாளர் குடும்பத்திற்கு - அநாதரவான அவல நிலையில் இருக்கும் ஏழைக் குடும்பத்திற்கு உதவி புரிவதன் நோக்கம் இதுதான்!

சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனின் தமிழ்த் தொண்டைப் பாராட்டி, அவரது குடும்பத்துக்கு உதவி செய்ய முன் வரும் தமிழரனைவரையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன் "புதுமைப்பித்தனின் நினைவு மலர்" வெளியிட்டு, அன்னாரின் குடும்பத்துக்குச் செலுத்தவேண்டிய கண்ணியத்தையும் கௌரவத்தையும் காப்பாற்ற **"புதுமைப் பித்தன் நினைவு மலர் குழு!"** முனைந்துள்ளதை இதயங்குளிர பாராட்டி, வரவேற்கிறேன்! தமிழர்களனைவரும் "மலரை" வெளியிடுவோரின் மனதை மலரச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

"மேகம், கதிர், மதிவாழும் வரை இந்த
மேதினி வாழ்பவர் புதுமைப்பித்தன்!

தேகத்தினால் இந்தப் பாரினிலே—செத்தும்
சாகாதிருப்பவர் புதுமைப்பித்தன்!

வாழ்க புதுமைப்பித்தன்!

வளர்க அவர் பரம்பரை!! ★

தமிழ்ப் புத்தகங்கள், சினிமா படங்கள் பாடல்கள், ஆங்கில மலாய் புத்தகங்கள் யாவும் எங்களிடம் கிடைக்கும்.

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

காதர் புக் ஸ்டால்

பஸ் ஸ்டேஷன்

சுங்கைபட்டாணி

(கிட்டா)

தமிழ், ஆங்கிலம், மலாய் புத்தகங்களும், ஊர்க்கப்பலுக்காக வேண்டிய பலவித கத்திக் கடை சாமான்களும் கிடைக்கும்.

"பனிமலை பங்களா பயங்கரக்கொலை"

ஏக விற்பனையாளர்கள்.

தேவைக்கு எழுதுங்கள்.

வியாபாரிகளுக்குக் கழிவு உண்டு.

சைதா புக் ஸ்டால்

கிங் ஸ்திரீட்,
லைட் ஸ்திரீட் முகப்பு, பினங்கு

வீட்டு முகவரி:
39, குயின் ஸ்திரீட், பினங்கு.

நினைவு நீடிக்கட்டும்

கூட்டரசு பாராளுமன்ற அங்கத்தினர் திரு. வி. டேவிட்

ஓர் நாட்டின் முன்னேற்றம்—மக்களின் எண்ண வளம் அந்நாட்டு எழுத்தாளர்கள்—இலக்கிய மேதைகள் படைப்பின் அடிப்படையில் அமைகிறது எனின் சாலப்பொருந்தும். கலை-பண்பு-நாகரீகம் இம்மூன்றிலும் எத்துணை ஒருமைப்பாடும் தொடர்புகளும் உள்ளனவோ அதே போன்று சமுதாய ஒழுக்கத்திற்கும்-நியதிக்கும்—உறவுகளுக்கும் எழுத்தாளர்களுக்கும், அன்னவர் ஆற்றலும் மிகமிகத் தேவை. இந்த வகையில் எழுத்துலக மேதை புதுமைப் பித்தன் ஆற்றிய சேவை சொல்லும் தரமன்று.

புதுமைப் பித்தன் தந்துள்ள "எழுத்துக் கருவூலங்கள்" அன்றாட நடைமுறை வாழ்க்கையைத் தெள்ளத் தெளியச் சித்தரிக்கும் இயல்புள்ளவை. அவருடைய கதைகளில் உண்மை நிகழ்ச்சிகள் நிழற்படம் போல் சித்தரிக்கப்படுவதன்றி, மனித சமுதாயத்தில் புரையோடிப்போன ஒழுக்கக் கேடுகளை களைந்தெறியும் சீரிய மருந்தாகவும் பயன்படுகிறது அவரது எழுதாற்றல். எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை எனும் தவறான கருத்து நிலவி வருவது கண்கூடு. நம் தலைமுறையோடு முற்றுப்பெறுவதல்ல எழுத்தாளர்கள் தரும் படைப்பு. அடுத்தடுத்து தோன்றும் சமுதாயம் கூர்ந்து நோக்கி அவற்றினின்றுபெறும் நன்மை நாம் தற்போது சங்ககால இலக்கியங்களை சுவைப்பதற்கொப்பாகும்.

புதுமைப் பித்தன் தந்துசென்ற கதைகள் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டியவை என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அவரது நினைவாக மலர் வெளியிடுவது குறித்தும் பெருமிதமடைகிறேன். எழுத்துலகச் சிற்பி புதுமைப் பித்தன் நினைவை மட்டுமல்ல-அவரது எண்ணங்களை எழுத்துத் திறமையை பின்பற்றி ஆயிரமாயிரம்கொண்ட புதுமைப் பித்தன் பரம்பரையை தோற்றுவிக்க வேண்டியது எழுத்தாளர் பெருமக்களின் தலையாய தொண்டு என்பதை சொல்லித் தெரியவேண்டுவதில்லை.

புத்துலகத்திற்கு தேவையான புதுமைக் கருத்துக்களை கதைகள் வாயிலாக வழங்கி எழுத்தாளர் பரம்பரைக்கு சீரிய வழிகாட்டிச் சென்ற புதுமைப் பித்தன் நினைவாக மலர் வெளியிடுவது மிகவும் பொருத்தம். இம்முயற்சியை மேற்கொண்டவர்களுக்கு என் அன்பு கலந்த வாழ்த்துக்களும் வணக்கமும் உரித்தாகுக! வணக்கம்.

-: வாழ்க்கை :-

ஆசை! அதற்கும், மனிதன் சொல்லிக் கொள்ளும், இலட்சியம், தர்மம், காதல், இவைகளுக்கும் ஏதாவது அர்த்தமிருக்கிறதா? காதல் பெரும் மிருக இச்சை. பூர்த்தியாகாத மனப் பிராந்தியில் ஏற்பட்ட போதை. என்ன தான் பேசினாலும் இதற்குமேல் ஒன்றும் கிடையாது. அதற்கப்புறம் சமூகம்! பெரிய மீன் சின்ன மீனைத் தின்னலாம். சின்ன மீன் அதற்கும் சின்ன மீனைத் தின்றால், பெரிய மீன் "குற்றம் செய்கிறாய்" என்று தண்டிக்க வருகிறது. இதுதான் சமூகம்! இந்த அசட்டு மனித கூட்டத்திற்கு மரணத்தைத் தவிர நிலையான இன்பம் வேறு என்னதான் இருக்கிறது. பால்காரன் விற்கும் பாலுக்கும் உலகத்தின் நன்மைக்கும் வித்தியாசமில்லை. நாமாக நினைத்துக்கொண்டால் நன்மைதான். பின் ஏன் இந்தப் பித்தலாட்டமான இலட்சியம். அதனால்தானே ஏமாற்றமும் தொந்தரவும்? மிருகம் மாதிரி இருந்து தொலைந்தால் என்ன கெட்டுப் போகிறது. —பு. பித்தன்

சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. இன்னும்
நீங்கள் படிக்கவில்லையென்றால் இன்றே வாங்கிப் படியுங்கள்.

மலாயாவில் தமிழர் நாகரிகமும் கலையும்

(எழுதியவர்: மா. செ. மாயதேவன்)

''மலாயா சரித்திரம்'' எழுதியவரும் கோலாலம்பூர் சுத்த சமாஜத்தின் பாதுகாவலருமான *சுவாமி சத்தியானந்தா அவர்கள்* இந்நூலுக்குச் சிறப்புரை எழுதியுள்ளார்.

விலை 40 காசு.

நீர்ச் சுழல்

(எழுதியவர்கள்: மா.செ. மாயதேவன், மா. இராமையா)

மொர்தேகாவுக்குப் பிறகு மலைநாட்டுத் தமிழிலக்கிய வரிசையில் இருக்கை பெற, *கவிஞர் கிருஷ்ணதாசன் அவர்கள்* திறப்புரையுடன் வெளிவந்திருக்கும் புதினம்.

விலை $1-00

இலக்கியத்தில் புதுமைப்பித்தன்

(அச்சில்)

''கடவுள் கனவு கண்டார்; இந்தப் பிரபஞ்சம் பிறந்தது. கவிஞன் கனவு கண்டான்; இலக்கியம் பிறந்தது.'' என்று கூறிய புதுமைப்பித்தன் இலக்கியத்திலும் வாழ்க்கையிலும் என்ன தாத்பரியத்தைக் கண்டார்? புதுமைப்பித்தன் கதைகள் மட்டரக உணர்ச்சியைத் தூண்டும் ஆபாசக் குப்பை என்கிறார்கள் சிலர்; அமர இலக்கியம் என்கிறார்கள் வேறு சிலர், இவர்கள் கூற்று சரியா?

கதை வகுப்பு *கந்தசாமி வாத்தியாரின்* விமரிசனம் நூலுக்குத் தனி சிறப்பைத்தரும்.

விலை 80 காசு.

விற்பனையாளர்கட்கு கழிவு உண்டு.

விவரங்கட்கு எழுதுங்கள்:

THE MANAGER,

THIRUMUGAM PRINTING PRESS & Co.

40, KOTA ROAD, TAIPING (PERAK)

நாடகம்:

பித்துக்கு விடுதலை

காட்சி: 1

பழமையில் புதுமையைக் காண விரும்பினர் புதுமைப்பித்தன். முகஞ்சுளித்தனர் முன்னேற்றத் தடையர்கள். மசியவில்லை; எதிர் நீச்சலடித்து வெற்றி பெற்றார் புதுமைப்பித்தன். அவர் வழியைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ள இக் கற்பனையில் புதுமை வாடை வீசுவதை வாசகர்கள் அறியலாம்.

ஊர்: எமபுரி

இடம்: எமதர்ம சபை

காலம்: (பூலோக கணக்குப்படி) இறந்த காலம் அதாவது 30-6-48; சொ. விருத்தாசலம் என்ற 'புதுமைப்பித்தன்' உலகைத் துறந்த நாள்.

பாத்திரங்கள்: எமதர்மராசன், எமபுரியின் ஆஸ்தான கணக்காயரான சித்திர புத்திரன், பூலோகவாசியான 'புதுமைப்பித்தன்', மற்றும் தருமராசனின் 'ஆபீஸ்-ஸ்டாவ்ஸ்' –கிங்கரர்கள்.

(எமதர்ம சபையில் அனைவரும் தத்தம் ஆசனத்தில் அமர்ந்துள்ளனர் இரண்டு எம தூதர்களின் பாசக்கயிற்றின் பிணைப்பால் கட்டுண்டு நிற்கின்றார் 'புதுமைப்பித்தன்' என்ற மாஜி பூலோகவாசி.– சபையினுள் நுழைகிறார் தருமராசர். அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்கின்றனர். சிம்மாசனத்திற்கு மேல் – அந்தரத்தில் தொங்கும் நீதிவாளின் மீது தனது பார்வையைச் செலுத்திவிட்டு ஆசனத்தில் அமர்கின்றார் நீதிதேவன்; மற்ற அனைவரும் அவரவர் ஆசனங்களில் அமர்கின்றனர் வழக்கத்திற்கு மாறாக அன்று நீதிதேவனின் முகம் சிவந்து காணப்படுகிறது!– தண்ணி கிண்ணி ஏதும் போட்டுக் கொண்டதால் அல்ல; கோபத்தினால்...!)

எ. த. ராசன்: (கோபத்துடன்) "சித்ரா! எங்கே அந்த பூலோகப் படைப்பாளி? இழுத்து வாருங்கள் அவனை இங்கே!"

சி. புத்திரன்: (சற்று ஆச்சரியத்துடன்) "அரசே! யார்? பூலோகப் படைப்பாளியா?

எ. த. ரா.: (பாசக்கயிற்றில் பிணைக்கப்பட்டு நிற்பவரைச் சுட்டிக் காட்டி) "அதோ! அங்கே நிற்கின்றானே அவன் தான்..."

சி. பு.: "அரசே! அவன் ஒரு எழுத்தாளன் அல்லவா...?"

எ. த. ரா.: "ஆமாம்! எழுத்தாளன் தான்; மண்ணால் படைக்கப்பட்ட இவன், எழுதுகோலைக்கொண்டு பல படைப்புக்களைச் செய்திருக்

ஏ. எஸ். அந்தோணி முத்து

கின்றான். அதுவும், பிறந்தவுடன் இறந்துபோகும் குழந்தையைப் போன்றதல்ல இவனது படைப்புகள். ஒவ்வொன்றும் சாகா வரம் பெற்றவை! இவன் வாழ்ந்த உலகம் இருக்கின்ற வரை, இவனது படைப்புக்கள் அத்தனையும் இறவாது வாழ்ந்து கொண்டேயிருக்கும்...!''

சி. பு.: ''...அப்படியானால் உலகத்தாருக்கு இவன் சிறந்த தொண்டுதானே புரிந்துள்ளான்?''

எ. த. ரா. : தொண்டா? அதுமட்டுமல்ல; நாற்றமெடுத்த இவனது சமுதாய ஊழல்களை இவனது படைப்பின் மூலம் சந்திசிரிக்க வைத்துவிட்டான்...!''

சி. பு. : ''மன்னா! அது இவனது சமுதாயப் பிரச்சினை; அதிலும் அந்தச் சமுதாயத்தில் இவன் ஒரு அங்கம்! தன்னுடைய சமுதாயத்தைச் சீர்திருத்த எண்ணியதில் தவறொன்றுமில்லையே?''

எ. த. ரா. : (சற்று கோபத்துடன்) ''சீர்திருத்தம்! இவனுடைய நாட்டில் இப்பொழுதெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்களே, அது போல இவனும் பேசிக்கொண்டிருந்தானானால் நாம் ஏன் கவலைப்படப்போகின்றோம்? இவனது சீர்திருத்தம் பேச்சளவில் அல்ல; இவனது படைப்புக்கள் ஒவ்வொன்றும் சீர்திருத்தம் பேசக் கிளம்பிவிட்டன, இவன் வாழ்ந்த உலகைப் பற்றி என்ன பேசியிருந்தாலும்–செய்திருந்தாலும் நமக்கு அக்கறையில்லை; ஆனால்...''

சி. கு. : (அவசரமுடன்) ''ஆனால்...'என்ன அரசே?''

எ. த. ரா. : ''...இவனது படைப்புகளில் சில' காலத்தின் அதிபனான என்னையே கேவலப் படுத்திவிட்டது! அதுவும் இவனது படைப்பான ஒரு கிழவியை இவன் ஏவிவிட்டு என்னை ஓட, ஓட விரட்டியடிக்க வைத்துவிட்டான்...''

(இப்படிக்கூறும் போது எமதர்மராசனுடைய கட்டபொம்மன் மீசை துடிக்கிறது.)

சி. கு. : (மிகப்பதட்டமுடன்) ''மன்னவ! உங்களுக்கு அவமானமா? என்ன துணிவு! யார் அந்தக் கிழவி? அனுப்புங்கள் நம தூதர்களை; அவள் எந்த உலகத்தில் இருந்தாலும் நமக்கு கவலையில்லை; அவளின் கணக்கு முடிய இன்னும் காலம் வரவில்லை என்றாலுங்கூட பரவாயில்லை; அவசரச் சட்டம் போட்டு அவளை இங்கு இழுத்துவந்துவிடலாம்...''

எ. த. ரா. : (ஏளனப்புன்னகையுடன்) ''ஹஹ்ஹஹ்ஹா! சித்திரகுப்தா அதுதான் முடியாது. இவனது படைப்பிலே கைவைக்க என்னைப்போல் இன்னும் ஏழு காலாதிபதிகள் வந்தாலும் முடியாது...!'' (இவ்விதம் தன்னையே தான் குறைவுபடுத்தி பேசியதற்காக பல்லைக்கடித்துக் கொள்கிறார்; ஆத்திரத்தில் அவருடைய நுனி நாக்கு பல்லில் சிக்கிக் கொள்கிறது.)

சி. கு. : (ஆச்சரியமுடன்) ''அத்தனை பெரிய படைப்பாளியா இவன்? இவனது படைப்பைக் கொண்டுவரமுடியாத நாம் எதைக் காரணம் காட்டி இவனைக் குற்றவாளியாக்க முடியும்?''

எ. த. ரா. : ''ஆம். அந்தக் குறையை வைக்கவில்லை நமது ஒற்றர்கள்! அந்தக் கிழவியுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை, மறைந்திருந்து 'டேப்–ரெக்கார்டு' மூலம் பதிவு செய்து வந்து விட்டனர். சமீபத்தில் சம்பந்தப்பட்ட அவ்வொற்றர்கட்கு 'வைர ஆடை' போர்த்தி கௌரவித்தோமே அது கூட உனக்கு நினைவு இல்லையா?''

சி. கு. : (சற்று வருத்தத்தோடு) ''ஆம், அரசே! ஊழூழி காலமாய் இந்தக் கணக்குத் தொழிலையே பார்த்துப் பார்த்து கண்ணும், மூளையும் சரியாக வேலை செய்யாமல் 'ஸ்ட்ரைக்' செய்கிறது. இப்பொழுதெல்லாம் பூலோகத்தில் நாகரீகம் மிஞ்சிவிட்டதால் ஒவ்வொரு நாளைக்கும் ஏராளமான நரர்களை நமது கிங்கரர்கள் அழைத்துக்கொண்டு வந்து விடுகின்றனர் – சில சமயங்களில் நான் ''ஓவர்டைம்' வேலை கூட செய்யவேண்டி நேரிடுகிறது. ம் ம் அரசே! அந்த வகையில் நம ஒற்றர்கள் நல்லவேலைதான் செய்திருக்கின்றனர்.''

எ. த. ரா. : ''சரி, அந்த 'டேப்–ரெக்கார்டை சபை முன் எடுத்துவரச் சொல்.''

—கிங்கரரிருவர் 'டேப் ரெக்கார்டு' பெட்டியொன்றைக் கொண்டுவந்து சபை முன் வைக்கின்றனர்.(

எ. த. ரா. : "நமது 'சென்சர்-போர்டார்', வேண்டாத விஷயங்களை நீக்கிவிட்டனரா?"

சென்சர் போர்டின் தலைவர்:— "ஆம், மன்னு! தேவையற்றவை நீக்கப்பட்டுவிட்டன"

எ. த. ரா. : "சரி; சித்திரா! பெட்டியின் விசையை முடுக்கிவிடு"

(சித்திர புத்திரன் எழுந்து சென்று பெட்டியின் விசையை முடுக்கிவிடுகிருர்; பெட்டியிலிருந்து ஒலி கிளம்புகிறது.)

"...ம்ம்.. சவத்துப் பயலே, அந்திலே, சந்திலே... தங்காதே, மாட்டெ ஓட்டிக்கிட்டு... வந்திருன்னு, சொன்னு, மூதி..." (—ஒரு கிழவியின் குரல் 'டேப்'பில் ஒலிக்கிறது; அதைத் தொடர்ந்து... திடு, திடு வென்ற சத்தம் — எருமை ஒன்றின் கதறல் ஒலி கேட்கிறது— மீண்டும் கிழவியின் குரல்—) "ஏலே மாடா, எத்தினி தெறவேதான் ஒன்கிட்டச் சொல்லி மாரடிக்க! மூதி, தொளுவிலே கட்டி, பருத்தி விதையை அள்ளி வய்யி. பாளையங்கோட்டை எசமா வந்திருந்தாவ. நாளைக்குக் கடாவெ கொண்டாரச் சொன்னுவ!" (—அடுத்து ஒரு ஆண் குரல் ஒலிக்கிறது-)

"ஐயோ பாவம்! கிழவிக்கு இவ்வளவு கண் பஞ்சடைந்து போய்விட்டதா? காலத்துக்கு அதிபதியான நான் வந்திருப்பது கூட தெரியவில்லையே! என்னை அவளுடைய பேரன்'னு நினைத்துக் கொண்டாளோ! போனுபோகுது, கடைசி ஆசையை நாம் ஏன் கெடுக்கவேண்டும். அவள் விருப்பம் போல் கொஞ்சம் பருத்தி விதையை அள்ளி நம்முடைய வாகனத்திற்குப் போடுவோமே! பிறகு வேண்டுமானுல் கிழவி திடுக்கிட்டுவிடாமல் மெதுவாக நாம் வந்த வேலையைச் சொல்லுவோம். அதிலும், "போருக்கு முதல்வனையும், ஊருக்கு முதல் வரை"யும் மகாராஜாவே நேரில் சென்று அழைத்து வரவேண்டிய சம்பிரதாய முறை வேறு இருக்கிறதல்லவா? ஆகையால்... பார்த்துக்கொள்ளலாம்..."

(டேப்பில் கிழவியின் குரல்) "...ஏலே அய்யா, அந்த வெத்திலைச் சருகை இப்படித் தள்ளிப்போடு!" (வெற்றிலைப் பெட்டியைத் தள்ளும் சத்தம் சரசரவெனக் கேட்கிறது அதைத் தொடர்ந்து...).

"அதிருக்கட்டும் கிழவி, நான் யார் தெரியுமா?... என்னை நல்லாபாரு! நான் தான்..."

"...என்ன குடிச்சுப்பிட்டு வந்தியாலே! எனக்கென்ன கண்ணு பொட்டையாப் போச்சுன்னு நினைச்சுக்கிட்டியா?... சிங்கி கொளத்தா மவளே, அட, அவதான் சொக்கி, அவளைப் பார்த்திருக்கியாலே... நேத்துக்கூடச் சுள்ளி பொறுக்க வந்தாளே... அவ அப்பங்காரன் வந்திருந்தான்...உனக்கு அவளெப்புடிச்சுக் கட்டிப் போட்டுட்டா நல்லதுன்னுன், என்ன சொல்றே?"

(கிழவியின் குரலைத் தொடர்ந்து... எமதர்மராசனின் மெதுவான-நடுக்கமுடன் கூடிய குரல்) "...நான்தான்...எம...தர்ம...ராசன்...!"

"குடிச்சுப்பிட்டுத்தான் வந்திருக்கே...ஓங்க பாட்டன் குடிச்சுக் குடிச்சுத்தான் தொலைஞ்சான்...அதுதான் நமக்கு இந்தச் சுடுகாட்டுக் குடிசை? நாசமாப்போரதுக்கு நாலுவளி வேணுமா? விதியாரை விட்டது...?"

"நல்ல வேளை இந்தக் கிழடு விதியைப் பற்றி ஞாபகமூட்டுச்சு..." (தட, தடவென்ற ஓசை 'டேப்'பில் ஒலிக்கிறது. அதைத் தொடர்ந்து)

"ஏலே, ஒன் வக்கணையெல்லாம் இருக்கட்டுமிலே...என்னு, எருமை அத்துக்கிட்டு ஓடுது... மறிச்சுப் பிடிச்சா?"

"...ஏ! கிழவி இது என்ன தெரியுமா? இதுதான் பாசக்கயிறு!"

"ஏலே, கயிறு நல்லா உறுதியா இருக்கே. எங்கலே வாங்கினே ஒங்க பாட்டனிருந்தாருல்ல, அவருக்கு அப்பங் காலத்திலேதான் இது மாதிரி கெடைக்கும். அங்கென சுத்தி ஒரு கொடியா கட்டிப்போட்டு வய்யி. ஒண்ணுக்குமில்லாட்டா நாலு ஓலையாவது சேர்த்துக் கட்டிக்கிட்டு வரலாம்..."

—எமதர்ம ராசன் குறுக்கிட்டு—

எ. த. ரா: (மீசை படபடக்க-மிகவும் கோபமுடன்) "சித்திரா! நிறுத்து 'டேப் ரெக்கார்டை'; கோடான கோடி உயிர்களைக் கட்டியிழுத்து வந்த எனது பாசக்கயிறு, கேவலம் ஓலை சுற்றிக் கட்டுவதற்குத்தானு ஆகும்? என்ன துணிச்சல் இந்த படைப்பாளிக்கு? ம்ம்... பரவாயில்லை! நிறுத்தாதே தொடர்ந்து ஒலிக்கட்டும்..."

(இடையே நிறுத்தப்பட்ட 'டேப்-ரெக்கார்டு' மீண்டும் ஒலிக்கிறது).

...அடடா! நான், அவளுடைய பேரன் என்றல்லவா நினைத்துக் கொண்டது இந்தக் கிழட்டு முண்டம்... சரி, சரி; இனி நம்முடைய சொந்த உருவத்தைக் காட்டினல்தான் முடியும்' (உரத்த குரலில்) –"ஏ, என்னை இப்படித் திருப்பிப்பார்...!"

"...நீ யாரப்பா இங்கனே என் பேரன் நிண்ணுக்கிட்டுருந்தானே, அவனெங்கே?'!

"நான் தான் யமன்! நான் தான் அவன்; உன்பேரனில்லை!"

"அப்படியா சேதி! இப்படி இரு... இப்பம் எதுக்கு இங்கே வந்தா?"

"...போருக்கு முதல்வனையும் ஊருக்கு மூத்தவரையும் நான் தான் அழைத்துக் கொண்டு போகவேண்டும்?"

"அப்படீன்னு?"

"நீ என் கூட வரவேண்டும். நீ அப்பொழுது கட்டிப்போடச் சொன்னயே அது உன் எருமையல்ல. என் வாகனம்..."

"நான் ஒன் கூட வரணுமாக்கும்! என்னெ கூட்டிக்கிட்டுப் போவ ஒனக்குத்தெறமையிருக்கா?"

"எனக்கு முடியாத ஒன்று இருக்கிறதா? நான் இதுவரை எத்தனையோ கோடி பேரை அழைத்துச் சென்றிருக்கிறேன்—அது உனக்கெப்புடித் தெரியும்? புராணம். இதிகாசம் படித்திருந்தாலல்லவா உனக்குத் தெரியப் போகிறது? (தணிந்த குரலில்) அடடா! நல்லவேளை இந்தக் கிழவி அந்த மாதிரி ஏதாவது படிச்சுத் தொலைஞ் சிருந்தாள்'னு, நம்ம குட்டு இன்னேரம் வெளிப்பட்டுப் போயிருக்கும்"– (இந்த இடத்தில் எமனுக்கு மார்கண்டேயன் விஷயம் நினைவுக்கு வருகிறது)–

"அதெல்லாம் இருக்கட்டும்; நீ என்னெக்கூட்டிக்கிட்டு போய்ட்டீன்னு என்னெப் பத்தின நெனப்பெ, நான் வச்சிருந்த–பொளங்கின சாமானெல்லாம் ஒன்னேடெ எடுத்துக்கிட்டுப் போவமுடியுமா? என்னமோ? எமன்கிமன்னு பயமுறுத்திரியே. ஒன் தொழிலையே ஒனக்குச் செய்யத் தெரியலியே! அதெத் தெரிஞ்சிக்கிட்டு எங்கிட்டவா...!"

"என்ன சொன்னய்! எனக்கா தெரியாது? இதோ பார் உன்னை என்ன செய்கிறேன்...!"

"உன்னலே என் உசிரெத்தானே எடுத்துக்கிட்டுப் போவமுடியும்? இந்த உடலைக்கூட தூக்கிட்டுப்போவ உனக்கும் தெறமை இருக்கா?... யோசிச்சுப் பாரு? அதெ உன்னைப் படைச்ச கடவுளாலேயே செய்ய முடியாதே! அப்புறமில்லே உனக்கு? பழசுன்னு அவ்வளவு கிள்ளிக்

கிறேன்னு நெனச்சே? ஹஹ்ஹஹ்...! –கிழவியின் ஏளனப் புன்னகை ஒலிக்கிறது...அதைத் தொடர்ந்து...யாரோ ஓடுவது போல் 'தட. தடென ஓசை கேட்கிறது–ஆம்; ஓடுவது அதுவும் திரும்பிப் பாராமல் ஓடுவது வேறுயாருமல்ல; காலத்தின் அதிபனான எமதர்மராசன்தான்...!

எ. த. ரா. (கடுங்கோபத்துடன்) "சித்திரகுப்தா! நிறுத்து 'டேப்–ரெக்கார்டை'; எங்கே அந்த 'சென்சர் போர்டு' தலைவன்? கூப்பிடு அவனை இங்கே...!

–பயந்து–நடுங்கி–பதறிப்போய் எழுந்தோடி வந்த 'சென்சர்–போர்டின்' தலைவர் எமதர்மராசன் முன் தலைவணங்கி நிற்கின்றார்–"ஓய், நீர் என்னய்யா 'சென்சர்' செய்தீர் உம்மைவிட. பூலோகத்தில் இருக்கின்ற சென்சர்–போர்டு தேவலாம் போலிருக்கிறதே! என்னைப் பற்றி பேசி இருக்கும் இத்தனை மோசமான இழிவான பதங்களையெல்லாம் நீக்கிவிடாமல் அப்படியப்படியே விட்டு வைத்திருக்கிறீரே? நீர், இந்த 'போர்டு'க்கே லாயக்கில்லாத ஆள்! இன்றையிலிருந்து உமக்கு பதவி நீக்கம் செய்துள்ளேன்– போம் வெளியே!"

எ. த. ரா : (கடுங் கோபத்துடன்) "கேவலம் ஒரு கிழவியைக் கொண்டு என்னைக் கேவலப் படுத்தி விட்டானே இந்த நரன்! இத்தனை பெரிய குற்றத்திற்கும் காரணமான இவனுக்குச் சிறை தண்டனை...ஒரு மகாமகம்; இழுத்துச் செல்லுங்கள் இவனை! ம்ம்... இருங்கள்; சரி, கடைசியாக இவனுடைய விருப்பம் ஏதாவது இருந்தால் கேளுங்கள்."

சி. கு : "இந்தாப்பா! உனக்கு ஏதாவது தேவையாக இருந்தால் கேள்; தருகிறோம்." (புதுமைப் பித்தன், தனது பார்வையை உயரே தூக்குகிறார்—கண்கள் பேசுகின்றன; அவரது வாய் அதனை ஒலிபரப்புகிறது)— "அப்பா, குப்தா! பூலோகத்தில் நான் வாழ்ந்தபோது—நீங்கள் கூறுகின்றபடி அந்த நரஜென்மங்களுக்கு அதுவும் குறிப்பாக தமிழ் நாட்டிலே வாழுகின்ற குருட்டு சமூகத்தினருக்கு என்னென்னவோ எழுதினேன்— படித்துத் திருந்துவார்களென்ற நம்பிக்கையில்; பச்சை பச்சையாக எழுதினேன்—என்னத்தை எழுதியும் ஒருத்தராவது திருந்தின பாடில்லை. ம்...ம்... என்... செய்வது!"

சி. கு : அதைப்பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. இப்போது, நீ எங்களுடைய கைதி! உனக்கு ஏதாவது தேவைப்பட்டால் கூறு. அதனை முடித்து வைக்கின்றோம்."

பு. பி : (சற்று சிந்தித்து, பின்னர்) "எனக்கு வேண்டியதா?... இப்பொழுது எனக்கு தேவையானது வெற்றிலைப் பெட்டியும்—வெற்றுப் பேப்பர் கொஞ்சமும் அத்துடன் நல்ல பேனா ஒன்றும் கொடுத்தால் போதும். உள்ளே இருந்து கொண்டு எதையாவது எழுதித்தள்ளிக் கொண்டிருப்பேன். என்ன செய்கிறது; இங்கே கிடைத்த இந்தச் சிறைத்தண்டனை—நான் பூலோகத்தில் இருந்தபொழுது கிடைத்திருந்தாலாவது இன்னும் எதையாவது எழுதிப்போட்டு விட்டு வந்திருப்பேன்..."

எ. த. ரா : "சித்திரா! அப்படியே அவன் கேட்கும் பொருட்களைக் கொடு, ஆனால் ஒரு நிபந்தனை; நரலோகத்தில் இருந்துகொண்டு எழுதியதுபோல் ஏதாவது புரட்சிகரமாக—நம் அரசுக்கு விரோதமாக எதுவும் எழுதுவதில்லை என்று அவன் கைப்பட ஒரு கடிதம் எழுதி வாங்கி வைத்துக் கொள்; என்ன புரிகிறதா?

சி. பு : "ஆகட்டும் தேவா!"

எ. த. ரா: "சரி; சபை இத்துடன் கலையலாம்."

(சபை கலைந்தது. புதுமைப்பித்தன் கிங்கரர்களால் இழுத்துச் செல்லப்படுகிறார்)

காட்சி 2.

ஒரு மகாமகம் கழிந்து!— புதுமைப்பித்தன் விடுதலை நாள்.

இடம்: எமபுரத்தின் சிறைக்கூடம்.

காலம்: நிகழ்காலம் – பூகோல கணக்குப்படி 30ம், திகதி, ஜுன் மாதம் 1960ம் ஆண்டு

எமபுரத்தின் சிறைக்கூட வாசலில் பலர் நின்று கொண்டிருக்கின்றனர். அவர்களில் கலைவாணர் என். எஸ். கே., கல்கி, எம். கே. டி. பாகவதர், 'புதுமைப்பித்தன் பரம்பரை'யினரில் ஒருவரான கு. ப. ர. மற்றும் சிலர்.

கலைவாணரின் கரத்திலே ஒரு பூமாலை தொங்கிக் கொண்டிருக்கிறது.

சிறைக்கதவு திறக்கப்படுகிறது—சிறையைவிட்டு வெளியில் வருகிறார் விடுதலை பெற்ற அந்தப் பூலோகப் படைப்பாளி – 'சொ. வி.!' முன்பு போல் இல்லாமல் இப்பொழுது அவரது உடல் சற்று தள, தள வென்றிருக்கிறது. ஆனால் அதே பழைய, வெற்றிலைக்காவி ஏறிய பல்வரிசை; அவரைப் போன்று எதற்கும் பணியாத அவருடைய 'கிராப்' வாரிவிடப்படாமல் கிடந்தது—ஒரு வேளை எமபுரியில் சீப்பு கிடைக்காமல் இருந்திருக்கலாம்—என்றாலும் வழக்கமாக அவரிடம் குடிகொண்டிருக்கும் வெடிச்சிரிப்புக்கு வகையில்லாமல் முகம் மட்டும் ஏனோ கவலை தோய்ந்து காணப்படுகிறது. ஒரு வேளை குடும்ப நினைவோ............?

புதுமைப்பித்தன் வெளியில் வந்தும் வராமலும் இருக்கும் போதே, 'வாழ்க புதுமைப் பித்தன்!' என்று குரல் கொடுத்தார் கலைவாணர், அதைத் தொடர்ந்து ஏககாலத்தில், 'வாழ்க வாழ்க!' என்று பல குரல்கள் கிளம்பின! அவ்வளவுதான்—வெளியில் வந்து கொண்டிருந்த புதுமைப்பித்தன் விழுந்தடித்துக் கொண்டு மீண்டும் சிறைக்குள்ளே ஓடி விட்டார்!

சிறைக்கு வெளியில் நிற்கும் வரவேற்புக் குழுவிற்கு ஒன்றுமே புரியவில்லை! ''ஏன்'பா! இந்த மனுசன் ஏன் இப்படி உள்ளே ஓடிவிட்டார்?'' என்று சிறைக்காவலாளியிடம் வினவினார் என். எஸ். கே.

''தெரியவில்லையே சார்'' என்றார் காவலாளி.

மெதுவாக தலையை வெளியே நீட்டி எட்டிப்பார்த்த மாஜி கைதியான பு. பி., வெளியே கலைவாணரும், 'கல்கி'யும் மற்றவர்களும் நிற்பதைக் கண்டு சற்று துணிவுடன் மீண்டும் வெளியில் வருகிறார்.

என். எஸ். கே. :— ''என்னையா பித்தரே! எங்களைக் கண்டதும் ஏனையா இப்படித் திடீரென விழுந்தடித்துக் கொண்டு உள்ளே ஓடினீர்?''

பு. பி. :— ''ஹி...ஹிஹ்ஹி... ஒன்றுமில்லை! வந்து... உங்களையெல்லாம் பார்த்ததும் திடீரென்று பயந்து போய்விட்டேன், அதுவும் நீங்கள் மாலையும் கையுமாக நிற்பதைக் கண்டவுடன், ஒருவேளை என்னை மீண்டும் பூலோகத்திற்கு கட்டியிழுத்துச் செல்ல பாசக் கயிற்றுடன் வந்து நிற்கும் பூலோக எமதூதர்களோவென எண்ணிவிட்டேன்.''

என். எஸ். கே. :— ''பொல்லாத ஆளய்யா நீர்! இங்கு வந்தும் உம் கிண்டல் பேச்சு போகலையே... சரி, சரி; இப்படி உம்முடைய கழுத்தை கொஞ்சம் நீட்டும்; இந்த மாலையைப் போட்டுடறேன்''

''ஆமாம்; இதெல்லாம் என்ன ஒன்றும் விளங்கவில்லையே?—என்று வினவிய பு. பி.யின் கழுத்தில் மாலையைப் போடுகிறார் என். எஸ். கே.

கு. ப. ரா. :– "இன்று உமக்கு விடுதலை நண்பரே? அதுமட்டுமல்ல உமமுடைய நினைவு நாளுங்கூட...!"

என். எஸ். கே. :– என்ன "சொ. வி.'! இதோ நமது 'கல்கி' நிற்கிறார்களே கவனிக்கவில்லையா?"

பு. பி. :– "வணக்கம் அண்ணா"!

கல்கி :– "வணக்கம் தம்பி!"

என். எஸ். கே. :– "அட, டா! சொல்ல மறந்துவிட்டேனே! நமது 'பாகவதர்' கூட வந்திருக்கிறாரே நீங்கள் கவனிக்கவில்லையா?"

('பாகவதர்' என்ற பெயரைச் செவியுற்றதும் ஏனோ முகம் சுளிக்கின்றார் பு. பி.)

பாகவதர் :– "என்ன 'சொ. வி'! பழைய சம்பவங்களை இன்னும் மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே? கடந்ததை எண்ணி வருந்தாதீர்கள். நடந்ததை மறந்து விடுங்கள்"–அதோ பாரும் பூலோகத்தில் உமக்கு விழா கொண்டாடுகின்றார்கள்!

பு. பி. :– "நம்ம நாட்டிலேயா? நான் இங்கு வந்த இரண்டொரு ஆண்டுகள் என்னமோ என்னை நினைத்துக் கொண்டார்கள்..."

கல்கி: (குறுக்கிட்டு) "அது இல்லை தம்பி! பாகவதர் சொல்லுவது தமிழ் நாட்டில் அல்ல; அதோ பார்! கிழக்காசியாவிலே-கீழேதெரியுது பார் மலாயா நாடு–அங்கே தான் உன் நினைவு தினத்தை–தமிழ் நெஞ்சம் கொண்ட அந்த தமிழ்ப் பெருமக்கள் உமக்கு நினைவு மலர் வெளியிட்டு உன்னைப் புகழ்கின்றார்கள்! இது உமக்குப் பெருமையில்லையா?"

கு. ப. ரா. :– "அவருக்கு மட்டுமா பெருமை? எனக்குங்கூடத்தான்...?

என். எஸ். கே. :– "ஆமாம்; உண்மைதான்! அவர் 'பரம்பரையில்' தாங்களும் ஒருவர்–தானே?"

பாகவதர் :– "சரி, வாருங்கள் நாமெல்லோரும் அதோ, அங்கே அமைந்திருக்கின்ற மேடையிலே அமர்ந்து பூலோகத்தில் நடைபெறும் பு. பி. நினைவு விழாவைக் கண்டுகளிப்போம்".

கல்கி :– "சமுதாயத்திற்குழைத்தவனுக்கு இவ்வகையிலான நினைவு விழாக்கள் தேவை தான். என்றாலும் வெறும் நினைவு தினத்தை மட்டும் கொண்டாடிவிட்டால் போதுமா? தன் சமுதாயத்திற்காக எழுதி எழுதிக் குவித்த அந்த இலக்கிய சீர்திருத்தவாதியின் ஆதர வற்ற குடும்பத்திற்கு நல்ல நிலைமையிலுள்ள – இலக்கிய ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் உதவ வேண்டியது கடமையாகும்."

கு. ப. ரா. :– "அதையெல்லாம் நாம் ஏன் பேசவேண்டும்? அதைப் பற்றிய கவலைநமக்கு ஏன்? அதெல்லாம் பூலோகத்தில் உள்ளவர்களுடைய வேலை. இதற்கெல்லாம், இன்றைக்கில்லா விட்டாலும் என்றைக்காவது ஓர் நாள் விடிவு காலம் ஏற்படத்தான் போகிறது... ஏற்பட்டுக் கொண்டே வருகிறது –(இவையனைத்தையும் செவிமடுத்த புதுமைப்பித்தனின் கண்களிலிருந்து இரு துளி கண்ணீர் சிந்துகின்றன!).

அந்த இரு துளி கண்ணீரும்...?

தான் பிறந்த–வளர்ந்த தமிழ் நாட்டு மக்கள் தன்னையும் தன் குடும்பத்தையும் மறந்துவிட்டதை நினைத்து சிந்தும் ஆத்திரக் கண்ணீரா...? அல்லது...?

தமிழகத்திலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் கடல் கடந்து வாழும் தமிழ் மக்களின் இலக்கிய ஆர்வத்தையும்—அதைப் படைத்தவனுக்குக் காட்டும் அன்பையும் நினைத்துச் சிந்தும் ஆனந்தக் கண்ணீரா...?—என்பதைக் காலம் தான் நிர்ணயிக்கவேண்டும்!

காட்சி 3.

இடம்: எமதர்ம சபை

காலம்: ?

பாத்திரங்கள்: காலாதிபதி, கிங்கரர்கள், சித்திரபுத்திரன்

எ. த. ரா.: "சித்திரா! சமீபத்தில் விடுதலையான அந்த நரனுக்கு பூலோகத்தில் 'நினைவு விழா' நடத்துகிறார்களாமே; உண்மையா?"

சி. பு. : "ஆம் அரசே! முன்பெல்லாம் தமிழ் நாட்டில்தான் இந்த படைப்பாளிக்கு நினைவு நாள் கொண்டாடி வந்தனர்; இப்பொழுது இந்தத் தொத்து நோய் மலாயாவிற்கும் பரவிவிட்டது. அதுவும் அந்நாட்டில் உள்ள ஒரு 'பித்தன்' தான் இதற்கெல்லாம் காரணமாம்; 'சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானும் ஆண்டி' என்று பூலோக வாசிகள் ஒரு பழமொழி கூறுவார்கள். அதைப் போல 'சிறுகதைப்பித்தன்' என்ற அந்த ஆசாமி புதுமைப்பித்தன் படைத்த படைப்புக்களை மட்டிலும் அல்லாமல் புதுமைப்பித்தன் பரம்பரையையே அந்நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டான். ஆகையால் இதை நாம் இப்படியே விட்டு விட்டால்...'?

எ. த. ரா. : "விட்டுவிட்டால் என்ன?"

சி. பு. : பூலோகத்தில் செய்தது போல் இந்தப் புதுமைப்பித்தன் இங்கேயும் ஒரு பரம்பரையை உண்டாக்கிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை, மகராசா!'!

எ. த. ரா: (அவசரத்துடன்) "ஆகா! அப்படியானால் உடனே "புதுமைப்பித்தன்' என்ற இந்நரனை மீண்டும் பூலோகத்திற்கே அனுப்ப..."

சி. பு. : (குறுக்கிட்டு) "...முடியாது அரசே முடியாது. அதற்கு நம் சட்டம் இடந்தராது; அத்துடன் இறப்பின் மூலம் இவன் இந்நாட்டு பிரஜையாகிவிட்டான். வேண்டுமானால் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவனைக் கண்காணித்து வர ஏற்பாடு செய்யலாம்...!"

எ. த. ரா. : "ஆமாம். அதுவும் சரிதான்! அத்துடன், நமது ஆட்களை அவனுடன் அதிகம் நெருங்கிப் பழகவிடாமல், கவனமுடன் கண்காணித்துவா; இல்லையானால் நம்ம பசங்களும் அந்தக் கூட்டத்திலே சேர்ந்துவிடப் போகிறார்கள். என்ன புரிந்ததா? சரி இத்துடன் சபை கலையலாம்.

——— சுப திரை ————

குறிப்பு:

"டேப் ரெக்கார்ட்டில் ஒலிப்பது பு. பி. யின் "காலனும் கிழவியும்" என்ற கதை நிகழ்ச்சிகள்.

பித்தனிடம் பித்தானேன்

"புதுமைப்பித்தன் கதைகள்" தமிழ் நாட்டுச் சிறுகதைத் தொகுப்புக்களுக்குள், தனித்தன்மை வாய்ந்தவை. கதையின் கரு (பிளாட்) மற்றக் கதாசிரியர்கள் எவரும் எழுதக் கூடிய அமைப்பு நிறைந்தது; ஆனால் எழுதும் விதம், நடை, வாக்கிய அமைப்பு, சொல்லாட்சி அவருக்கே உரித்தான முறை; திருநெல்வேலி முறை.

மற்ற மாவட்டக்காரர்கள் பேச்சுக்கும் புதுமைப் பித்தனது மாவட்டக்காரர்களுடைய பேச்சுக்கும் சற்று மாறுபாடு உண்டு; அதிக வேறுபாடும் உண்டு. எதையும் குதர்க்கமாக குத்தலாக மறை பொருளில் மகிழ்ச்சியடையும் வண்ணம் பேசுவது திருநெல்வேலிக்காரர்கள் மரபு. சிறு குழந்தைகளும் நேரிடையாகப் பதில் சொல்லா. கொனஷ்டையும் கோமாளித் தனமும் நிரம்பிய இலக்கிய நடையிலே பேசுவார்கள். கிட்டத்தட்ட யோசித்து யோசித்து எழுதும் அலங்கார நடையின் பாதித்திட்டம் இவர்களது பேச்சிலே அனுபவிக்கலாம். இது பாரம்பர்யமாகத் திருநெல்வேலிப் பேச்சு வழக்கில் கைவந்த லாபம்.

இதனால், மற்ற மாவட்டத்துச் சிறுகதை எழுத்தாளர்களின் உரைநடையிலிருந்து புதுமைப் பித்தன் வேறுபடுகிறார். இது அவர் பிறந்த மண்ணின் சத்து; பழகிய மக்களின் வளத்தால் வந்தவை. கைத்தறி நெசவிலே ஊர்க்காரர்களும் ஒரே இன நூலைத்தான் நெய்கிறார்கள்; முடிவாகும் சரக்கிலே ஊருக்கு ஊர் தர மாறுபாடு, தர நிர்ணயம், அழுத்தம் இருப்பது போன்று, புதுமைப் பித்தன் கதைகளில் நடையும் அழுத்தமும் அதிகம் காணலாம்; இது இலக்கிய ரசிகர்களான நீங்கள் அறிந்த விஷயம். விமர்சகர்கள் ஒப்புக்கொண்ட உண்மை.

எழுத்தைப்போன்று, பேச்சிலும் அவர் தனித்தன்மை வாய்ந்தவர். இங்கு நான் அனுபவித்த இரண்டொரு சம்பவங்களைச் சொல்லுவதால் அவரது பேச்சிலும் இந்தக் "கிருத்துருவம்" எவ்வாறு முறுக்கேறிக் கிடக்கிறது என்பதை அறியக்கூடும்.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தினப்பத்திரிகை ஒன்றிலே உதவி ஆசிரியன் வேலைக்கு முயற்சி செய்தேன்; அதன் முடிவுபற்றி புதுமைப்பித்தன் கேட்டார்:—

"குசேலப் பட்டாளத்துள்ளே கவாத்துப் பழக வருகிறீர்களே, இந்தப் பட்டாளத்துள் பிறரைச் சுடுவதில்லை; நம்மை நாமே சுட்டுக் கொள்ள வேண்டும்."

சுகி
சுப்பிரமணியம்

"அந்த அதிர்ஷ்டம் எனக்குக் கிடைக்கவில்லை அண்ணாச்சி."

"ஏம்'வே'. என்ன சொன்னுவ?"

"எனக்குக் கல்லூரிப்பட்டம் இல்லையாம்."

"டிக்கிரி இல்லையா, இல்லாட்டிப் போவுது."

"ஆனாலும் அரிச்சுவடி பசங்க ஆக்ஸ்போர்டு பட்டதாரி போல பேசுதானுகளே! அரிச்சுவடிகளைத் தள்ளுங்க குப்பைக் கூடைக்குள்ளே."

என்னிடம் கல்லூரிப் பட்டம் எதிர்பார்த்த பத்திராதிபர் நாலாம் வகுப்போ ஐந்தாம் வகுப்போ படித்த திண்ணைப் படிப்புதாரி என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டேன்!

மற்ருெரு தினம், புதுமைப் பித்தனுடன் மவுண்ட்ரோடு ரவுண்டணவில் பஸ்ஸுக்காக காத்து நின்றேன். அங்கு வந்த திரு ந. ராமரத்னம் அவர்கள் "யாருவே இவுக" என்று என்னை அறிந்து கொள்ளக்கேட்டார். புதுமைப்பித்தன் சென்னை வாசியானுலும் திருநெல்வேலி பேச்சுத் தமிழில்தான் பேசுவார். அச்சு அசல் சாயை, சாடை, அழுத்தம், தொனி அனைத்தும் அந்த ஊர்க்காரர்கள் பேசுவது போலவே இருக்கும். இதைப் பரிகாசம் செய்ய "வே" என்றும் "இவுக" என்றும் சொன்னுர் ராமரத்னம்.

நீங்களும் நானும் என்ருல் என்னமோ சொல்லியிருப்போம். புதுமைப்பித்தனுக இருந்ததால், "வே இது காவிரிக் கலங்கல் இல்லை; தாமிர வர்ணித் தண்ணி" என்ருர். அன்று எனக்கு இந்த வார்த்தைக்குப் பொருள் புரியவில்லை. பிற்றை நாளில் காவிரிக்கரை எழுத்தாளர் களுக்கும் தாமிரவர்ணி எழுத்தாளர்களுக்கும் இலக்கியப் பாதையில் தனித் தன்மையும் ரசனைப் போராட்டமும் இருப்பதை அறிந்தேன்; இலக்கியம், நாகரீகம் போன்ற கவின் கலைகள் தண்ணீரை அடுத்த மண்ணை நம்பித்தான் வாழ்கின்றது என்பதும் தெரிந்தது!

மற்ருெரு சம்பவம். இது திருச்சியில் நடந்தது.

'இன்ன எழுத்தாளர் சிறிது பணம் சேர்த்திருப்பது உண்மையா?" என்று மகிழ் வுடன் புதுமைப்பித்தனை விசாரித்தார் நண்பர் ஒருவர்.

"அது ஒன்வே டிராபிக்! 'பணம் அவர் கைவழியே போகும்; வெளியே வராது!" என்று சட்டெனச் சொன்னுர்.

அந்த எழுத்தாளரின் உறவினர்ஒருவரின் நடத்தையை யாரோ கேட்டார்கள்.

"அவரா? அவர்வழி கண்ணப்ப நாயனுர் வழி. தாம் சுவைத்துதான் தன் வாடிக்கைக் காரர்களுக்கு கொடுப்பார்" என்ருரே புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தன் எழுத்திலே மின்னல் பளிச்சிட்டு அந்தகாரத்தைக் காட்டுவது போல, அன்ருடப் பேச்சிலும் சுவையாகப் பேசுவார். இலக்கிய மரபுகள், உவமைகள், மேற் கோள்கள் குத்தலாக, கோமாளித்தனமாக, குற்ருல அருவி போன்று கொட்டும்.

எழுத்தாளர்களுக்குக் கல கல வென அளவளாவத் தெரியாது என்ற நித்ய உண் மையைப் பொய்யாக்கிய புலவன்; பழகு தமிழும் பழந்தமிழும் கற்ற புதுமை எழுத்தாளர் இந்தப் பித்தன்.

தமிழ்ச்சித்தர் பாடல் முதல் சித்தாந்தங்கள் முடிய, ஆங்கிலத்திலுள்ள புதிய புதிய கொள்கைகள் தத்துவங்களைச் சிரிக்க சிரிக்கச் சொல்லுவார். புதுமைப்பித்தன் கதைகளை யாரும் என்றும் படிக்கலாம்; அவரோடு பழகி அவர் குரலும், ஒல்லிய உருவமும், சற்று நீண்ட கையுடைய கதர் ஜிப்பாவும் வெற்றிலைச் செல்வமும் கண்டவர்கள்—பேச்சைக் கேட்டவர்கள், உண்மையிலேயே பேச்சு இலக்கியத்தின் சாம்ராட்டைக் கண்டவர்கள், இவ் விமர்சன ராக்ஷஸனை பாஸிட் ஜடா முனியாக வெறுத்தவர்கள் உண்டு; இவர்கள் இவரைக் கண்டபின், பேச்சைக் கேட்டபின் பித்தரானார்கள்; ஆகியிருக்கிறார்கள் பலர். அவர்களில் யானும் ஒருவன். ★

தமிழகத்தில் புதிய இலக்கியத்தையும் புதுவிதக் கருத்துக்களையும் புகுத்தி வரும் ஒரே பத்திரிகை

"எழுத்து"

ஆசிரியர்: சி. சு. செல்லப்பா

திறனாய்வுத்துறையில் தனி நடைபோடும் எழுத்தை ஒவ்வொரு எழுத்தாளரும் கட்டாயம் படிக்கவேண்டும். சந்தாதாரர்களுக்கு மட்டுமே எழுத்து கிடைக்கும்.

ஆண்டுச் சந்தா ரூ. 6-00

விபரங்கட்கு: சி. சு. செல்லப்பா
19A, பிள்ளையார் கோவில் தெரு சென்னை-5

மேதை குடும்பத்தாரின் வாழ்வு மலர இறைவனை வாழ்த்துகின்றோம்.

புதுமைப்பித்தன் எழுதிய நூல்கள்:

புதுமைப்பித்தன் கதைகள்		$ 2-40
புதுமைப்பித்தன் கட்டுரைகள்		$ 2-00
புதுமைப்பித்தன் கவிதைகள்		$ 1-20
புதிய ஒளி	(கதைத் தொகுப்பு)	$ 2-40
அன்று இரவு	,,	$ 2-40
சித்தி	,,	$ 1-40
தெய்வம் கொடுத்தவரம்	,,	$ 1-20
உலக அரங்கு	,,	$ 1-00
முதலும் முடிவும்	,,	$ 1-00
பளிங்குச்சிலை	,,	$ -80
ஆண்மை	,,	$ -80
நாரத ராமாயணம்	,,	$ -80
நிச்சயமா நாளைக்கு		$ -80
வாக்கும் வக்கும்		$ 1-20
சிற்றன்னை	(நாவல்)	$ 1-00
பிரேதமனிதன்	,,	$ 1-00
காஞ்சனை	(தொகுப்பு)	$ 1-60
புதுமைப்பித்தன் வரலாறு		$ 2-40

மற்றும், புதுமைப்பித்தன் பரம்பரையினர் நூல்களும், கிடைக்கும். தபால் செலவு தனி. வியாபாரிகட்கு கழிவு உண்டு. விலைப்பட்டியல் இனும். எழுதுங்கள்.

கரீம் புக் ஸ்டோர்

37, கிங் ஸ்றீட், பினங்கு. போன்: 67023

பித்தனின் ஆற்றல்

[பாரதி நேசன்]

கல்லிலே சிலேவ டிக்கும்
கைத்திறன் புதுமை யல்லோம்
வில்லிலே வீரங் காட்டி
வெல்வதும் புதுமை யல்லோம்
கல்லினுள் தேரை வாழக்
காண்பதிற் புதுமை யைப்போல்
சொல்லினுள் புதுமை தேக்கல்
சொல்லொணு புதுமை யாமே!

பழமையிற் புதுமை காணும்
பண்பினைக் கொண்ட "பித்தன்"
கிழவியைப் பேச வைத்துக்
கிண்டலும் செய்தான்! காலன்
உளந்தனில் மருட்சி கொண்டு
ஓடிடச் செய்தான்! அந்தக்
களங்கமில் லாதான் கூற்றில்
"கடவுளும் பித்தன்" ஆனர்!

செய்வதிற் புதுமை யென்ருல்
செய்தஅச் செய்கை யாலே
உய்வதும் புதுமை! ஆங்கே
உறைவதை உன்னும் வேளே
மெய்தனிற் புதுமை வேகம்
மேவிடக் காண்போம்! இஃதை
செய்தவன் பித்தன் என்றே
சிந்தையிற் றெளிவு கொள்வோம்!

இத்தனே செய்தும் வாழ்வில்
இன்பமே இல்லே? அந்தப்
பித்தனே இழந்தோ மென்று
பிறங்கிடும் நெஞ்சில்; இன்று
செத்தவன் பிழைத்தா லன்ன
செய்திடும் 'நினைவுப் பூ'வில்
எத்துணே இன்பம் கண்டோம்!
ஈதுதான் புதுமைப் பித்தோ?

குறைந்த விலையில் சிறந்த
ஜவுளி தினுசுகள் கிடைக்குமிடம்.

எஸ். எம். சதக் அண் கோ.,

எங்களிடம் ஜாவா பத்தாய் பலிவேற்காடு
கைலிகளும், நயம் பட்டு பாப்ளின்
துணிகளும், சகாயமான
விலையில் கிடைக்கும்.

144, சோலியா ஸ்திரீட்,
பினாங்கு.
டெலிபோன் 61958

எம். ஏ. பிச்சை அண்கோ.,

M. A. PITCHAI & Co.,

General Merchants
Importers & Exporters,
108, Penang Street,
Market Street & Penang Street
Junction.

எங்களிடம் ஊர்க்கப்பலுக்கான
எல்லாவிதமான சாமான்களும்
குறைந்த விலையில் கிடைக்கும்.
மருந்து சாமான்களும்
வாசனைத் திரவியங்களும் கிடைக்கும்

ஸ்தாபிதம் 1934

எப்பொழுதும்

'ஒற்றை குழந்தை'

லேபிலைப் பார்த்து வாங்கவும்
ஸ்நானத்திற்குகந்த
அசல் நல்லெண்ணெய்
தயாரிப்பாளர்கள்:

பி. கனி & சன்ஸ்

100 Bagan Luar Road
2507 Bagan Luar Road
3665 Siram Road
} B'WORTH P.W.

Telephone 284 338

வின்சர் முடிதிருத்தும் நிலையம்

47, சைனா ஸ்திரீட், பினாங்கு.

உரிமையாளர்: பெ. உத்தண்டி

புதுமைப்பித்தன் பரம்பரையினர்களுக்கு
எங்களது உள்ளம் நிறைந்த
நல்லாசியையும் அன்பையும்
தெரிவித்துக்கொள்கிறோம்.

WINDSOR HAIR DRESSING SALOON

47, China Street, Penang.

புதுமைப்பித்தனுக்கு

ஒரு நாள் கழிந்தது!

அகிலன்

எழுத்தாளர் புதுமைப்பித்தன் எனக்கு நேரில் தெரியாது. எனக்கும் அவருக்கும் கடிதத் தொடர்பு கூட இல்லை. அவர் வாழ்ந்த காலத்தில் அவர் எழுதிய கதைகளைப் படித்திருக்கிறேன்; இப்போதும் படிக்கிறேன். படிக்கப்படிக்கப் புதிய புதிய சுவைகளையும், உண்மைகளையும், ரகசியங்களையும் வெளியிடுகிற பேராற்றலை அவர் கதைகள் எப்படியோ பெற்றிருக்கின்றன.

ஆழம் நிறைந்த கவிதைத் துணுக்குகள் நாள் தோறும் புதிய இன்பம் தருகின்றன. அத்தகைய உரை நடைக் கவிதைத் துணுக்குகள் புதுமைப்பித்தனின் கதைகள். சாதாரண வாசகர்களின் கரங்களால் புதுமைப்பித்தனைக் கட்டிப்பிடிக்க முடியாது. எழுத்தாளர்களின் எழுத்தாளர் அவர். படிக்கத் தெரிந்த ரசிகர்களின் சிந்தனை ஊற்று அவர் கற்பனைகள்.

எழுத்தாளர்களின் கற்பனைகளிலிருந்து ஓரளவு அவர்களுடைய சொந்த வாழ்க்கையைத் தெரிந்து கொள்ள முடியும். தங்கள் வாழ்வோடு தொடர்பில்லாத பல்வேறு கற்பனைகளை அவர்கள் எழுதக் கூடுமென்றாலும், ஒரு சிலவற்றில் அவர்களுடைய வாழ்க்கை அப்பட்டமாகப் பளிச்சிடத்தான் செய்யும். பாதி உண்மையும், பாதி கற்பனையும் கலந்திருந்தால் கூட, ஆழ்ந்து படிப்போருக்கு அங்கே ஆசிரியர் தெற்றெனத் தென்படுவார்.

அகிலன்

'ஒருநாள் கழிந்தது' என்ற சிறுகதை, எழுத்தாளர் முருகதாசரின் வாழ்வில், ஒருநாள் மாலைப் பொழுதின் நடப்புக்களைக் காட்டும் சித்திரம். கதையில் வரும் பாத்திரங்கள் முருகதாசர், அவர் மனைவி கமலம், பெண் குழந்தை அலமு, ஒரு கோரைப்பாய். இரண்டு நண்பர்கள், இன்னும் ஒரு கடைக்காரன்.

கதை என்று சொல்வதற்கு அந்தக் கதையில் எங்குமே ஒரு 'தனிக் கதை' தென்படவில்லை. உணர்ச்சிப் பரபரப்பை ஊட்டும் சுவையான கட்டம் எங்கோ ஒரு இடத்தில் மாத்திரம் தேங்கி நிற்கவில்லை. கதைகளில் 'கிளைமாக்ஸ்' என்று சொல்கிறார்களே அதையே இறுதியில் ஓர் எதிர்பாராத நிகழ்ச்சியையோ நாம் காண முடியவில்லை. பொழுது போக்கிற்காக ஏடுகளைத் திருப்பும் வாசகர்களின் கண்களில் மண்ணைத் தூவுகிற கதை தான் அது. படிக்கத் தெரியாதவர்களிடமும், சிந்தனையற்றவர்களிடமும், சோம்பேறிகளிடமும் புதுமைப்பித்தன் இலேசில் தம்மை வெளிப்படுத்திக் கொள்ள மாட்டார்.

கதைச் சுருக்கம் இதுவே:-

எழுத்தாளர் முருகதாசர், பத்திரிகை ஆபீஸ்

வேலையை விட்டுவிட்டு, வெளிநாட்டுப் பொருள்களின் விளம்பரக் கம்பெனி ஒன்றில் மாதம் முப்பது ரூபாய்ச் சம்பளத்தில் வேலைபார்த்து வருபவர். கம்பெனியிலிருந்து திரும்பியவுடன், தமது 'ஆஸ்தான' அறையின் இருளை விரட்டுவதற்காக, மனைவியிடம் சென்று நெருப்புப் பெட்டி கேட்கிறார். அப்போது தீப்பெட்டி வாங்கி வருவதற்காகக் கடைக்குச் சென்ற அவர் பெண், கடைக்காரன் கடன் கொடுக்க மறுத்ததால் வெறுங்கையுடன் திரும்பி வருகிறாள். எழுத்தாளர் முருகதாசர் தாமே சென்று, அடுத்த திங்கட்கிழமை அவன் பாக்கியைத் தீர்த்துவிடுவதாக வாக்களித்து, தீப்பெட்டியை வாங்கி வருகிறார். அங்குவரும் அவருடைய நண்பர் ஒருவரிடம் கடைக்காரன் பாக்கிக்காக மூன்று ரூபாய் கடன் கேட்கும் நெருக்கடி ஏற்படுகிறது. நண்பரோ, தம் பணப்பையைத் திறந்து அதில் இருக்கும் எட்டணாவை எடுத்து நீட்டுகிறார். கடைக்காரனின் கடனுக்காக மறு கடன் வாங்கிய அந்த எட்டணாவுக்கு மனைவி காப்பிப்பொடி வாங்கி வரச் சொல்கிறாள்!

"கடைக்காரனுக்காக அல்லவா வாங்கினேன்?" என்கிறார் முருகதாசர். 'திங்கட்கிழமைக்கு என்ன செய்வது?" என்ற கேள்வியும் அவரிடம் எழுகிறது.

"திங்கட்கிழமைக்குத் திங்கட்கிழமை பார்த்துக் கொள்கிறது." என்று மனைவி பதில் சொல்கிறாள். இவ்வளவு விளக்கமாகக் கூடச் சொல்லாமல் இன்னும் சுருக்கமாகவே சொல்கிறாள்.

சிறுகதை இத்துடன் முடிகிறது. 'ஒரு நாள் கழிந்தது' என்ற தலைப்புப் போட்டிருந்தாலும்; கதையில் இன்னும் அந்த ஒருநாள் கூட கழியவில்லை. அந்த நாள் கழியும் முன்பே, அதே தீராத பிரச்னையுடன் அடுத்த நாள் முன்னே வந்து நிற்கிறது.

இதுபோன்ற சிறுகதைகளுக்கு, மேலே குறிப்பிட்டுள்ளது போல் "கதைச் சுருக்கம்' கொடுக்கப்போனால் அதில் எவ்விதச் சுவையும் காண முடியாது. பலாப்பழத்தில் தோல் நீக்கிச் சுளை எடுத்துக் கொடுக்கலாம். ஆரஞ்சுப்பழத்திலும் அப்படி எடுத்துக் கொடுக்கலாம். திராட்சைப் பழத்தில்?

'ஒரு நாள் கழிந்தது' என்ற கதையை வரிக்கு வரி படித்துப் பார்த்தால் தான், நிதானமாகச் சுவைத்துப் பார்த்தால்தான். 'சாகாவரம் பெற்ற' கதை இது என்பது நமக்குத் தெரியும்.

கல்லூரியில் தமிழும் ஆங்கிலமும் பயின்றவர் புதுமைப்பித்தன் ஆனால், ஏட்டுச்சுரைக்காய்களைத் தம் இலக்கியத் தோட்டத்தில் அவர் காய்க்க விடவில்லை. அவருடைய கற்பனை, தமிழ் நடை, கருத்தாழம் இவற்றைத் தெரிந்துகொள்ள இருபதாம் நூற்றாண்டின் செல்வாக்குப் படிந்த தமிழறிஞர்களாலேயே முடியும். தொல்காப்பியருடைய இலக்கண அளவுகோலை வைத்துக் கொண்டு புதுமைப்பித்தனை அளப்போமானால் அது வெறும் கேலிக் கூத்தாகும். 'பெயரிலேயே' புதுமையைச் சேர்த்துக் கொண்டவர். அவர் இந்த நூற்றாண்டுத் தமிழின், சிறுகதை இலக்கியப் பிரிவின் புதுக்காப்பியர்.

படித்து எழுதியவர் என்பதைவிட "**வாழ்ந்து எழுதியவர் புதுமைப்பித்தன்** என்றே சொல்லவேண்டும். பழந்தமிழையும் மேலைநாட்டு நூல்களையும் படித்து, படிப்பதோடு நில்லாமல், தெருப்புழுதியிலே உழன்று வாழ்ந்து, அந்த வாழ்க்கை அவருக்குக் கொடுத்த அநுபவங்களைத் தீந்தமிழில் வடித்துக் கொடுத்தவர். இந்தக் காலத்துக்கென்று ஒரு சங்கம் இருந்தால், அந்தச் சங்கத்தின் தன்னிகரற்ற சிறுகதைப் புலவர் அவர். அவருடைய கதைகள் பல சங்க காலக் கவிதைத் துணுக்குகளுடன் ஒப்புநோக்கி உயர்வு பெறத்தக்கவை. மனோதத்துவத்தின் ஆழம், பாத்திரங்களின் படைப்பு, வாழ்க்கையின் சித்திரம் இவை ஒரு காலத்திற்கு மாத்திரம் ஏகபோக உரிமைபெற்றவை அல்ல.

"ஒரு நாள் கழிந்தது' என்ற கதையைச் சற்று விரிவாக நோக்குவோம். ஒரு நாள் கூடக் கதையில் கழியவில்லை; ஒரு வேளையே கழிந்தது.

எழுத்தாளர் முருகதாசர், மாலையில் தம்முடைய அலுவலகத்திலிருந்து திரும்பி வந்து, தமது ஒற்றைச் சன்னலுள்ள சிறிய அறையில், களைப்பாற உட்காருவதற்காகத் தமது கோரைப்பாயை உதறிவிட்டு விரிக்கிறார்.

'கையில் இருக்கும் கோரைப்பாயை விரிப்பதே ஒரு ஜாலவித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்ஷன் கொடுக்கப்படாததால், அது நடு மத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக்கொண்

டிருந்தது, அதை விரிப்பது என்றால், முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்கவேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை. பின்பு, விடுதலை பெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுக்கள் முதுகில் குத்தாமல் இருக்க ஒரு துண்டையோ, அல்லது மனைவியின் புடவையையோ, அல்லது குழந்தையின் பாவாடையையோ, எதையாவது எடுத்து மேலே விரிக்கவேண்டும்.''

வெறும் கோரைப் பாயையா இங்கே புதுமைப்பித்தன் வர்ணிக்கிறார்? அந்தக் கிழிந்த பாய் அந்தக் குடும்பத்தாரின் அடிப்படையையே கதை கதையாகச் சொல்கிறதே! 'கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்கவேண்டும்' என்பதற்காக, அவர் அடுத்தாற்போல் தமது மனைவியின் உதவியை நாடுகிறார். வாழ்க்கையின் வரவு செலவுக் கணக்கைச் சமாளிக்க முடியாமல் அவர் தம் மனைவியின் உதவியை நாடுகிறார், என்ற சோகக் கதை எடுத்த எடுப்பிலேயே விளங்கவில்லையா? அந்தக் கிழிந்த கோரைப் பாய், தன் வாயைத் திறந்து ரசிகர்களிடம் கதை சொல்லவில்லையா? மேலே படியுங்கள்:

''முருகதாசர் வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் மிகவும் சமர்த்தர்; ''சாகாவரம் பெற்ற' கதைகளும் எழுதுவார். அந்தத் திறமையைஉத்தேசித்து, ஒரு விளம்பரக் கம்பெனி (வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் பண்டங்களின் மேல் காவியங்கள் இயற்றுவதற்காக) மாதம் முப்பதுரூபாய்க்கு வானத்தையளக்கும் அவரது கற்பனைத் திறமையைக் குத்தகை எடுத்துக் கொண்டது. அதனால் அவர், வீர புருஷர்களையும், அழியாத சித்திரங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதை விட்டுவிட்டு, சோயாபீன்ஸ், மெழுவர்த்தி, 'டபாஸா' வீரிய மாத்திரை, தேயிலைப் பானம் இவற்றின் மீது பரணி பாடி வருகிறார்!''

'சாகாவரம் பெற்ற' தமிழ் எழுதத்துடிக்கும் நெஞ்சம், முப்பது ரூபாய் வருமானத்திற்காகத் தம் கற்பனைகளை அடகு வைக்கும் நிலை வந்ததே என்று ஏங்கி வெடித்துக் கண்ணீர் சிதறுகின்றது இந்த வரிகளில், அடுத்தாற்போல் முருகதாசரின் பொருளாதார நிலையைக் கவனிப்போம்:-

''பணத்தை வாரிச் சேர்த்துக் குபேரனாகிவிடவேண்டும் என்ற எண்ணம் ஒன்றுமில்லை. கவலையில்லாமல் ஏதோ சாப்பிட்டோம், வேலை பார்த்தோம், வந்தோம் என்பதற்காக, எத்தனையோ வித்தைகளை எல்லாம் செய்துவிட்டார் அவர். அவருடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தை மட்டிலும், அவரால் எப்பொழுதும் சமன் செய்ய முடியவில்லை. நிதி மந்திரியாக இருந்தால், பட்ஜெட்டில் துண்டு விழுவதற்குப் பொருளாதார காரணங்கள் காட்டிவிட்டு, உபமான்யங்களைத் தைரியமாகக்கேட்கலாம். கவலையில்லாமல், கொஞ்சமும் உடம்பில் பிடிக்காமல் கடன் கேட்டுப் புறப்படுவதற்கு முடியுமா?''

''கவலையில்லாமல், கொஞ்சமும் உடம்பில் பிடிக்காமல், கடன் கேட்டுப் புறப்படுவதற்கு முடியுமா?'' என்றெண்ணித் தமது தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் துடிப்பவர் தாம் எழுத்தாளர் முருகதாசர். ஆனால் இந்த ரோஷ உணர்ச்சி சென்னை நகரத்தின் முப்பது ரூபாய்ச் சம்பள வாழ்வில் எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்கும்? கடைக்காரன் விளக்கேற்றி வைக்கத் தீப்பெட்டி கடன் தர முடியாதென்று அவர் பெண்ணைத் திருப்பியனுப்புகிறான். தன்மான உணர்ச்சியைக் காற்றில் பறக்கவிட்டு, தாமே கடைக்காரனிடம் சென்று, அவனுடைய கடன் ரூ. 2–5–4க்குச் சாக்குச்சொல்லிவிட்டு, நெருப்புப்பெட்டியுடன் திரும்புகிறார். இருந்தாலும் கடன் தொகை மனத்தை வாட்டுகிறது.

அடுத்தாற்போல் அவரைத் தேடி வந்த ரசிக நண்பரிடம் கடன் கேட்கிறார்:–

''தொண்டையைச்சிறிது கனைத்துக்கொண்டு, 'சுப்பிரமணியம், உங்களிடம் ஏதாவது சேஞ்ச் இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும்!'' என்றார் முருகதாசர்.

தொண்டையை அவர் கனைக்கும் போதே, கடன் கேட்பதற்காக அவர் படும் சங்கடங்கள் நமது மனக்கண் முன் வந்து விடுகின்றன. நாமும் அந்த நிலையில் இருந்து அவதிப்படுகிறோம். 'ஏதாவது

சேஞ்ச் இருக்கிறதா?'' என்று கேட்கிருர். இந்த இடத்தில் அந்த 'சேஞ்ச்' என்ற ஒரு சொல்லில்தான் உணர்ச்சியின் உயிர் நாடி கொப்பளிக்கிறது. கரும்புத் தோட்டத்திற்குள் நுழைந்தவுடன் கருப்பஞ் சாற்றைக் குடிக்கத் தெரியாமல், கணுக்களை மட்டும் எண்ணிக்கொண்டிருக்கும் பண்டிதர்கள் யாராவது இருந்தால், 'சேஞ்ச்' என்ற பிறமொழிச் சொல்லைக்கலந்து எழுதலாமா என்று கேட்பார்கள். எழுதிய ஆசிரியரின் உள்ளத்தின் உள்ளே, ஆழத்தில் தேடிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

கடன் கேட்க வேண்டிய ஒரு அவல நிலை தமக்கு வந்திருக்கும் போது, அந்த வெட்கும் படியான செயலுக்காக, ஆசிரியர் தூய தமிழ்ச்சொல்லைப் பலியிட விரும்பவில்லை! இருபது ஆண்டுகளாக மறுமலர்ச்சித் தமிழுடன் பழகி வருபவன் நான். எழுத்தாளனின் இதயத்தை அநுதாபத்துடன் புரிந்துகொள்ளும் மனப்பக்குவம்வேண்டும். அதன் அருமை பெருமைகளை உணர்ந்துகொள்ளாமல், நுனிப்புல் ஆராய்ச்சியில் புகுந்தால் வீண் பழி சுமத்தவே நமக்குத் தோன்றும்.

தமிழ் உணர்ச்சியோ அறிவோ அற்றவர்கள் தேவையற்ற, இடங்களிலெல்லாம் வேண்டுமென்றே பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதும் பிடிவாதம் தேவையற்ற பிடிவாதம். ஆனல் தேவையான இடங்களில் தேவையான உணர்ச்சிகளை வெளியிட நினைக்கும் போது, எழுத்தாளன் ட:ழந்தமிழ் அகராதியைப் புரட்டிக் கொண்டிருக்கமாட்டான்.

மூன்று ரூபாய் கடன் கேட்டதற்கு எட்டணவை நீட்டுகிருர் அந்த நண்பர்:—

''அதற்கென்ன?...... இப்போது என் கையில் இதுதான் இருக்கிறது!' என்று ஓர் எட்டணவைக் கொடுத்தார் சுப்பிரமணியம்.''

கதையின் முடிவுக்குத் தாவி வருவோம். கதையின் தொடக்கத்திற்கும் முடிவுக்கும் உள்ளே இன்னும் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்கின்றன. எதிர்பாராத அதிசயங்கள் அல்ல அவை. அன்ருட வாழ்வின் மிக மிகச் சாதாரணமான நிகழ்ச்சிகள். குழந்தை அலமுவின் பாத்திரப் படைப்பையும் அவள் கேட்கும உலக மறியாத கேள்விகளின் பொருளையும் கண்டால், கல்மனமும் கரைந்து உருகும். முழுவதும் படித்துச் சிந்திக்க வேண்டிய கதை. கதையின் முடிவுக்கு வருவோம:—

''முருகதாசர், தமது ஆஸ்தான அறையின் சிம்மாசனமான பழைய கோரைப் பாயில் உட்கார்ந்துகொண்டு, அந்த எட்டணவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டு, நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்தார்.''

கடன் கொடுப்பதற்காக வாங்கிய அந்த எட்டணவுக்கும் காப்பி பொடி வாங்கி வரச் சொல்லி கட்டளை போடுகிருள் அவர் மனைவி!— கதை முடிகிறது. முடிந்து விடுகிறதா. வாசகர்களே?

★ ★ ★

சிறுகதைச் சிற்பி புதுமைப்பித்தனின் கதைகளும் வாழ்க்கையும் என்னைப் போன்ற அடுத்த தலைமுறை எழுத்தாளர்களுக்கு வழி காட்டுவதோடு நின்றுவிடவில்லை; கடுமையான எச்சரிக்கையும் செய்கின்றன. 'நான் உங்களைப் போன்ற எழுத்தாளர்களுக்காகவும், என்றைக்கோ வரப்போகும் தரத்தால் உயர்ந்த வாசகர்களுக்காகவும் கதைகள் எழுதியவன். என்னை எளிதில் பாமரர்களும் புரிந்துகொள்ள முடியாது. ஆகவே நீங்களாவது விழிப்போடு நடந்து கொள்ளுங்கள்' என்று,சொல்லாமல் சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

'பூச்சாண்டி','நட்டகல்', 'நாதனுள்ளிருக்கையில்', என்ற தலைப்பில் நான் எழுதிய கதைகளைப் போன்று நானும் பல கதைகள் என் விருப்பத்திற்காகவே எழுதியிருக்க முடியும். சாதாரண வாசகர்களை நானும் அலட்சியம் செய்துவிட்டு, ஒரு சில புத்தம் புது முயற்சிகளில் இறங்கியிருப்பேன். ஆனல், புதுமைப்பித்தனின் எச்சரிக்கையை அடுத்த தலைமுறை மறந்துவிட முடியாது. வாசகர்களுக்காகவும் எழுத்தாளர்கள் எழுதுவது தவறல்லவே?

காலம் இப்போது மாறி வருகிறது. வெட்டிப் பொழுது போக்கு உப்புச்சப்பற்ற எழுத்துக்களில் வாசகர்கள் சலிப்படைந்து வருகிருர்கள். இருபது முப்பது இளைஞர்கள் எழுத்துக்களில் தனித்தன்மை பெற்று விளங்குவதற்காக இன்றைக்குத் துடித்துக் கொண்டிருக்கிருர்கள். எதிர்காலத்தில் இவர்களில் அழுத்தம் பெற்றவர்கள் நிலைத்து நிற்பார்கள்.

புதுமைப்பித்தனுடைய குடும்பத்திற்குத் தமிழகம்

ஏதோ ஒரு வகையில் வாழ வகை செய்து கொடுத்திருக்கிறது. இது ஒன்றும் பெரிய செயல் அல்ல. அவர் தமிழுக்காக உழைக்க முன் வராதிருந்தால், அவர் வாழும் போதே வசதிப் பெருக்குடன் வாழ்ந்திருக்க முடியும். தமிழரின் கடன் இத்துடன் தீரவில்லை.

அவருடைய நூல்கள் அனைத்தும் தமிழகத்தின் **எல்லா நூல் நிலையங்களிலும் தவறாது இடம் பெறல் வேண்டும். உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகளில் மாணவர்களுக்காக வெளியிடப்பெறும் தமிழ் நூல்களில் புதுமைப்பித்தனின் கதைகள் சுடர்விட வேண்டும்.** இலக்கணத்தின் போக்கு காலத்திற்குத் தக்கவாறு மாறக்கூடியது. அதைக் காரணம் காட்டிப் புதுமை இலக்கிய வளர்ச்சியைத் தடை செய்ய முயலக்கூடாது. மாணவ உள்ளங்களையும் பாழ்படுத்தும் முறையில், வேறு பாதைகளில் மலிந்த ரக எழுத்துக்கள் இன்று வெளி உலகில் மலரத் தொடங்கியுள்ளன. இந்த எச்சரிக்கை இன்னும் மாணவ மாணவிகளை நான்கு புறச் சுவர்களுக்குள்ளே கட்டி ஆள்பவர்களுக்குத் தெரியவில்லையா?

நல்ல சமயம் இதுவே!

தமிழும் ஆங்கிலமும் படித்தவர்கள், ரசிக மனங்கொண்ட ஆராய்ச்சியாளர், டாக்டர் பட்டம் பெற்றவர்கள், பன்மொழிப்புலவர்கள் பலர் இன்றையத் தமிழைத் திரும்பிப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். வாழ்வைத் தமிழுக்காகவே செலவிடும் மறுமலர்ச்சியாளர்களை மதிக்க முன்வந்திருக்கிறார்கள். மறுமலர்சிக்காரர்கள் பழந் தமிழ் படித்து மகிழ்வதும், பழந் தமிழாராய்ச்சியாளர் புதுமையைப் போற்றுவதும் கண்கூடு.

புதுமையில் மோசமானவற்றை ஒதுக்கிவிட்டு சுமாரானவற்றை யோசனைக்கு எடுத்துக்கொண்டு நல்லவைகளைத் திறந்த மனத்தோடு வரவேற்பதற்கு அவர்கள் முன்வரவேண்டும். விரித்துச் சுருக்கிக் கூட்டிக் குறைத்து, தேவையான பகுதிகளை இளம் தலைமுறைகளுக்கு மேலைநாடுகளில் அறிமுகம் செய்து வைக்கிறார்கள். சிறுகதைகள், கட்டுரைகள், ஓரங்க நாடகங்கள், கவிதைத்துணுக்குகள் இன்றையப் பாட நூல்களில் பங்குகொள்ள வேண்டும்.— **புதுமைத் தமிழ் இலக்கியத்திற்காகவே வாழ்ந்துமடிந்த புதுமைப்பித்தன் பெயரால் இந்த வேண்டுகோளைவிடுக்கிறேன்.** ★

அடிக்கடி நினைப்பு

வாழ்க்கையில் துன்பம் நிறைந்த அம்சங்களைபற்றியே புதுமைப்பித்தன் எழுதினார். சமூகத்தில் புண் எங்கே இருக்கிறது – புரையோடிப் போய் கிடக்கிறது என்று ஆராய்ந்து எழுதினார். ஆகையால் அவரது கதைகள் சோகம் நிறைந்ததாய் இருக்கும். படிக்கும் போது மனம் வேதனைப்படும். ''இதையெல்லாம் இவர் எதற்காக கவனிக்கிறார் - எதற்காக எழுதுகிறார் நம்மையும் படிக்கச் செய்கிறார்'' என்று கோபமே உண்டாகும். ஆனால் இப்படி சோகம் நிறைந்து வேதனை தரும் அவர் எழுத்தில் ஒரு பக்கத்தில் ஹாஸ்ய நரம்பு ஓடிக் கொண்டிருக்கும். ''அட பித்துக் குளி உலகமே'' என்று நம்மை அடிக்கடி நினைக்கச் செய்யும். —பேராசியர், கல்கி.

வல்லவர்

தமிழ் நாட்டின் மறுமலர்ச்சிச் சிறுகதை எழுத்தாளர்களில் மிகச் சிறந்தவர் புதுமைப்பித்தன். கரை கடந்த காட்டாற்று வெள்ளம் போன்ற உணர்ச்சிகளைப் புகுத்தி அலாதியான பாணியில்மனம் அழுந்தும் வகையில் கதைகளை சிருஷ்டிப்பதில் வல்லவர்.

—தி. ஜ. ர

ஒரே பித்தன்

தமிழ் எழுத்தாளர்களில் புதுமைப்பித்தன் தலைசிறந்தவர். ஒரே புதுமைப்பித்தன் தான் இருக்கமுடியும். இரண்டாவது புதுமைப்பித்தனைக் காண்பது அரிது. அவரது எழுத்திலே கருத்தின் கதியும் ஒளியும், மின்னலும், சிருஷ்டி எழிலுடன் தோன்றி யாவரையும் உற்சாகப்படுத்தி புதுமுறையிலும், புதிய இலக்கியத்துறைக்கு இழுத்துச் செல்லும் சக்திவாய்ந்தவை.

-பண்டித மணி
வி. ஆர். எம். செட்டியார்

போக்கை மாற்றியவர்

வாழ்க்கை நதியின் மேலோட்டத்தைக் கண்டு மகிழ்ந்து இன்பம் நிறைந்ததே வாழ்வு என்று, சித்தரிக்க வேண்டும் என்று விதி செய்து வாழ்ந்த இலக்கிய சனாதனிகளின் இதயம் கொதிக்கும்படியாக முகம்சிவக்கும் படியாக தமிழ் இலக்கியத்தின் போக்கையே மாற்றிவிட்ட பெருமை புதுமைப்பித்தனுக்கே உண்டு.

—''வல்லிக் கண்ணன்''

வெற்றியின் ரகசியம்

க. கைலாசபதி, பி. ஏ. ஹானர்ஸ் (பிரதம ஆசிரியர், தினகரன், கொழும்பு)

"ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனிப்பட்ட கலாபாவம் உண்டு. கலையின் தத்துவம் ஒன்றுதான். அதன் அடிப்படையான விதி ஒன்றுதான். ஆனால் அது சமுதாயத்தின் வாழ்க்கைக் கண்ணுடி; வாழ்க்கை கற்ற ஒரு கலையின் மேதையை அந்தச் சமுதாயம் தான் பூரண மாக அறிய முடியும்."

—புதுமைப்பித்தன் (கட்டுரைகள்)

தமிழ்ச் சிறுகதையிலே ஒப்பாரும் மிக்காருமற்று விளங்கும் புதுமைப்பித்தனை—அவர் இலக்கிய மேதைத் தன்மையை—தமிழ்ச் சமுதாயம் இப்பொழுது மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. நவயுகத்தைக் கூவி நாவார அழைத்த புதுமைக்கவி பாரதியாரைப் போலப், புதுமைப்பித்தனும் இலக்கியத்தில் புதுமையையும், புரட்சியையும் புகுத்திய வராகக் கருதப்படுகிருர். புதுமையின் பெயரால் புதுமைப்பித்தன் இன்று சிலரால் கண்மூடித் தனமாகக் கூடப் போற்றப்பட்டாலும், தமிழிலக்கிய வரலாற்றிலே—தொன்று தொட்டு நிலவி வரும் தமிழ் இலக்கியப் பாரம் பரியத்திலே புதுமைப்பித்தன் அழியாத இடம் பெறுவதற்கு புதுமைப்பித்தனது **'புதுமைப் பித்து'** மட்டும் காரணமாகி விடவில்லை. புதுமைப்பித்தனுக்கு இலக்கிய உலகில் அமரத் துவம் அளிக்கும் பண்பு—ஜீவசத்து— எது என்பதனை ஒரு சிறிது தொட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிறுகதை : என்னும் இலக்கிய வடிவம் தமிழுக்குப் புதியது என்பது உண்மை. ஆனல் புதிய இலக்கிய வடிவங்களைக்கையாள் வதினல் மட்டும் ஓர் இலக்கிய கர்த்தா மேதை யாகி விடுவதில்லை. புதிய இலக்கிய வடிவங்கள் பிறப்பதும், அவற்றைப் படைப்பதும், இலக்கியத்துக்கோ, இலக்கிய சிருஷ்டி கர்த்தாக் களுக்கோ புதுமையான விஷயங்களுமல்ல. தொடர் நிலைச் செய்யுளைப்பாடிய சிலப் பதிகார ஆசிரியர் இளங்கோவும், விருத்தப்பா வில் காவியம் பாடிய சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவரும், பரணிபாடிய செயங் கொண்டாரும், பள்ளுப் பிரபந்தத்தைப் பாடிய வரும், குறவஞ்சியை உருவாக்கிய வரும் முதன் முதலில் புதிய இலக்கிய வடிவங்களையே கையாண்டிருக்கின்றனர். வட மொழியிலிருந்து எடுத்தார்கள் பண்டைய புலவர்கள்; ஆங்கிலம் பிரெஞ்சு, ஜெர்மன், முதலிய மொழிகளி லெல்லாமிருந்து புதியபுதிய இலக்கிய வடிவங் களையும் சாயைகளையும் பெற்றுக் கொள் கிருர்கள் இற்றைய இலக்கிய ஆசிரியர்கள். எனவே புதிய இலக்கிய வடிவமான சிறுகதை உருவமைப்பை வெற்றியுடன் கையாண்டத ஞல் மட்டும் புதுமைப்பித்தன் பெரும் புலவனுகி விடவில்லை என்பதை நாம் முதலில் நினைவு கொள்ளலாம்.

அவ்வாருயின் புதுமைப்பித்தனது வெற்றி யின் இரகசியம் யாது?

புதுமைப்பித்தன் என்றும் புனைப் பெயரைத் தாங்கித் திரிந்திருந்தாலும் புதுமைப் பித்தன் தமிழிலக்கிய மரபில்—பழமையில் ஊறித்திளைத்தவராக இருந்தார். கம்பன் இளங்கோ, வள்ளுவர், நாயன்மார், ஆழ்வார் முதலிய பெரும் புலவர்களைக் கற்று நன் குணர்ந்து, இடைக்காலப் புலவர்களை விரும்பிச் சுவைத்து, கோபாலகிருஷ்ண பாரதியார், இராமலிங்க சுவாமிகள் முதலிய இசைக் கவிஞர்களைத் தன்னுள்த்திற் கொண்டதன் காரணமாகவே மகாகவி பாரதியார் புதிய புதிய புதுமைகளைப் புகுத்தும் வல்லமை பெற்றிருந்தார். புரட்சி பற்றிப்பாடும் போதும் மாகாளியின் கடைக் கண் வீச்சைக் கூறும் திறத்தை இழக்கவில்லை பாரதியார். 'வாழையடி வாழையாக வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவனன்றே' என்று பாரதி யும் கூற முடிந்தது.

கற்பு, காதல், நட்பு, வீரம், மானம், பக்தி

முதலிய பற்பல துறைகளிலும் நிலவி வந்த நடைமுறைப் பழக்கங்களையும், நம்பிக்கைகளையும் புதுமைப்பித்தன் தாக்கினார்—சாடினார்—கேலி செய்தார் என்பது உண்மையே. ஆனால் அதே சமயத்தில் அவற்றைத் தமிழ்க் கண் கொண்டே அணுகினார். மேனாட்டு இலக்கியங்களை நன்கு கற்றார் புதுமைப்பித்தன். ஆனால் அவரது கதைகளிலென்ன, கட்டுரைகளிலென்ன, பரிசிலனைக் கவிதைகளிலென்ன, சொல்லும், பொருளும் தமிழ் மண்ணில் பிறந்தவையாகவே இருந்தன.

உவமை, உருவகம், குறிப்புப் பொருள், சொற் சேர்க்கை முதலிய நுணுக்கங்களிலேயே ஓர் இலக்கிய மேதையினது அசாதாரண ஆற்றல் வெளிப்படுகிறது. மரபு வழி நின்று இந்த நுணுக்கங்களைக் கையாளும் போதுதான் அவற்றின் பூரணத்துவம் புலப்படுகிறது.

இந்த இடத்தில் **மரபு** என்றால் என்ன எனச் சிறிது கூற வேண்டும் என எண்ணுகிறேன். ஒரு சமுதாயத்தினரின், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சமுதாய நடைமுறை விதிகள், சமயச் சடங்குகள், தனி மனித—சமூக உறவு முறைகள் ஆகிய யாவும் சேர்ந்தே **மரபு** ஆகின்றது. சுருங்கக் கூறின் மரபு என்பது இன்னது இன்னது ஆகாதன என வரையறுக்கும் வழிவழி வரும் ஒரு சக்தியாகும். உதாரணமாக தெருவில் போகும் ஒருவருக்குக் கைகூப்பி வணக்கம் கூறுவதும், பகிரங்கமாகப் பெண்களை முத்தமிடாததும், வெள்ளிக்கிழமைகளில், கோயிலுக்குப் போவதும் நமது தமிழ், இந்து சமுதாய மரபின் பாற்படுபனவே. இவற்றையெல்லாம் அனுசரித்தே ஒரு சமுதாயத்தினரின் கலை, இலக்கியம் முதலானவை உருப் பெறுகின்றன. இதனை மனதிற் கொண்டே, புதுமைப் பித்தனும்,

"ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனிப்பட்ட கலா பாவம் உண்டு" எனக் கூறியுள்ளார்.

புதுமைப்பித்தனது, கதை, கட்டுரை, கவிதை, பிற உதிரி எழுத்துக்கள் ஆகிய சகலவற்றையுங் கொண்டே நாம் அவரை மதிப்பிட வேண்டும் அல்லவா? அப்படிப் பார்த்தால் புதுமைப்பித்தனது மரபுணர்ச்சியை மூன்று வகையாக அறிந்து கொள்ளலாம்.

(1) தமிழ் இலக்கியம், வரலாறு, கர்ண பரம்பரைச் செய்திகள் ஆகியவற்றைத் தமது எழுத்துக்களுக்குப் பொருளாகக் கொண்டிருக்கிறார்.

(2) தமிழ் இலக்கிய வளத்தைக் காட்டும் சொல்லாட்சி; உவமை, உருவக ஆட்சி முதலியனவற்றை அவரது வசனத்திலும் கவிதையிலும் காணலாம்.

(3) தமிழ் நாட்டு வாழ்க்கை முறையை உள்ளும் புறமும் தெரிந்து கொண்டார் அவர்.

பொன்னகரம், கவந்தனும் காமனும், விபரீத ஆசை, முதலிய கதைகளில் சம்பிரதாயமாகக் கொள்ளப்பட்ட ஒழுக்கக் கருத்துக்களைக் கிண்டல் செய்து 'உள்ளதை உள்ளபடி' காட்டினார் புதுமைப்பித்தன். **நாசகாரக்கும்பல், துன்பக் கேணி, மனித யந்திரம், மகாமசானம், உபதேசம்** முதலிய கதைகளில் அன்றாடப் பிரச்சினைகளை அலசினார்; எனினும் இவையாவும் தமிழ் மண்ணின் மணங்கமழ வெளி வந்தன.

"ஸ்டோர் மானேஜர் கண்ணப்ப நாயனார் ரகத்தைச் சேர்ந்த பேர் வழி. தனது இஷ்ட தெய்வத்திற்கு தான் ருசித்துப் பார்த்துத் தான் சமர்ப்பிப்பார்"—

(—துன்பக் கேணி)

"பக்தி மார்க்கத்தில் ஏகாக்கிரக சிந்தையைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கிறார்கள்; மனம் ஒரே விஷயத்தில் லயித்து விட்டால் போதுமாம்; பிள்ளையவர்களைப் பொறுத்த வரை அவர் இந்தப் 'பணம்' என்ற மூன்றெழுத்து மந்திரத்தில் தீவிர சிந்தை செலுத்துபவர்.

(—ஒருநாள் கழிந்தது)

"வீட்டு வரவு செலவு கணக்கு மட்டும் அவருடைய இந்திர ஜாலவித்தைகளுக், கெல்லாம் மீறி, உலகளந்த பெருமாளாகச் சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாகப் பரந்து கிடக்கிறது; பரந்து கொண்டு வருகிறது"

(—மனித யந்திரம்)

சமூகக் கதைகளில் புதுமைப்பித்தன் கையாண்ட நடை இது.

அன்று இரவு, சிற்பியின் நரகம், பிரம்மராக்ஷஸ், கனவுப் பெண், அகல்யை, கொன்ற சிரிப்பு, மனக்

குகை ஓவியங்கள், சாபவிமோசனம், ஆகிய கதைகள் பழைய பொருள்களை, புதிய நோக்கில் பார்க்கும் முயற்சிகள், அபரா வெற்றிப் படைப்புகள், **நாரத ராமாயணம்** இத்துறையில் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும் ஆடன், எலியட், ஸீன்ஓகஸி, ஆர்தர் கொஸ்லர், ஜேம்ஸ் ஜாய்ஸ், அலன் போ, பிரிட்செட், டி. எச். லாரன்ஸ் முதலிய மேனாட்டு ஆசிரியர்களுக்கீடாக எல்லாம் தமிழ் இலக்கியம் படைக்க வேண்டும் எனத் துடித்து ஓரளவு வெற்றியுங்கண்டு தமிழுக்குப் புகழும், தனக்கு அமரத்துவமும் தேடிக் கொண்ட புதுமைப்பித்தன் தமிழ் மரபு தவறாது இலக்கியம் படைத்தார் என்பதை நாம் மறத்தலாகாது. திரு சிதம்பர ரகுநாதன் கூறியிருப்பது போல, "புதுமைப் பித்தன் கதைகள் தமிழுக்குத் தனி வழி, தனிப்பாதைகாட்டின; எனினும் அவர் மரபு தவறவில்லை." ★

GOVERNMENT APPROVED CONTRACTORS

PHONE: 60280 P.O. BOX 200

B.S. MOHIDEEN & CO.,

ESTD. 1920.
BUSINESS REGISTRATION NO. 10251

48, BEACH STREET, PENANG.

Head Office: 26, Chulia Street, Singapore
Phone: 33696

Branch: 39, Riverside, Malacca, Phone: 249

Government Contractors,
City & Estate Suppliers
Specialists In General Hardware, Stationery Crockery & Household Utensils.

சாந்தகுமாரி ஸ்டோர்ஸ்

பலசரக்கு மளிகை வியாபாரம்

(உரிமையாளர்: T. கருப்பையா)

69-B. ஜுலுத்தோங் ரோடு. பினங்கு.

SANTHAKUMARY STORES

(Prop: T. KARUPPIAH)

IMPORTERS, EXPORTERS AND GENERAL MERCHANTS.

69-B, JELUTONG ROAD.

PENANG.

எங்களிடம், அறிவு, ஆராய்ச்சி, இலக்கணம் இலக்கியம், நாவல், துப்பறியும் கதைகள் யாவும் கிடைக்கும். நியாயமான விலை. நீண்ட நாளைய சேவை.

எல்லாவித மலாய், தமிழ் ஆங்கில தினசரிகளும் எங்களிடம் கிடைக்கும்; உங்கள் திருப்தியே எங்கள் குறிக்கோள். ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்.

இபுருஹீம் புக் ஸ்டால்

8, ஜாலான் இபுருஹீம்,

சுங்கைப்பட்டாணி.

வாழ்க்கையும் இலக்கியமும்

மா. செ. மாயதேவன்

வாழ்க்கைதான் இலக்கியம்; இலக்கியந்தான் வாழ்க்கை. இவ்விரண்டின் இடையிற்றான் மனிதன் தத்துவம் பேசிக் கொண்டிருக்கிறான். எழுதுவதெல்லாம் இலக்கியமாகாது. எழுத்தாளரெல்லாம் மேதையாக விருக்க முடியாது.

வாழ்க்கைப் போக்கை அறிவாலும் அனுபவத்தாலும் அறிந்து ரசித்து எழுதுவது தான் இலக்கியம். பாலாற்றையும் பரந்தாமனையும் பக்தனையும் வைத்து வருணனைகளைச் செங்கற்கள் போல் அடுக்குவது இலக்கியமாகாது.

வாழ்வின் ஆசாபாசங்களையும் மனித உள்ளங்களில் கொப்புளித்துக் குமுறும் உணர்ச்சிப் பிரளயங்களையும் இருளில் உறவாடும் மனித மிருகங்களையும் விடுத்துக் காதலுக்குங் காமத்துக்கும் பக்திக்கும் முதலிடங் கொடுத்தெழுதினால் மட்டும் அவற்றை இலக்கியமென்று ஒப்புவதற்கில்லை.

பெரிய வீட்டுப் பெருமைகளையே கதைக்கும் எழுத்தாளர் அக் குடும்பங்களில் நடைபெறும் ஆசாபாசங்களை எழுதுவதில்லை! பணத்திற்கும் பதவிக்கும் மனைவியை மாற்றானுக்குக் கூட்டிக் கொடுக்கும் மாஜிக் கணவர்களும், சில்லறைச் செலவுக்குப் புழக்கடையில் உடலை விற்கும் பெரிய வீட்டுப்பெண்களும் ஹோட்டலிற் சோரம் போகுங் குமாரிகளும் அவர்களின் கண்களுக்குத் தென்படுவதில்லை.

இவை போன்ற சமூகக் குற்றங்களைக் கண்டிக்காமலிருந்தால் இந்த மனித மிருகங்களின் ஆசாபாசம் பெரும் நாசத்தை விளைவித்துச் சமூகத்தையே அரித்துவிடும்.

இப்படியான மனித ஜந்துக்கள் வாழும் வரை புதுமைப்பித்தன் போன்ற எழுத்துலக மன்னர்கள் நூற்றுக்கணக்கில் வாழ வேண்டும். ஒரு புதுமைப்பித்தன் போதாது. பல புதுமைப்பித்தன்கள் தோன்ற வேண்டும். தமிழனின் துர திருஷ்டம் ஒரு புதுமைப் பித்தனையும் வாழவைக்க வழியில்லாமல் சாகடித்து விட்டது.

புதுமைப்பித்தனின் **நமது இலக்கியம்** அபாரக்கலை விமர்சனம். "வாழ்க்கைதான் இலக்கியம்" என்று அந் நாலில் வலியுறுத்துகிறார். வேலூர்க் கந்தசாமி கவிராயர் என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதிவந்த புதுமைப்பித்தன் "நமது இலக்கிய"த்திற் கவிதைகளின் சொற் செட்டுகளைப் பற்றி அருமையாகச் சொல்லுகிறார்.

"கடவுள் கனவு கண்டார்; இந்தப் பிரபஞ்சம் பிறந்தது. கவிஞன் கனவு கண்டான்; இலக்கியம் பிறந்தது. இதிலே பத்துத்தலைராவணன் உலகில் இல்லையே; கவிஞன் பொய்யன் தானே என்று கவிதையிலே சரித்திரத்தையும் பொருளாதாரத்தையும் ஒழுக்கத்தையும் தேடிக் கொண்டிருக்கும் பெரியார்கள் கவிஞனை அறியவில்லை. அறியவும் முடியாது. சிருஷ்டியின் ரகசியத்தைச் சற்று அறிந்தவர்கள் கவிஞனைத் தராசிற் போட்டுப் பார்ப்பவர்கள் அல்லர்; கவிஞனது சக்தியை அனுபவிப்பவர்கள்.'

என்று கவிதையையும் கவிஞனையும் இணைத்துச் செய்யும் விமர்சனம் வியத்தற்குரியது.

இலக்கியத்தின் முதற் பகுதியில் சிறப்பது கவிதை. கதையால், காவியத்தால், உரை நடையாற் சாதிக்க முடியாததைக் கவிதையாற் சாதிக்க முடியும், கவிஞனால் மட்டுந் தான் உலக வாழ்க்கை ஊடுருவிப் பார்க்க முடியும்.

"கவிஞன் இரண்டாவது பிரம்மா" என்ற புதுமைப்பித்தன் "கவிஞன் உலகத்தின் உண்மைகளையும் வாழ்க்கையின் ரகசியங்களையும் வேறு விதமாகப் பார்க்கிறான். அவன் கண்கள் உணர்ச்சிக் கண்கள்: கனவுக் கண்கள், என்று கவிஞனின் இலக்கணத்தைக் கூறுகிறார்.

கம்பன் சந்திரோதயத்தைக் காண்கிறான், கவிதை பிறக்கிறது:

"பெருந்திண் நெடுமால் வரை நிறுவிப்
பிணித்த பாமபின் மணித் தாம்பின்
விரிந்த திவலை, உதிர்ந்த மணி,
விசும்பின் மீனின் மேல் விளங்க
அருந்த அமரர் கலக்கிய நாள்
அமுதம் நிறைந்த பொற் கலசம்
இருந்த திடை வந்து எழுந்த தென
எழுந்தது ஆழி வெண் திங்கள்"

என்று கம்பன் கவிதையைக் குறித்த புதுமைப்பித்தன், "கம்பன் சந்திரோதயத்தைப் பார்க்கவில்லை. அழகின் பிறப்பாகிய, கலையின் பிறப்பாகிய, தேவாசுர யுத்தக் காப்பியத்தைக் காண்கிறான். அவனுக்குச் சந்திரோதயம் யதார்த்த உண்மையில்லை; அவன் உள்ளத்தின் கனவு, கனவு அனுபவத்தில் எழுந்த பாட்டுத்தான் கவிதை," என்றும் குறிப்பிடுகிறார்.

வாழ்க்கையைப் போட்டோப் பிடிப்பவன் கலைஞனல்லன். விமர்சிப்பவனே கலைஞன். இப்பணியில் மகத்தான வெற்றி கண்டவர்களிற் குறிப்பிடத்தக்கவர் மேதை புதுமைப்பித்தன்.

இயற்கையின் தேவை

இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலி; சமூகத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல் கல்; மனித இலட்சியத்தின் உயிர் நாடி." என்ற புதுமைப்பித்தன் சொல்லில் மட்டும் வீரராக விராமல் காரியத்தையுஞ் சாதித்துக் காட்டினார். அவருடைய சிறுகதைகள் அனைத்தும் வாழ்க்கையின் தத்துவத்தைப் போதிக்கும் சமய சஞ்சீவியாகவே இருக்கின்றன. மக்களின் உணர்ச்சிப் பிரளயத்தைப் பிரதி பலிக்குஞ் சிறுகதைகளையே அவர் சிருஷ்டித்தார். அவருக்கு ஈடு இணையாகச் சிறுகதை சகாப்தத்தில் மிகச் சிலரைத்தான் குறிப்பிட முடியும்.

இன்றும் அன்றும் காதலுக்காகவே சிறுகதைகள் எழுதப்பட்டன. புதுமைப்பித்தன் காதலுக்காக மட்டுமின்றி வாழ்க்கைக்காகவும் எழுதினார். இதனாற்றான் அவருடைய சிறுகதைகளை 'இலக்கியம்' என்கிறோம். சிறுகதை இலக்கியத்தில் தமிழில் ஒரு புதுத் திருப்பத்தைக் கொணர்ந்தவர்களிற் புதுமைப்பித்தன் குறிப்பிடத் தக்கவர். வெறும் பொழுது போக்குக்காகவுங் காமச் சுவைக்காகவும் புதுமைப்பித்தன் சிறுகதைகளை எழுதவில்லை. அவர் எழுதும் கதைகள் மற்றவர்களைச் சிந்திக்கச் செய்தன; சிலருக்குப் பிடிக்காமலும் இருந்தன. இது தெரிந்துதான் "உங்கள் அளவு கோல்களைத்தான் என் கதையருகில் வைத்து அளந்து பார்த்துக் கொள்கிறீர்கள். கதையின் கருத்து உங்கள் அளவு கோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நான் பொறுப்பாளியல்லன்..." என்று சொல்கிறார்.

புதுமைப்பித்தன் விதவைகளைப் பற்றிப் பல கதைகளில் எழுதியிருக்கிறார். விதவை என்றால் வெள்ளைப் புடைவையுடன் கோவிலைச் சுற்றும் போக்கிலே கதைகள் எழுதவில்லை. புதுமைப்பித்தன் எதிர்மாறாக எழுதினார். உண்மை விஷயத்தை அவர் மறைக்கவில்லை; பூசி மெழுகவுமில்லை!

வாடா மல்லிகை என்ற புதுமைப்பித்தன் கதையை இங்கு எடுத்துக் கொள்வோம். கதாநாயகியின் பெயர் சரசு. பிராமணப்பெண். பதினேழு வயதுதான் இருக்கும். அதற்குள் விதவையாகி விட்டாள்; பாவம்!

விதவை என்றால் அவளுக்கு ஆசாபாச உணர்ச்சிகள் இல்லாமலில்லை. வாழ்ந்து அனுபவித்தவள். கன்னிப் பெண்களைவிட விதவைகள் தாம் அதி சீக்கிரத்தில் உணர்ச்சிக்கு அடிமையாகி விடுகின்றனர் என்று உடல் நூல் வல்லுநர்கள் கூறுகின்றார்கள்.

"கூடிய காமம் பிரிந்தார் வரவு உள்ளிக்
கோடு கொடு எறும் என் நெஞ்சு"

என்பது குறள்.

சரசுவை இயற்கை வேதனை வாட்டுகிறது. துடிக்கிறாள்—இந்த இடத்திற் புதுமைப் பித்தன் குறிப்பிடுவதைப் பாருங்கள்: "சரசு இந்துப் பெண். வாயில்லாப் பூச்சி. பெற்றோரையும் புருஷனையும் மூன்னோரையும் நம்பித் தான் உயிர் வாழ்ந்தாள். கலியாணம் செய்து வைத்தார்கள். புருஷன் வாழ்க்கையின் இன்பத்தைச் சற்றுக் காண்பித்துவிட்டு விடாய் தீருமுன்... செத்துவிட்டான்."

புதுமைப்பித்தன் கூறுவதை நாம் அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டித்தான் வருகிறது. அவள் இளம் பெண். ஆசை தீருமுன் கணவன் இறந்து விட்டான். அவருடைய அனுபவ ஆசை உள்ளத்தை அரிக்கிறது. அவளுக்குக் கெட்டுப்போக மனமில்லை.

அன்று சரசுவின் தம்பி துரைசாமிக்குக் கலியாணம். அவள் உள்ளத்திற் பழைய நினைவுகள் எழுகின்றன. அந்த 'முதல் இரவைப் புதுமைப்பித்தன் "........... அவளுக்கு என்னென்னவோ நினைவுகளெல்லாம் குவிந்தன. அப்படித் தானே மூன்று வருஷங்களுக்கு முன் முதன் முதலாக' அவருக்கு என்னன்னவோ தோன்றின. சந்தோஷகரமான வாழ்க்கையை ஓர் இன்ப ஒளியாக்க முயன்ற அந்த இரவின் ஒவ்வொரு சிறு சம்பவமும்... அவர் முதலில் என்ன கூச்சப்பட்டார்! பிறகு அந்த உரிமை என்ற தைரியம் தானே! ...இவ்வளவு சீக்கிரம் அவள் வாழ்க்கை இருட்டிவிடும் என்று அப்பொழுது கண்டாளா?" என்கிறார்.

இந்த எண்ணங்கள் சரசுவின் உள்ளத்தில் அலை மோதும் போது துரைசாமியையும் அவன் மனைவியையும் அழைத்துச் செல்கின்றனர். மணமக்களைப் பார்த்து சரசு பெருமூச்செறிகிறாள். உடலெல்லாம் சொல்ல முடியாத ஒரு கிளர்ச்சி; பின்புறமுள்ள புழக்கடைக்குச் சென்றாள்.

சரசுவின் உள்ளக்கிளர்ச்சியில் கண்ணோட்டமாயிருந்த-புதுமைப்பித்தன் கதையில் வரும்-கதநாயகன் பின் தொடர்ந்து அவளை நெருங்குகிறான். இதைப் புதுமைப்பித்தன் "இன்னும் நெருங்கித் தோளில் கையை வைத்தேன். உணர்ச்சியற்ற மரக்கட்டை போல் நின்றாள்." என்கிறார். மேலும் அவன்—கதாநாயகன் "சரசு நான் இருக்கிறேன், பயப்படாதே!" என்றான். சரசுவோ, "நான் ஒரு இந்துப் பெண்!" என்று உள்ளே சென்று விட்டாள்.

இந்த இடத்தில் "இந்துப் பெண் என்றால் ஆசா பாச உணர்ச்சிகள் இல்லையா?" என்று வாசகர்களைப் பார்த்துப் புதுமைப்பித்தன் கேட்கிறார்.

மீண்டும் சரசு வருகிறாள். அவளுக்கும் உள்ளூர ஆசைதான் "சரசு! நான் கூறியது வேறு...நான் உன்னை மணம் செய்து கொள்கிறேன்," என்றான்.

"கொள்கைக்காக நீர் தியாகம் செய்து கொள்ள வேண்டாம்—மிஞ்சினால் நாம் உமக்குப் போகக்கருவியாகத்தான்... இருக்க வேண்டும். அது வேண்டாம். நான் காதலைக் கேட்கவில்லை. தியாகத்தைக் கேட்கவில்லை. நான் தேடுவது பாசம்..." என்று சுற்றி வளைத்துத் தான் படும் இயற்கை வேதனையைத் தெரிவித்தாள்." அது என்னிடம் இருக்கிறது," என்றான்.

"...அப்படியானால் திருமணம் வேண்டாம்... பாசம் இருந்தால் போதும்..." என்று தலைகுனிந்தாள். அப்போது சரசுவுக்குத் திருமணமோ காதலோ தேவையற்றதாக விருந்தது. அவளுக்கு வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்!

"என்ன சரசு இப்படிச் சொல்கிறாய். இரகசியம் பாவம் அன்றோ? கலியாணம் இதை நீக்கிவிடுமே!" என்றான். இவன் நல்லவன். சீர்திருத்த நோக்கமுள்ளவன். விதவைகள் மணம் புரிந்து கொள்வதை ஆதரிப்பவன். சரசுவோ அவன் பாசத்தை மட்டும் கேட்கிறாள். "நீ ஒரு பரத்தை!" என்று சரசுவிடம் எடுத்துச் சொல்கிறான்.

"நான் பரத்தையல்லள்—நான் ஒரு பெண். இயற்கையின் தேவையை நாடுகிறேன்!" என்றாள். நேர்மையும் நல்ல நடத்தையும் உள்ள அவன் பேசாமல் வெளியேறுகிறான்.

"கதையின் இறுதிக் கட்டத்தில் என் மனம் கலங்கி விட்டது வெளியேறினேன்..." என்று புதுமைப்பித்தன் குறிப்பிடுகிறார். அதுமட்டுமா? 'மறுநாள் சரசுவின் பிணம் கிணற்றில் மிதப்பதாகவும் கதை முடிகிறது.

கதையில் இரு தெய்வப்பிறவிகளைப் பார்க்கிறோம். சரசு நம் நெஞ்சில் நிழலாடுகிறாள்! நல்லவனான 'அவனை'யும் நம்மிடையே பார்க்க முடிகிறது!!

வாழத் தெரிந்தோர்

தே. நவமணி

மாலை ஆறு மணியிருக்கும். தங்கத்தை உருக்கித் தரையில் கொட்டியது போல் வானத்தில் மஞ்சள் பூத்திருந்தது. பஸ்ஸுக்காக அரை மணி நேரமாகக் காத்து நின்றேன். ஆனால் பஸ் வந்தபாடில்லை.

'சாமீ! நீங்க நல்லாயிருப்பீங்க! சாப்பிட்டு மூணு நாளாகுது. ஏதாவது கொடுத்து உதவுங்க. உங்களுக்குக் கோடிப் புண்ணியம் கிடைக்கும்.'

என் எதிரில் நின்று கொண்டிருந்த அந்தப் பிச்சைக்காரனை நன்றாக உற்றுப் பார்த்தேன். கலைந்த கேசம், அழுக்குப் படிந்த ஆடைகள், கண்களில் தேங்கி நிற்கும் சோகம், குரலில் இழைந்த ஏக்கம் அத்தனையும் சேர்ந்து என் உள்ளத்தை உருக்கி விட்டது. ஜேபியில் கைவிட்டுத் துழாவினேன். சில்லறைக் காசில்லை. முழுசாக ஒரு வெள்ளி தான் கையில் அகப்பட்டது. அப்படியே எடுத்து அவன் கையில் கொடுத்தேன்.

'கடவுளை உங்க உருவில் காண்கிறேன், சாமீ! நீங்க பெரு வாழ்வு வாழணும்' என்று நன்றி ததும்ப, குரல் தழுதழுக்கக் கூறிய அவன், எனக்கு நாலைந்து முறை கும்பிடு போட்டு விட்டு நகர்ந்தான்.

இது பிச்சைக்காரர்களின் இயற்கை குணம். பிச்சையிட்டால் புகழ் மாலை சூட்டுவதும், பிச்சையிடாமல் விரட்டியடித்தால் வசை புராணம் பாடுவதும் அவர்களோடு பிறந்தவை. பிச்சையெடுப்பவர்களும் மனிதர்களே. ஏதோ சூழ்நிலை சந்தர்ப்பத்தால் பிச்சை எடுக்கிறார்கள், அவர்களுக்கு வேலை கொடுத்து நாம் உதவி செய்ய முடியவில்லையென்றாலும் நம்மிடம் இருக்கும் பொருளில் கொஞ்சமேனும் கொடுத்து உதவ வேண்டும். பக்கத்து வீட்டுக்காரன் மகிழ்ச்சியாக வாழ்ந்தால் தான் நாமும் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்ற எண்ணம் எல்லோருடைய உள்ளத்திலும் வளர வேண்டும் என்று எனக்குள்ளே எண்ணிக் கொண்டேன். அதற்குள் பஸ் வந்து சேர்ந்தது. பஸ்ஸில் ஏறிக் கொண்டேன்.

★ ★ ★ ★

இரவு மணி எட்டு. பஸ்ஸை விட்டு இறங்கி, வீட்டுக்குப் போவதற்காக நடந்து கொண்டிருந்தேன். லிடோ தியேட்டர் முன்னால் ஒரே கூட்டம். கவனித்தேன், தமிழ்ப் படம், அதுவும் புதுப் படம் என்பதை ஒரு கணத்தில் புரிந்து கொண்டேன். தின்ன சோறில்லை என்றாலும் படம் பார்க்க மட்டும் ஒரு சிலர் தவறுவதில்லை. கலை தனியொருவனின் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதாக இருக்க வேண்டும். மாறாக, மனிதர்களை அந்தகாரத்திற்கு இட்டுச் செல்லக் கூடாது. சரி, நமக்கு வேலையில்லாத இடத்தில் ஏன் நிற்க வேண்டும்' என்று எண்ணியவாறு நகர ஆரம்பித்தேன். தற்செயலாக என் கண்கள் டிக்கட் கொடுக்கும் இடத்தை முற்றுகையிட்டது. மறுகணம்...என் கண்கள் நிலைகுத்தி நின்றன! என் உடலில் ஓடும் ரத்தம் கொதித்தது 'சை! என்ன உலகம்!'–உலகத்து வெறுப்பையெல்லாம் ஒன்று திரட்டி கீழே துப்பினேன். ஏன் தெரியுமா? என்னிடம் பிச்சைக் கேட்டு வாங்கினானே, ஒரு பிச்சைக்காரன்–அவன் படம் பார்க்கப் போவதற்காக டிக்கட் வாங்கிக் கொண்டு நின்றான். அந்த இடத்திலே அவனைத் தரையில் போட்டு புரட்டி எடுக்க வேண்டும் என்று என் இதயம் கொதித்துக் குமுறியது. ஒருவாறு சினத்தை அடக்கிக் கொண்டு, அவனுக்குப் புத்தி புகட்ட வேண்டும் என்று நினைத்தவாறு டிக்கட் கொடுக்கும் இடத்தை நோக்கி நடந்தேன்.

டிக்கட் வாங்கிக் கொண்டு மகிழ்வோடு வெளியே வந்த அவன், தற்செயலாக என்னைப் பார்த்து விட்டான். அடுத்த கணம்...அவன் உடல் 'வெட வெட'யென்று ஆடத் தொடங்கியது. வியர்த்து விறுவிறுத்துப் போனான்.

அவனையறியாது அவன் கையிலிருந்த டிக்கட் தரையில் விழுந்தது.

'என்னை மன்னித்து விடுங்கள், சாமி! இனிமேல் ஒருநாளும் இப்படி செய்ய மாட்டேனுங்க!'—என் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு குய்யோ முறையோ என்று முறையிட்டான்.

'பரவாயில்லை' பா! டிக்கட்டை எடுத்துக் கொள். படம் பார். இன்றோடு இந்த இழிந்த தொழிலுக்குக் கும்பிடு போட்டு விட்டு உழைத்துச் சாப்பிடு. சோம்பேறியாக மாறி சமூகத்தை ஏமாற்றிப் பிழைக்காதே' என்று கூறி விட்டு, நகர்ந்தேன்.

படம் பார்க்க வந்து நின்று கொண்டிருந்த இருவரிடம் ஒரு பிச்சைக்காரன் பிச்சை கேட்டுக் கெஞ்சி நின்றான். அந்த இருவரும் பிச்சை கொடுக்காது அந்தப் பிச்சைக்காரனை விரட்டியடித்தனர். அந்த இருவரில் ஒருவன் மற்றொருவனிடம் சொன்னான்.

'இவர்களெல்லாம் வயிற்றுக்குப் பிச்சையெடுக்கவில்லை, அண்ணாச்சி! 'ஜா'லியாகக் காலங் கழிக்கப் பிச்சை எடுக்கிறார்கள். நம்மிடம் கை நீட்டிப் பிச்சை கேட்பது போல் பலரிடமும் பிச்சை எடுக்கிறார்கள். பின்னர், அந்த காசைக் கொண்டு மது அருந்துகிறார்கள். சூதாடுகிறார்கள். படம் பார்க்கிறார்கள். உடம்பை வளைக்காது, வியர்வை வெளியே சிந்தாது, சுலபமாக சம்பாதிக்கக் கற்றுக் கொண்டவர்கள். இவர்களெல்லாம் வாழத் தெரிந்தவர்களப்பா! வாழத் தெரிந்தவர்கள்!'

அவன் பேச்சை ஒப்புக் கொள்வது போல் தலையை ஆட்டிக் கொண்டு சிரித்த மற்றொருவன், 'ஆமாம், அண்ணாச்சி! நீங்க சொல்வதில் உண்மை இருக்கிறது. பிச்சை கேட்பவனுக்குப் பிச்சையிடக் கூடாது. பிச்சையிடுவதால் வீணே ஒருவனை நாம சோம்பேறியாக்குகிறோம். பிச்சை எடுத்துப் பழகியவன் ஒரு காலும் வேலை செய்ய முன் வரமாட்டான்,' என்றான் அடுத்தவனும்.

அவர்களது உரையாடலைக் கேட்டுக் கொண்டு நின்ற என் மனம் விழித்துக் கொண்டது. 'இதுவும் நமக்கு ஒரு அநுபவம் தான்'—ஏமாற்றி வயிறு வளர்க்கும் கூட்டத்தை நினைத்து குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த என் உள்ளத்திடம் கூறியவாறு வீட்டை நோக்கி நடந்தேன். ★

சிங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம் வாழ்த்துகிறது

"மனிதத் தன்மையில் படியும் தூசி துப்புக்களை ஊதிக் களைந்து அதன் வளர்ச்சிக்காகப் பாடு படுபவனே எழுத்தாளன்!"

கற்பனையாம் சர்க்கரையைக் கருத்துப் பாலில் கவினுறக் காய்ச்சி, பொற் கதை ஏட்டில் அற்புதமாய் வடித் தெடுத்த **புதுமைப்பித்தனை** தமிழ் கூறும் நல்லுலகிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் நன்கறிவர். எழுது கோலை ஏந்தி, தமிழர் சமுதாயத்தின் வாழ்க்கை நிலை உயர—தமிழ் மொழியும், பண்பாடும், கலர்ச்சாரமும் பீடுற பவனி வரும் பணிக்கு, எண்ணங்களை வடித்தெடுத்து, தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட சிறு கதை மன்னனும் புதுமைப்பித்தனின் நினைவு மலர் வெளியிட்டு, அதன் மூலம் கிடைக்கும் தொகையை, ஆதரவற்ற நிலையிலிருக்கும் அந்த ஏழை எழுத்தாளரின் குடும்பத்திற்குக் கொடுத்து, தமிழ் இலக்கியத்திற்கும், தமிழுக்கும் பாடுபடும் எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் புகழ்ந்து—பாராட்டுவதோடு மட்டும் நின்றிடாமல், பொருளுதவி செய்வதன் மூலம் இந்தக் காலத்தில் தமிழ் வளரப் பாடுபடுபவர்களையும், வருங்காலத்தில் தமிழ் வளர்க்கப் பாடுபடப் போகிறவர்களையும் நாம் போற்றத் தவற மாட்டோம் என்று உறுதி கூறும் நிலையில் முன்னோடும் பிள்ளைகளாக, **"புதுமைப்பித்தன் நினைவு மலர் குழுவினர்"** மேற்கொண்டுள்ள சீரிய முயற்சியை **"சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம்"** வெகுவாகப் பாராட்டுவதோடு, குழுவினர் எண்ணிய எண்ணமெல்லாம் திண்ணமுற நிறைவேற மன மகிழ்வோடு வாழ்த்துரைக்கிறது!"

வாழ்க புதுமைப்பித்தன் புகழ்! வளர்க அவர் பரம்பரை!!

கவிஞர் நிலை

வே. விவேகானந்தன்

நடுநிசி எங்கும் காரிருள் சூழ்ந்திருந்தது. ஆந்தைகள் அடிக்கடி அலறிக் கொண்டிருந்தன. வானத்தில் கரிய மேகங்கள் சூழ்ந்திருந்ததனுல் நேற்று உதயமாகியிருந்த இளம் பிறையும் இன்று தென்படவில்லை. வௌவால்கள் மரங்களில் ''பட...பட'' வென்னும் சத்தத்தை எழுப்பிக் கொண்டிருந்தன. ''ஙொய்...ஙொய்'' என்ற ஒரு வித வண்டுகளின் சத்தம் இடைவிடாமல் கேட்டுக் கொண்டேயிருந்தது. பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த சிற்ருறின் 'சலசல' வெனும் ஓசை ஓயாது ஒலித்துக்கொண்டிருந்தது. மழை வரப் போவதற்கு அறிகுறியாக தவளைகள் முறை வைத்தாற் போல் ''லொட...லொட'' என்று கத்த ஆரம்பித்து விட்டன.

மெதுவாக இடது பக்கம் திரும்பினேன். சுமார் ஒரு மைல் தூரத்திலிருந்த கோலாலம்பூர் நகரத்தில் போடப்பட்டிருந்த விளக்குகள் பார்ப்பதற்கு மிக அழகாகத் தோன்றின. எதுவும் தூரத்துப் பார்வையில் தானே அலாதி கவர்ச்சி? இக்காட்சியை எவ்வளவு நேரம் நின்று கொண்டு இரசித்தேனே தெரியாது.

வாடைக் காற்று சில்லென்று வீசியதால் குனிந்து வீட்டினுள் நுழைந்தேன். வீடு என்று சொல்வதைவிட அதைக் குடிசை என்று சொல்வதே பொருந்தும்: இருந்தாலும் ஒண்டிக்கட்டையான எனக்கு போதுமானதாகவே இருந்தது. அது மட்டுமல்ல ஊரிலிருந்தே ஒதுக்குப் புறத்தில் அமைந்திருந்த இவ்வீட்டில் எங்கும் கிடைக்காத ஓர் அமைதி கிட்டியது. ஆள் நடமாட்டமே குறைந்த இப்பிரதேசத்தில் ஏகாங்கியாக இருக்கவே என் மனம் விரும்பியது.

இக்குடிசைக்கு ஐந்து வெள்ளி தான் வாடகை என்ற போதிலும் வீட்டுக்கார சினர் அதைக்கூட என்னிடம் கேட்பதில்லை. ஏனென்றுல் குடிசைக்குப் பின் புறம் ஆற்றுக்கு அருகில் இருக்கும அவருடைய தோட்டத்திற்கு நான் காவலாளியாக இருக்கிறேனும்.

மினுமினுக் கென்று எரிந்து கொண்டிருந்த சிம்னி விளக்கைச் சற்று பெரிதாகத் தூண்டிவிட்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டபடி கீழே கிடந்த கிழிந்த கோரைப் பாயில் அமர்ந்தேன். முன்பாக சில நூல்களும் கடிதங்களும் சிதறிக்கிடந்தன. கடிதங்களை ஒவ்வொன்ருகப் பிரித்துப்பார்த்தேன். நான் பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்த சில கவிதைகள் திரும்பி வந்திருந்தன. ஆனுல், ஒரேயொரு பிரபல இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் மட்டும் என் கவிதையைப் பிரசுரித்திருப்பதாக எழுதியிருந்தார்.

அவசர அவசரமாக அவர் அனுப்பியிருந்த ''இலக்கியம்'' இதழைப் பிரித்துப் பார்த்தேன். முதற்பக்கத்தில் வழவழப்பான காகிதத்தில் என்னுடைய கவிதை வெளியாகி இருந்தது.

ஆனுல்......? எழுதியவரின் பெயர் என் பெயருக்குப் பதிலாக ஆசிரியரின் பெயர் அச்சடிக்கப்பட்டிருந்தது. எனக்கு வந்த ஆத்திரத்தில் பத்திரிகையை ஓங்கி விசிறியடித்தேன். ஒரு மூலையில் குவித்து வைக்கப்பட்டிருந்த பத்திரிகைகளுடன் இதுவும் சங்கமமாகியது. அந்த மூலையில் குவிந்து கிடப்பவைகள், என்னிடம் பணம் இருந்தபோது கொஞ்சகாலம் நான் நடத்திய பத்திரிகையின் விற்காத பிரதிகள்.

கைம்மாறு கருதாமல் இந்நாட்டில் இலக்கியப்பணி செய்யும் எழுத்தாளர்களின் நிலையை எண்ணிப் பார்த்ததும் நெஞ்சம் ஒருமுறை விம்மித் தணிந்தது. மூச்சு சற்று சூடாகவே வெளிவந்தது. எழுத்துத்துறையின் மீதே வெறுப்புத்தட்டியது. ஆனுல், சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் போன்ற மேதைகள் எல்லாம் எவ்வளவோ சிரமங்களை அனுபவித்திருக்கும்போது நாம் எம்மாத்திரம் என்று மனத்தைத் தேற்றிக்கொண்டேன்.

புதுமைப்பித்தன் மலருக்கு ஒரு கவிதை எழுதித் தருமாறு பினங்கு சிறுகதைப்பித்தன் அன்புக்கட்டளை பிறப்பித்திருந்தது அப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வந்தது. பேனுவை எடுத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். திடீரென்று விளக்கில் ஒளி மங்கியது. சோதித்துப்பார்த்தேன். விளக்கில் எண்ணெய்இல்லை. அருகில் கிடந்த புறநானூற்றை எடுத்து தலையணையாக வைத்துக்கொண்டு நிமிர்ந்துபடுத்தேன். இமைகள் தாமாகவே மூடிக்கொண்டன. ★

வானத்து அமரன்

பேராசிரியர் அ. சீனிவாசராகவன்

வீட்டுவாசலில் நின்று கொண்டிருந்தேன் வெளியிலே ஒரே வெயில். தெரு மனித நாட்டமே இல்லாமல் வெறிச் சோடிக் கிடந்தது, அது வரை எங்கேயோ பதுங்கி இருந்த ஆடிக்காற்று மேலத் தெரு மதில் முனையைச் சுற்றிப் பாய்ந்து வந்தது, தெருவோடு தாண்டவமாடிச் சென்றது. அவ்வளவுதான் புழுதிப் படலம் புறப்பட்டு வெளியை நிறைத்து, வெயிலை மறைத்துச் சுழன்றது. வீட்டிற்குள் பின் வாங்கத் தொடங்கிய நான், தெருக்கோடியில் காற்றோடும் புழுதியோடும் போராடிக் கொண்டு யாரோ ஒருவர் வருவதைப் பார்த்துச் சிறிது நின்றேன்.

ஒல்லியான உருவம். ஒடிந்து விழுந்து விடும் போல் இருந்தது. ஆனால் ஒருகையால் கண்ணைக் கசக்கிக்கொண்டு ஒருகையால் பறந்தோட முயலும் வேட்டியைப்பற்றிக் கொண்டு வந்த அந்த நிலையிலும் வந்த அவருடைய வேகமும் ஆத்திரமும் வெளிப்பட்டன. இதற்குள் என் கண்ணிலேயும் புழுதி புகுந்தது. "அட சனியனே" என்று முன்னமேயே பின் வாங்காத என்னை நானே நொந்து கொண்டு கண்ணைக் கசக்கியபடி உள்ளே திரும்பினேன்.

.........அவர்கள் தானே? என்றது ஒரு குரல். திரும்பினேன். அந்த ஒல்லியான மனிதர்தான் நின்றார் "ஆம். நான் தான், தாங்கள் யார் தெரியவில்லையே! என்றேன்.

"எப்படித் தெரியும் இந்தப் புழுதியிலே? கண்ணையோ திறக்க முடியவில்லையே? ....நேற்று நீங்கள் கூட்டத்தில் பேசியதைக் கேட்டேன் உங்களை நண்பராக்கிக் கொள்ள வந்திருக்கிறேன்" என்றார் அந்த அதிசய மனிதர் கண்ணைக் கசக்கிக் கொண்டே.

"அதற்குத்தான் அழுது கொண்டே வந்தீர்களா?" என்றேன் சிரித்துக் கொண்டே

"நீங்களுந்தான் அழுது கொண்டே இருக்கிறீர்கள். இந்தமண்ணின் வலிமையாரை விட்டது? ஆனால் ஒன்று சந்திக்கும பொழுது அழுதால் பிரியும் பொழுது சிரிக்கலாம் அல்லவா?" என்றார் அவர்.

இப்படித்தான் ஏற்பட்டது எனக்கும்" புதுமைப்பித்தனுக்கும் நட்பு.

இன்று அவர் போய் விட்டார். ஆனால், அவர் குறிப்பிட்ட சிரிப்பிற்கு எங்கே போவது? பழைய நினைவுகளும் சிதைவுற்ற எண்ணங்களும் சூழ்ந்த சோக மங்கலில் கண்ணையும் கருத்தையும் வேதனை உறுத்த நான் நிற்கிறேன். இந்த மண்ணின் வலிமை யாரைவிட்டது?

இன்று அந்தக் கவியுள்ளத்தின் ஓயாத பரபரப்பும் சலனமும் ஓய்ந்து விட்டது. எத்தனையோ ஆயிரம் வாசகர்கள் சிந்தனையைத் தாண்டி சிறுமையை விரட்டிய புரட்சிக் குரல் ஒடுங்கி விட்டது. "காலனும் கிழவியும்" என்ற அவர் கதையில் "உன்னாலே என் உசிரைத்தானே எடுத்துக்கிட்டு போவ முடியும்? இந்த உடலைக்கூட தூக்கிக்கிட்டு போவ திறமை இருக்கா? யோசிச்சுப் பாரு. உன்னாலே அழிக்க முடியுமா? அடியோடு இல்லாமெ ஆக்க முடியுமா? அது உன்னைப் படைச்ச கடவுளாலேயே முடியாது?" இதை உண்மையென்று நம்பத் துடிக்கிறது என் மனம் முடியவில்லை! எதைச் சொல்ல வேண்டாமென்று புதுமைப்பித்தன் எச்சரிக்கைசெய்தாரோ அதையும் சொல்லாமல் இருக்க முடியவில்லையே?

வானத்து அமரன் வந்தான் காண் வந்தது போல் போனான் காண்— என்று புலம்பாதீர்" என்று அவர் எழுதியும், "பிரியும் போது சிரிக்கலாம்" என்று அவர் சிரித்ததும் என் மனதில் அழுத்தமாக நிற்கின்றன. ஆனால், புலம்பாமல் இருக்கவும் சிரிக்கவும் "அந்த வானத்து அமரனால் தான் முடியும். நானோ அவர் வந்த வகையும், போன மாயமும் தெரியாமல் அவர் தந்த நட்பை எண்ணி எண்ணி ஏங்குகிறேன்.

சூறைக்காற்றிலே வந்தார். சாவென்னும் சூறையிலே மறைந்தார். என்னைச் சுற்றி துயரப் புழுதி சுழல்கிறது. "வானத்து அமரன் அவன், வந்தது போல் போனான்" என்று பேசுகிறேன்; இதனால் சூன்யம் நிரம்பவா போகிறது?

திட்டம் வெற்றி பெறட்டும்

எழுத்து என்னும் தோணியில் ஏறிவிட்டவர்களுக்கு, ஒரு சிலரைத் தவிர, அன்று முதல் இன்றுவரை 'வறுமை' என்ற பேரலை எதிர்ப்பாககவே உள்ளது. பணம் படைத்த ஒரு சிலர் தமிழின்பால் உள்ள தீராக் காதலால் எழுத்துலகிற்கு நுழைந்துவிடுகிறார்கள். பணப்பசை ஒட்டிக் கொண்டிருப்பதால், உடும்புப் பிடியைத் தளர்த்த வகையறியா வறுமை தூரவே நின்றுவிடுகிறது. பொழுது போக்கிற்கு எழுதுபவர்களுக்கு பாதகமில்லை. ஆனால். எழுத்தையே உயிராக மதிப்பவர்கள் பாடுதான், வறுமைப்பாடு. தன்னலங் கருதாது பிறர் நலத்திற்காக, சமுதாயத்திலே நடக்கும் சீர் கெட்ட செய்கைகளை பேனா முனையாலே தீட்டி தீயவரை திருந்த செய்ய பாடுபட்டவர்கள் ஏராளம்.

"உனக்கும் எனக்கும் இல்லேடி ஊருக்கு உபதேசம்" என்று கூறும் எத்தர்களின் வஞ்சக உள்ளங்களையும், சமுதாயத்தில் சீர்கெட்டலையும் சிறுத்தைகளின் குணங்களையும், வாழ்வில் நடக்கும் குறைவு — நிறைவுகளையும் தெள்ளிய நடையில் இனிமை பொங்க எடுத்தியம்பியவர் அமரர் புதுமைப்பித்தன். தாம் கண்ட கருத்து மக்கள் மனதில் நீங்காமல் இருக்க வேண்டும். அதனால் அவர்கள் பயனடைய வேண்டும் என்றும் விரும்பினார். அதனால் மக்களை ஈர்க்கும் வகையில் கேலியாகவும், கிண்டலாகவும் கருத்துக்களை தீட்டினார்.

உடனிருந்து கொல்லும் வியாதியைப் போல் நம்முடனிருந்தே இன்னல் பல புரியும் கோணல் புத்திக்காரர்களின் உள்ளக் கிடக்கையும், நற்பணிகளில் நடக்கும் நாச வேலைகளையும் உலகுக்கு நன்கு எடுத்துக் காட்டினார். பலருக்கு அறிவை ஊட்டினார். எழுத்தையே உயிரெனக் கொண்ட அமரர். தம் மனைவிக்கும் மகளுக்கும் என்ன பணமும் காசுமா வைத்துச் சென்றிருப்பார். மம்பர் நீக்கி மமதைப் போக்கி, மானிலத்தில் மாண்புறவாழ வழிகாட்டும் தீஞ்சுவை தமிழ் செல்வத்தைத்தான் வைத்துச் சென்றிருப்பார்.

மறைந்த மாமேதை புதுமைப் பித்தனைப் பற்றி பலர் இன்று எழுதுகிறார்கள், எழுத முற்பட்டுள்ளார்கள். அவர்கள் அமரரைப்போன்று நாட்டுக்குப் பயன் தரக் கூடிய கருத்துக்களையும், இலக்கியங்களில் உள்ள இனிய ரசத்தை சிறு கதை மூலம் தெளிய தெரியக் கூடிய வகையில் படைக்க வேண்டும். இதுவே அன்னார் பணிக்கும் பிரதி பணியாகும்.

பெற்றவளைவிட பேணியவளுக்கு பெருமை அதிகம் தானே, அதுபோன்று மலை நாட்டுதமிழர்களின்பெருமைக்குரிய விஷயம் என்னவெனில் பாரத மக்கள் பெருமைப் படுத்த மறந்துவிட்ட சிறுகதை மன்னரை "தமிழ் நேசன்" பெருமைப் படுத்துகிறது. அவர் கடைப்பிடித்த புது வழி முறைகளும், தமிழுக்கு செய்த அருஞ் சேவையும் அவரைப்போல் பலர் இன்று எழுதி வருவதையும் நேசன் பலருக்கு எடுத்தியம்புவது கண்டு மலை நாட்டுத் தமிழராகிய நாங்கள் பெருமைகொள்கிறோம். ஆசை மனைவியையும், அன்புப் புதல்வியையும் விட்டு மறைந்திட்டவரின் மேல் மலை நாட்டவர் கொண்ட அன்பும் ஆதரவும் என்றும் நிலைக்கவேண்டும்.

அன்னாரின் மனைவி மக்களின் துயர் துடைக்க மலையகத் தமிழர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியை என்ன வென்பேன். சிறுகதைப் பித்தனின் சீரிய முயற்சியால் சிறு குடும்பம் வாழ வழி வகுத்திட்டார். அவர் இட்ட திட்டத்தை அருந் தமிழர் யாம் காப்போம்.

ஜி. பெருமாள்

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க சிலாங்கூர் மாகாண காரியதரிசி.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பசி எடுக்காது. சித்தர்கள் அந்தப் பழத்தைச் சாப்பிட்டு விட்டு, பசித் தொந்தரவு இல்லாமல் யோக நிஷ்டையில் ஆழ்ந்து விடுவார்கள்.........

அழுகணிச் சித்தன் என்றால் அழுது கொண்டே இருந்தவன் என்று நினைத்து விடக் கூடாது. அவனுடைய யோகப் பயிற்சிகளில் எங்கோ பிசகு நேர்ந்து விட்டதால் கண்களில் கோளாறு ஏற்பட்டு, எந்த நேரமும் கண்ணீர் வடிந்து கொண்டேயிருந்தது. அதனால், அழுகணிச் சித்தன் என்று பெயர் வைத்து விட்டார்கள்.........

புதுமைப்பித்தன் கூறிய மேற்கண்ட இரு தகவல்களுக்கும் என்ன ஆதாரங்கள் என்பது இன்றுவரை தெரியவில்லை.

\+ \+ \+ \+ \+

எங்கள் குடும்பத்துக்கு பூர்வீகம் மருதூர் என்ற கிராமம். இப்போது போய்ப் பார்த்தால் எல்லாமே பாழாகிக் கொண்டு வருகின்றன. என்ன காரணம்?

—இப்படி ஒரு நாள் புதுமைப்பித்தன் கேட்டார். அவர் குறிப்பிட்ட மருதூர், திருநெல்வேலி ஜில்லாவில் எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

\+ \+ \+ \+ \+

தெரியாத விஷயங்களைப் பற்றி முற்றும் தெரிந்தவர் போல் மணிக்கணக்கில் விவாதித்து அதில் வெற்றியும் பெறக்கூடிய அபாரமான திறமை படைத்தவர் புதுமைப்பித்தன். அந்த விஷயம் முழுதும் அவருக்கு அத்துபடியாயிருக்கிறது என்றே பக்கத்தில் உள்ளவர்கள் நம்பி விடுவார்கள்.

ஒரு நாள் நான்காவது அளவு (Fourth Dimension) என்பதைப் பற்றி விவாதம்.

''அப்படி ஒரு அளவு இல்லா புதுமைப்பித்தன் என்ற ஒரு பிறவியே உருவாகியிருக்க முடியாது'' என்றார் புதுமைப்பித்தன். அது ஏதோ ஒரு ஆழமான தத்துவத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பது போல ஒலித்தது. அதன் பொருள் அவருக்கோ மற்றவர்களுக்கோ தெரியாவிட்டாலும், கேட்ட மாத்திரத்தில், உள்ளத்தைக் கவரக் கூடியதாக இருந்தது.

பிறகு வெகு நேரம் விவாதம் நடந்தது. முடிவில் நண்பர்கள் விடைபெற்றுப் போனார்கள். எல்லோரும் போன பிறகு, புதுமைப்பித்தன் சொன்னார்: ''இதைப் பற்றியெல்லாம் எனக்கும் எதுவுமே தெரியாது. ஆனால் அவர்கள் நான் இதில் மகா நிபுணன் என்று நம்பிக் கொண்டு போகிறார்கள்!''

இவ்வாறு சொல்லி விட்டு உரக்கச் சிரித்தார். ☆

தமிழ், இங்கிலீஷ், மலாய் புத்தகங்களும், தினசரி, வார, மாத இதழ்களும், மருந்து சாமான்களும் கிடைக்கும்.

மாத இதழான
''நண்பன்''
பினங்கு ஏஜண்ட்

முஸ்தபா புக் ஸ்டால்
178, டத்தோ கிராமட் ரோடு,
பினங்கு.

எங்களிடம் பேசும் படம் சினிமா கதை புத்தகங்களும், இந்தியா நாவல்களும், தமிழ் ஸ்கூல் புத்தகங்களும், தினசரி நியூஸ் பேப்பர்களும், மற்றும் ஸ்டேஷனரி சாமான்களும் கிடைக்கும்.

எ. எஸ். அப்துல் ரஹ்மான்

1, ஜாலான் லங்கார், அலோர்ஸ்டார், கிட்டா.

பாராட்டுரை

தென்னகத்து எழுத்து வேந்தன் தீந்தமிழ் கருத்து பொழியும் சிறுகதை மன்னன் தன்னலம் கருதா கலைத்தொண்டன் தரணியோர் போற்றும் சிந்தனை சிற்பி!

மலாயாவில் முதன் முறையாக இத்தகைய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ள பினாங்கு திரு. சிறுகதைப்பித்தன் அவர்களுக்கும். கோலாலம்பூர் திரு. எம். துரைராஜ் அவர்களுக்கும் மலாயா தமிழர்கள் சார்பாக எனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறேன். மலர் வெளியீட்டின் மூலம் நிதி திரட்டிக்கொடுக்க முன்வந்துள்ள நண்பர்கள் இருவருக்கும் ஆதரவு காட்டவேண்டியது எல்லாத் தமிழர்களுடையவும் கடமையாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். மலையரசு (மாரிமுத்து)

கௌ. செயலாளன்,

அகில மலாயா தமிழர் சங்கம்

பினாங்கு கிளை

மெர்டேகா ஸ்டோர்

எங்களிடம் எல்லாவிதமான டின் புரொவிஷன்களும், பேட்டண்ட் மருந்துகளும், பிஸ்கட் வகையருக்களும், ஆங்கிலப் புத்தகங்களும் மற்றும் எல்லாவிதமான சாமான்களும் குறைந்த விலையில் கிடைக்கும்.

MERDEKA STORES

GROCERS

No. 20-5, Pahang Road

KUALA LUMPUR

Phone: 86891

பள்ளிக்கூடங்களுக்கு

எங்கள் புதிய வெளியீடுகள்

சுதந்திர மலாயா தமிழ் வாசகம் (வகுப்பு 1 முதல் 6 வரை)
நவீனமுறை தமிழ் அப்பியாசங்கள் (வகுப்பு 3 முதல் 6 வரை)
சரித்திரக் கதைகள் (வகுப்பு 4 முதல் 6 வரை)
மலாயா நவீன கணிதம் (வகுப்பு 2 முதல் 6 வரை)
இயற்கை பொருட் பாடம் (வகுப்பு 3 முதல் 6 வரை)
இயற்கை பாடமும் சுகாதாரமும் (ஆறும் வகுப்புக்குரியது)
விவேகானந்தா அச்சுக்காப்பி நோட்டுப் புத்தகங்கள் (பாகம் 1 & 11)
சுகாதார குறிப்புகள்
கோலாலம்பூர் சரித்திரம்
நீதி நூற்கொத்து
மாணவர்களின் பயிற்சிக்கலை தேர்ச்சி அறிக்கை

மேலும் எங்கள் புதிய வெளியீடுகளை எதிர்பாருங்கள்

விவேகானந்தா புத்தகசாலை

50, பத்து ரோடு, கோலாலம்பூர்

சரித்திர ஏட்டில் சான்றோனாகட்டும்

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை
-என்பது வள்ளுவம்

இல்லறத்தார் ஓம்பும் நெறிகளில் தலையாயது தம் முன்னோர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செய்வதாகும்.

இறந்தவர்களுக்கு ஞாபகச் சின்னம் எழுப்புவதும், அவர்கள் பெயரால் பிரார்த்தனைகள் நடத்துவதும் இச்சீரிய கொள்கையின் அடிப்படையே.

எனவே தமிழே தம் உயிர் எனப் போற்றும் தமிழர், மறந்துவிட்ட சிறு கதை மன்னன் புதுமைப்பித்தனுக்கு; சிறப்புச் செய்யும் முகத்தான் சிலர் முயன்று நினைவு மலர் வெளியிடுவது, தென்புலத்தாருக்காற்றும் சீரிய பணியேயாகும்.

ஆன்றவிந்து அடங்கிய தமிழ் எழுத்தாளருக்கு நாம் செய்யும் அஞ்சலி ஈண்டு அருந்தமிழ்ப்பணியை அறப் பணியாகக் கொண்டொழுகும் எழுத் தாளருக்குப் பேருக்கம் அளிக்கும்.

தாயை இழந்த சேயைப்போல், புரவலர் இறந்த காலை நைந்து புலம்பிய பைந்தமிழ்ப் புலவர்களும, உறுபசியிலும் ஓவாப்பிணியிலும உழன்று ஒடுங்கிய புதுமைப்பித்தனும் சரித்திர ஏடுகளில் காணும சான்றோராகவே மிளிரட்டும்.

வாழ்க புதுமைப்பித்தன் நாமம்.

கே. கே. டி. முகம்மது இபுராகிம்

தலைவர், வட மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கம், பினாங்கு.

31ம் பக்கத்தில்

'பெருமூச்சு தீரவேண்டும்'

என்ற அன்புச் செய்தியைத் தந்தவர் செனட்டர் திரு எஸ். பி. எஸ். நாதன்.

இன்று புதுமைப் பித்தன் குடும்ப நல் வாழ்வுக்காக தாங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் மாபெரும் முயற்சியைக் கண்டு பெருமிதம் அடைகிறேன். உலகில் சிறந்த சிற்பியாக மேதையாக வாழ்ந்த புதுமைப் பித்தன் மறைந்துவிட்டாலும் அவர் தீட்டிய காவியங்களும் எழுதிய அறிவுரைகளும் அழியாச் சின்னமாக மக்கள் மனதில் நிலைகொண்டுவிட்டன. அப்படிப்பட்ட அறநெறி மேதையின் நினைவாக வெளியாகும மலரை ஒவ்வொருவரும் வாங்கி அதன் மூலம் வரும வருவாயை சேர்த்து புதுமைப் பித்தனின் குடும்பத்திற்கு நாம் இனமாக கொடுத்ததாக இல்லாமல் அவர் பெயரால் வெளிவந்திருக்கும் இந்த மலரின் பேரால் கொடுத்து பித்தனின் குடும்பத்தை ஊக்குவிக்க நாம் ஒவ்வொருவரும கடமைப் பட்டுள்ளோம். இதற்காக சிறு கதைப்பித்தன் எடுத்துக்கொண்ட முயற்சியை மனமாரப் பாராட்டுகிறேன். புதுமைபித்தனின் பிள்ளைகளும் குடும்பமும் சீரும் சிறப்பும் பெற்று நீண்ட நாள் வாழவும் வளரவும் என் மனப் பூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கே. ராமநாதன்

துணைத்தலைவர், பெந்தோங் இந்தியர் சங்கம்

The Federal Bakery

No. 39-41 AMPANG ROAD, KUALA LUMPUR.

மலாயாவிலேயே முதல்தரமான முறையில்
எல்லாவிதமான ரொட்டிவகைகளும், கேக்குவகைகளும்
நவீன சாதனங்களைக்கொண்டு தயாரிக்கப்படுகிறது.

உங்களுடைய எல்லா தேவைகளுக்கும்
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.



பெடரல் பேக்கரி

நெ. 39-41, அம்பாங் ரோடு, கோலாலம்பூர் போன்: 84052

தயாரிக்குமிடம்:

நெ. 96. சுங்கைபீசி ரோடு,
கோலாலம்பூர் போன்: 79643